மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

பிப்ரவரி-2024 இதழ்-02 தை-மாசி



வெளியீடு

மண்ணும் மக்களும் – பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

ஆற்றுப்படை வெளியீடு

(2024 – பிப்ரவரி – இதழ் - 02)

பதிப்புரிமை

ஆக்கம்

வே. பார்த்திபன்

தொகுப்பு

பா. பிரபாகரன்

அ.சி. நடராஜன்

ஆற்றுப்படை குழு

தொடர்புக்கு - 97900 76772 / 90255 16415

பொருளடக்கம்

பொருளடக்கம்

ஆலக்கிராமத்தாரும், பிள்ளையார் பட்டியாரும்!





மருத்துவர் . மு. சுரேந்திரன்
நாளமில்லாச் சுரப்பியியல் நிபுணர்
கோவை,
வரலாறு மற்றும்
கோயில்கட்டிடக்கலை ஆர்வலர்

காணாபத்யம் எனும் விநாயகர் முதன்மைக் கடவுள் வழிபாடு மேற்கு கடற்கரை நிலப் பகுதியிலேயே உருவாகி இன்றளவும் தொடர்ந்து வருகிறது. இம்மரபு வைதீகத்திற்கும் முந்தியது.

பிற்காலத்திய புராணங்கள், கணபதியானவர் கையில் கரும்பு அல்லது கதிர் வைத்திருப்பதாக அவரின் தோற்றத்தைப் பதிவு செய்கின்றன. அதன்படியே ஆலக்கிராமத்தார் சிற்ப அமைதியும் எடுக்கப்பட்டுள்ளது.

ஆற்றுப்படையின் மின்னிதழ் தொடக்கத்திற்கான வாழ்த்துகளுடன், நம் மரபின்படி பிள்ளையாரிலிருந்தே அவர் ஆசிகளுடன் தொடரலாம் என்ற எண்ணத்தோடு எழுதப்பட்ட கட்டுரையே இது.

தமிழகத்தில் காலத்தால் முந்தியவையாக நமக்குக் கிடைத்துள்ள இரண்டு பிள்ளையார் சிற்பங்கள் பிள்ளையார் பட்டி கற்பகப் பிள்ளையாரும், ஆலக்கிராமத்து எமதண்டீச்சுரத்துப் பிள்ளையாரும் ஆவர்.

கல்வெட்டுகளின் அமைதியில் காலம் கணிக்கப் பட்டுள்ள இவ்விருவரிலும் காலத்தால் முந்தியவர் யார்! என்பதை அறிவதில் வரலாற்று ஆர்வலர்களிடையே எப்போதும் ஆர்வம் உண்டு.

“இக்கட்டுரையின் நோக்கமென்பது, இவ்விருவர் சிற்ப அமைதிகளுக்குமிடையே நாம் காணும் பல வேறுபாடுகளின் அடிப்படையில், பிள்ளையார் வழிபாட்டின் பூர்வீகத்தை அறிய முயல்வதே ஆகும்”.

சிறிய குன்று ஒன்றின் சரிவில் சிவபெருமானுக்கு எடுக்கப் பட்ட குடைவரையில் வடக்கு நோக்கிய கோட்டத்தில் பேரளவு சிற்பமாக வடிக்கப் பட்டவர் பிள்ளையார் பட்டி கற்பக விநாயகர். பிற்காலப் பாண்டியர் கல்வெட்டுகளில் தேசிவிநாயகப் பிள்ளையாராக குறிக்கப்படுகிறார். கற்பகப் பிள்ளையார், மலைப் பாறையில் நன்கு அகழ்ந்து பெருமளவு தனிச் சிற்பமாகத் தோன்றுமளவு வடித்து எடுக்கப் பட்டுள்ளார். இரண்டு கரங்களுடன் சம்மணம் போட்டு அமர்ந்த கோலத்திலும், சடை மகுடத்தில் பூரிமத்துடன், வலது கரத்தில் மோதகமும் (குருக்கள் இதைச் சிவலிங்கம் என்கிறார்) இடது கரம் கடியவலம்பிதமாகவும் கொண்டுள்ளார். கைகளில் காப்புகள் கொண்ட இவரின் தும்பிக்கை வலம்புரியாகவும் உடைந்த இடது தந்தம் உள்ளது. வயிற்றில் நாகபந்தம் அணிந்துள்ளார்.

இங்கே கவனிக்க வேண்டிய அம்சம், இவருக்கு யக்ஞோபவீதம் அணிவிக்கப்படவில்லை என்பதே!

ஆலக்கிராமத்துப் பிள்ளையார், ஓர் பலகைக் கல்லில் ஆழம் அதிகமின்றி அர்த்தசித்திரமாக எழுதப் பட்டுள்ளார். இவர் கரண்ட மகுடம் அணிந்து வலது கையில் தானியக் கதிர் அல்லது கரும்பு ஏந்தி இடது கரம் இடுப்பருகில் தந்தம் பிடித்துள்ளார்.இவரது தும்பிக்கை இடம்புரியாக கொண்டு சம்மணம் போட்டு அமர்ந்துள்ளார். இவர் யக்ஞோபவீதம் அணிந்துள்ளது கவனிக்கத்தக்கது. இடுப்பில் நாகபந்தம் அணிந்திருப்பதாகத் தெரியவில்லை. இருவருமே சிவன் கோயிலின் கோட்டத் தெய்வமாக அமர்ந்துள்ள நிலையில் உருவ அமைதியிலும் செதுக்கு நேர்த்தியிலும் பெருமளவு வேறுபாடு காணப்படுகின்றது. வைதீக கடவுளர்கள் பூணூல் இல்லாது காட்டப்படுவது வழக்கமில்லை.

பிள்ளையார்பட்டியார் வைதீக மயமாக்கலுக்கு உட்படாத ஓர் மரபிலிருந்து வந்தவர் என்றும் ஆலக்கிராமத்தார் வைதீகமயமாக்கப்பட்டவர் என்றும் கருத வாய்ப்புள்ளது. மேலும், வேத காலத்திற்கு முன்பிருந்தே இந்தியப் பழங்குடி மரபில் பிள்ளையார் வழிபாடு இந்ததென்பதும். வேதங்களிலும் சிந்துவெளி அகழ்வாய்வுகளிலும் அவர் அறியப் படவில்லை என்பதும் இங்கே கருத தக்கது.

கற்பகப் பிள்ளையாரின் வலது கரத்தில் வைத்துள்ளது கோயிலார் கூறுவது போல் சிவலிங்கம் எனில், இவர் கொண்கானப் பகுதியில் பழங்காலத்தில் நன்கு வளர்ச்சியடைந்து இருந்த வணிகத் தொடர்பு மூலம் இங்கே அறிமுகமானவர் என்று உணரலாம்.கோகர்ணம் மகாபலேஸ்வர் கோயில் தொன்ம வரலாற்றில் விநாயகர் சிவலிங்கத்தை இராவணனிடமிருந்து பெற்றுத் தன் கையில் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகிறது.

“காணாபத்யம் எனும் விநாயகர் முதன்மைக் கடவுள் வழிபாடு மேற்கு கடற்கரை நிலப் பகுதியிலேயே உருவாகி இன்றளவும் தொடர்ந்து வருகிறது. இம்மரபு வைதீகத்திற்கும் முந்தியது.”


பிற்காலத்திய புராணங்கள், கணபதியானவர் கையில் கரும்பு அல்லது கதிர் வைத்திருப்பதாக அவரின் தோற்றத்தைப் பதிவு செய்கின்றன. அதன்படியே ஆலக்கிராமத்தார் சிற்ப அமைதியும் எடுக்கப் பட்டுள்ளது.

மேற்கொடுத்துள்ள கருதுகோள்கள் மூலமாக இவ்விரு பழமையான விநாயகர் இருவரின் பூர்வீகமும் வெவ்வேறாக இருப்பதையும், பிற் காலத்தில் வேதமறுப்புக் கடவுளான சிவன் எவ்வாறு முழுமையாக வைதீகமயமாக்கப்பட்டாரோ அதேவழியில் விநாயகரும் வைதீகமயமாக்கப்பட்டார் என்பதை இந்த ஒப்பாய்வுகள் மூலம் நாம் அறியலாம்.

எழுத்தமைதியின் அடிப்படையில் ஆலக்கிராமத்து எழுத்துக்கள் இறுதிக் காலகட்டத்து தமிழ் பிராமி (தமிழி) எழுத்துகளாகவும், பிள்ளையார்பட்டி எழுத்துகள் முதல்நிலை வட்டெழுத்துகளாகவும் உள்ளன. பூலாங்குறிச்சி எழுத்துகளுக்கும் பிள்ளையார்பட்டி எழுத்துகளுக்கும் பேரளவில் வேறுபாடில்லை. சற்றேறக்குறைய சமகாலத்தைச் சேர்ந்தவையே.

எனவே, இவ்விரு மூத்த பிள்ளையார்களும் ஒரே காலகட்டத்தைச் சார்ந்தவர்களாக, அதேநேரத்தில் வெவ்வேறு தத்துவ மரபுகளிலிருந்து வந்தவர்கள் என அறியலாம்.

<u>பூலாங்குறிச்சி கல்வெட்டு</u>





பிள்ளையார்பட்டி விநாயகர்



ஆலக்கிராமம் விநாயகர்

பிள்ளையார்பட்டி கல்வெட்டு



ஏக்காட்டூருக்

கோன் பெருந்தசன்



தொண்டை மண்டலத்தில் பாண்டியர் அளித்த கொடைகள்



முனைவர் ப. காளீஸ்வரன்,
இளநிலை அறிவியல் அலுவலர்,
தடய அறிவியல் துறை,
மயிலாப்பூர்,
சென்னை.

சோழமண்டலமான தொண்டை மண்டலத்து திருக்கோவில்களான திருமுல்லைவாயில், தாமல், திருப்புட்குழி, திருவக்கரை, தென்னேரி, ஆந்திர மாநில நெல்லூர், திருக்கழுகுன்றம், சிறுதாவூர், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோவில், திருவல்லிக்கேணி, செய்யாறு, திருக்கச்சூர், பல்லாவரம், திருஊரகம், உத்திரமேரூர், திருப்பாற்கடல், மணிமங்கலம், காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் திருக்கோவில், சிங்காவரம், பெருநகர், ஆற்றுர், பாலூர், திருநீர்மலை ஆகிய பகுதிகளில் எல்லாம் காணப்படுகின்றன. மதுரையில் இருந்து பல மைல் தூரத்தில் இருக்கக்கூடிய ஜெயங்கொண்ட சோழமண்டலத்து கோவில்களிலும் பூசைகள் குறைவற நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த பாண்டியர்கள் நிச்சயம் போற்றத்தக்கவர்கள்.

சங்கம் தொட்டு தமிழை வளர்த்த பாண்டிய அரசு விஜயாலயச் சோழரின் எழுச்சிக்குப் பிறகு ஒரு குறிப்பிட்ட காலம் புகழ் மங்கியே இருந்தது. கிபி 12ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏற்பட்ட இவர்களது மறுமலர்ச்சி இரண்டு நூற்றாண்டுகள் வரை இவர்களை புகழ்பெற்று விளங்கச் செய்தது. முதலாம் குலோத்துங்கன் படையெடுப்பில் நிகழ்ந்த அழிவிற்குப் பதிலாக முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்றார். இவரின் காலத்திற்குப் பிறகு ஏறத்தாழ பாண்டியர்கள் கன்னியாகுமரி முதல் கோதாவரி வரை பரந்த நிலப்பரப்பை ஆட்சி செய்து கொண்டிருந்தனர்.

இவர்கள் ஆட்சிக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் சமய எழுச்சியின் பொருட்டு ஆழ்வார்களும், நாயன்மார்களும் பல திருத்தலங்களுக்கு தமிழகமெங்கும் நேரில் சென்று இறைவனை வழிபட்டு தத்தம் சமயத்தை வளர்த்திருந்தனர். அது மூவேந்தரின் ஆட்சியிலும் எதிரொலித்தது. முதலாம் இராஜராஜ சோழர் தில்லையில் திருமுறைகளை மீட்டு, எல்லா திருத்தலங்களிலும் பாடச் செய்தார். அதேபோல திவ்ய பிரபந்தங்களும் சேகரிக்கப்பட்டு திருத்தலங்களில் பாடப் பெற்றன.

திருமுறைகள் பாடப் பெற்றது தொடர்பான செய்திகள் திருவாய்மூர், சிவபுரம், திருவாமாத்தூர் ஆகிய திருத்தலங்களில் எல்லாம் நமக்கு கிடைக்கின்றன. பாடல்கள், பதிகங்கள் பெற்ற கோவில்கள் மட்டும் இன்றி தமிழகத்தில் எண்ணற்ற கோயில்கள் உள்ளன. தேவாரப் பாடல்கள் பல அழிந்து போயின என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுவதில் இருந்து பல பழைய திருத்தலங்களுக்கான பாடல்கள் கிடைக்காமலும் போயிருக்கலாம் என்று யூகிக்க முடிகிறது.

தமிழகத்தை ஆட்சி செய்த மன்னர்கள் பல புதிய திருக்கோயில்களை எழுப்பினர். சமயக்குரவர்கள் காலத்திலே செங்கல் கட்டடங்களாகவும், மரத்தாலும் இருந்த பல கோயில்கள் கற்றளிகளாக மாற்றப்பட்டன. கற்றளிகளாக மாற்றப்பட்ட பல திருக்கோவில்களிலும் மன்னர்கள் தாங்கள் செய்த திருப்ப பணியினை கல்வெட்டாக எழுதினர். அப்படி எழுதப்பட்ட ஆவணங்களில் இருந்து நம்முடைய வரலாறு மீட்டெடுக்கப்பட்டு கொண்டிருக்கின்றது.

2023ஆம் ஆண்டு சீர்காழி திருத்தலத்தில் தேவாரம் எழுதப்பெற்ற செப்பு பட்டயங்கள் கிடைத்தன. இவை மட்டுமின்றி ஏராளமான தொல்லியல் ஆய்வாளர்கள் பல இடங்களிலும் தேடி இதுவரை வெளிக்கொணரப்படாத பல கல்வெட்டுச் செய்திகளை வெளிக்கொணருகின்றனர். தமிழகம் முழுவதும் சில மன்னர்களுடைய ஆட்சிக்காலத்தில் ஒருகுடையின் கீழ் இருந்தது. ஒவ்வொரு காலத்திலும் ஒவ்வொரு மன்னர் பரம்பரையிடம் நிலப்பரப்புகள் கைவசம் மாறிமாறியும் இருந்து வந்துள்ளது.

பாண்டியர்கள் ஆட்சி செய்த பகுதியில் எழுப்பப்பட்ட கோயில்கள் எல்லாம் அடுத்தடுத்து சுற்றுகள் எழுப்பப்பட்டு நிறைய கோபுரங்கள் எழுப்பப் பெற்று பெரிய கோயில்களாக மாற்றம் பெற்றன. சோழர்கள் ஆட்சி செய்த நிலப்பரப்பில் காவிரிக் கரையெங்கும், காவிரியின் கிளை நதி பாயும் கரையெங்கும் சிவாலயங்கள் எழுப்பப்பெற்றன. அவர்கள் அன்று எழுப்பிய சிவாலயம் இன்றும் கூட ஒரே ஒரு திருச்சுற்றை மட்டும் கொண்டு சோழ தேசத்தில் இருப்பதை நாம் காண்கிறோம். மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது என்பதே வாக்கு. பல திருக்கோயில்கள் தேவாரப் பாடல்கள் பெற்று இன்றும் நம் கண் முன்னே காட்சியளிக்கின்றன.

சோழர்கள் தங்களுடைய ஆட்சிப் பொறுப்பில் இருந்த கோயில்களுக்கு பல்வேறு நிவந்தங்கள் வழங்கி அச்செய்திகளைக் கல்வெட்டாக அனைத்து திருக்கோவில்களிலும் அமைத்து, இன்றுவரை நாம் படித்துக் கொண்டிருக்கின்ற காலத்தால் அழியாத

செல்வமாக்கிச் சென்றுள்ளனர். சோழ தேசத்திலும், ஜெயங்கொண்ட சோழமண்டலம் எனும் தொண்டை மண்டலத்திலும் ஒவ்வொரு திருக்கோயில்களிலும் சோழர்களுடைய கல்வெட்டுக்கள் ஏராளமாகக காணக் கிடைக்கின்றன.

சோழர்களுடைய ஆட்சிக்குப் பிறகு இப்பகுதி அனைத்தையும் ஒரு கொடியின் கீழ் கொண்டு வந்த பாண்டியர்கள் தங்கள் பங்கிற்க்கும் திருக்கோவில்களுக்கு ஏராளமான திருப்பணிகளை செய்துள்ளனர். எப்படி பாண்டியர்களுடைய ஆட்சிப் பரப்பிலிருந்த பல திருக்கோவில்களில் சோழர்களுடைய கல்வெட்டுகள் குறைவாக காணப்படுகின்றனவோ, அதுபோலவே சோழர்களின் ஆட்சி பகுதியில் இருந்த பல திருக்கோவில்களில் பாண்டியர்களுடைய கல்வெட்டுகளும் குறைவாகவே உள்ளன. இருப்பினும் யார் ஆட்சிக்கு வந்தாலும், எந்த அரசு ஆட்சிக்கு வந்தாலும் ஆலயங்களுக்கு கொடுக்கக்கூடிய நிவந்தங்களில் பாதிப்பு ஏற்படக்கூடாது என்பதில் அனைத்து மன்னர்களும் கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர் என்பதே இத்தகைய கல்வெட்டுகள் நமக்கு காட்டுகின்றன.

பாண்டியர்களுடைய எழுச்சிக்கு பிறகு சோழர்கள் பெரிய நிலப்பரப்பை தங்கள் கீழ் கொண்டுள்ள ஆட்சியில் இல்லை என்றாலும் சோழர்கள் கொடுத்த நிவந்தங்களும், கொடையும் தடையின்றி செயல்பட வேண்டும் என்று பாண்டிய மன்னர்கள் கல்வெட்டுகள் மூலம் உறுதி செய்துள்ளனர். இது தொடர்பான கல்வெட்டுகளை செய்யாறு, மாடம்பாக்கம் திருத்தலத்தில் காணலாம்.

சோழர்கள் தஞ்சாவூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தாலும், அவர்களுடைய ஆட்சிப் பரப்பும் கோதாவரிக்கரை வரை விரிந்திருந்தது. பாண்டியர்கள் சோழ தேசத்தை கைப்பற்றிய பிறகு ஜெயங்கொண்ட சோழமண்டலம் எனும் தொண்டை மண்டலத்திலும் பல திருப்பணிகளை கோவில்களுக்குச் செய்து கோவில்களுக்கு அளிக்கப்பட வேண்டிய கொடைகளை எந்தவித தடையும் இன்றி நடைபெற வேண்டும் என்றும் ஆணை பிறப்பித்தனர். இன்றைய ஆந்திர மாநிலத்தின் நெல்லூர், சித்தூர் பகுதிகளையும் தமிழகத்தின் வேலூர், ராணிப்பேட்டை, சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், கள்ளக்குறிச்சி மற்றும் விழுப்புரம், திருவண்ணாமலையின் சில பகுதிகளை உள்ளடக்கி ஜெயங்கொண்ட சோழமண்டலம் எனும் தொண்டை மண்டலம் 24 கோட்டங்களை அன்று கொண்டிருந்தது. பாண்டியர்களின் கல்வெட்டுக்கள் ஜெயங்கொண்ட சோழமண்டலமான தொண்டை மண்டலத்து திருக்கோவில்களான திருமுல்லைவாயில், தாமல், திருப்புட்குழி, திருவக்கரை, தென்னேரி, ஆந்திர மாநில நெல்லூர், திருக்கழுகுன்றம், சிறுதாவூர், மயிலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோவில், திருவல்லிக்கேணி, செய்யாறு, திருக்கச்சூர், பல்லாவரம், திருஊரகம், உத்திரமேரூர், திருப்பாற்கடல், மணிமங்கலம், காஞ்சிபுரம் வரதராஜ பெருமாள் திருக்கோவில், சிங்காவரம், பெருநகர், ஆற்றுர், பாலூர், திருநீர்மலை ஆகிய பகுதிகளில் எல்லாம் காணப்படுகின்றன. மதுரையில் இருந்து பல மைல் தூரத்தில் இருக்கக்கூடிய ஜெயங்கொண்ட சோழமண்டலத்து கோவில்களிலும் பூசைகள் குறைவற நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்த பாண்டியர்கள் நிச்சயம் போற்றத்தக்கவர்கள்.

அவ்வகையிலேயே சில உதாரணங்களை இக்கட்டுரையிலே காண்போம். திருமங்கை ஆழ்வாரால் பாடல் பெற்று, சென்னை பல்லாவரத்திற்கு அருகிலே இருக்கக்கூடிய ஊர் திருநீர்மலை. இந்த திருநீர்மலையின் அடிவாரத்தில் நீர் வண்ணர் மற்றும் ராமர் சன்னதியும், மலைமேல் நரசிம்மர், ரங்கநாதர் சன்னதியும், உலகளந்த பெருமாள் சன்னதியும் உள்ளன. மலை அடிவாரத்தில் இருக்கக்கூடிய நீர் வண்ணர் கோயிலில் ராமர் சன்னதியில் மாறவர்மன் குலசேகர பாண்டியரின் 37-வது ஆட்சி ஆண்டு கல்வெட்டு

ஒன்று உள்ளது. இதன் வரலாற்று ஆண்டு கிபி 1304 ஆகும். பஞ்சநதிவாணன் திருவேகம்பன் என்கிற நீலகங்கன் என்பவர் பங்குனி மாதம் அஸ்த நட்சத்திரத்தில் பிறந்திருக்கிறார். அவர் பிறந்தநாளன்று புலியூர் கோட்டத்து குலோத்துங்க சோழ வளநாட்டு சுரத்தூர் நாட்டு பம்மலில் இருக்கக்கூடிய பம்மனக்க நாயனாருக்கு, திருநாள் படிக்காக குமாரகோபால நல்லூர் என்று தன் பெயரால் ஒரு ஊரினை பெயரிட்டு தானமாக வழங்குகிறார்.

சுந்தரபாண்டிய தேவரின் 16வது ஆட்சி ஆண்டிலே காணப்படும் ஒரு கல்வெட்டு. பம்மனக்க நாயனார் கோவிலுக்கு பம்மல் ஊரில் இருக்கும் வியாபாரி குன்றமுடியான் மெய்ஞான வித்தகன் திருவெண்காடுடையான் என்பவர் வழிபாட்டிற்காகவும், பங்குனி, வைகாசி ஆகிய திரு நாட்களில் வழிபாட்டு செலவுக்காகவும் தானம் வழங்குகிறார். இக்கல்வெட்டில் திருவிழாவுக்கு தேவையான அனைத்து பொருட்கள் பற்றிய தகவல்கள் காணப்படுகிறது. இருப்பினும் இக்கல்வெட்டு முற்றுப்பெறாமல் உள்ளது. அரிசி துணி பதக்கும், கறியமுதுக்கு வாழைக்காய் ஒன்பதும், வழுதலைக்காய் ஐம்பதும், தேங்காய் ஒன்றும், வாழைப்பழம் பத்தும், கருப்புக்கட்டி வட்டு இருபது, மிளகு அமுது உழக்கும், உப்பு அமுது நாழியும், தயிர்அமுது நாழி, நெய் அமுது, விறகுக் கட்டு ஒன்று, திருச்செங்கழுநீர் திருமாலை, திருநெற்றி மாலை ஒன்று, திருவாக்கழல் ஒன்று, திருச்சடாபுரத்துக்கு வெள்ளைத்தொடை, நாச்சியாருக்கு வெள்ளைத் திருமாலை, திரு அபிஷேகத்துக்கு பூ, திருமேற்பூச்சு ஆகியவற்றிற்கு பத்து கழஞ்சும், கற்பூரம் அரைக்கழஞ்சும், அடைக்காயமுது, பாக்கு இருபதும், வெற்றிலை நாற்பதும், ஸ்ரீபாதம் தாங்குபவர்களுக்கு பணம் இரண்டும் என்று செல்லும் இக்கல்வெட்டு இத்துடன் முழுமை பெறாமல் உள்ளது.

செங்கல்பட்டு மாவட்டம் ஆற்றூரில் மாறவர்மன் திரிபுவன வீரபாண்டிய தேவரின் 12ஆவது ஆட்சியாண்டு கல்வெட்டு ஒன்று, அவ்வூர் முத்தீஸ்வரர் திருக்கோயிலில் காணப்படுகிறது. ஜெயங்கொண்ட சோழமண்டலத்து ஊற்றுக்காட்டு கோட்டத்தில் ஆற்றூர் நாட்டு ஆற்றுரான இராசராச நல்லூர் எனும் ஊரில் எழுந்தருளியிருக்க கூடிய இறைவனுடைய பெயர் திரு முத்தீஸ்வரனுடைய நாயனார் ஆவார். இத்திருக்கோவில் இறைவனுக்கு ஒன்றரை சந்தி விளக்கு எரிக்க நான்கு பசுவும், கன்றும், அதே ஊரைச் சேர்ந்த ஊர் தலைவன் திருவேகம்பம் உடையான் அழகிய திருவானைக்கா உடையார் என்பவர் இத்திருக்கோவில் பிராமணர்களிடம் கொடுத்து சந்தி விளக்கு ஏற்ற சொல்லுகிறார். இப்பகுதியில் வாழ்ந்த பெரும்பாலான மக்களுக்கு திருவேகம்பம் உடையான் என்ற பெயர் இருப்பது இக்கல்வெட்டு மட்டும் இன்றி பல கல்வெட்டுகளில் காணமுடிகிறது. ஏகாம்பரநாதர் என்ற பெயரிலே இறைவன் காஞ்சியிலே எழுந்தருளியிருக்கிறார். இறைவனின் பெயரை மக்கள் சூட்டி மரியாதை செய்யும் நிகழ்வாக இதனை நாம் காணலாம்.

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியரின் பத்தாவது ஆட்சியாண்டு அதாவது கிபி 1350ல் ஆற்றூர் என்கிற ராச ராச நல்லூரில் உள்ள திருமுத்தீஸ்வரம் உடைய நாயனார் கோயிலில் எடுக்கப்பட்ட கல்வெட்டு மிகச் சிறப்பு வாய்ந்த ஒரு கல்வெட்டு ஆகும். இன்றைக்கு 700 ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற பத்து நாள் திருவிழாவினைக் குறிப்பிடுகிறது. புரட்டாசி மாதம் ஆற்றூர் திருமுத்தீஸ்வரம் உடைய நாயனார் கோவிலில் 9 நாள் திருவிழா நடைபெற்றிருக்கிறது. இத்திருவிழாவை அவ்வூரைச் சேர்ந்த 9 பேர் ஒவ்வொரு நாளும் கொடையாளர்களாக நின்று நடத்தி இருக்கின்றனர். திருக்காரொளி நாள் எனும் முதல் நாள் திருவிழாவை காலிங்கராயன் என்பவரும், இரண்டாம் திருநாள் சிற்றம்பலவன் என்பவரும், மூன்றாம் திருநாள் பெருமாள் என்கிற தொண்டை மண்டல காங்கேயன் என்பவரும்,

நான்காம் திருநாள் வத்தராயன் மகள் முதலிச்சி என்பவரும், ஐந்தாம் திருநாள் அறமளத்தான் என்கிற கண்டிய தேவனும், ஆறாம் திருநாள் திருநட்டப் பெருமாளும், ஏழாம் திருநாள் வல்லானை வென்றான் என்பவரும், எட்டாம் திருநாள் பாசன் என்பவரும், ஒன்பதாம் திருநாள் காவன் தொண்டைமான் என்பவரும் உபயமாக கொடுத்து திருவிழாவை நடத்தி இருக்கின்றனர். இத்திருநாளுக்கு நிச்சயத்த பணம் 44 ஆகும். கிபி 1350 ஆம் ஆண்டு புரட்டாசி மாத திருவிழாவினை இத்திருக்கோவில் காணி உடைய சிவபிராமணர்கள் 175 பணம் பெற்றுக்கொண்டு அந்த ஆண்டு 9 நாள் திருவிழாவினை தாங்களே நடத்தித் தருவதாக உறுதியளித்து இந்த கல்வெட்டை ஆற்றூர் திருமுத்தீஸ்வரர் கோவிலிலே எடுக்கிறார்கள். ஒரு முக்கியமான செய்தி என்னவென்றால் நான்காம் நாள் திருநாளை நடத்துபவர் ஒரு பெண் ஆவார். மேலும் திருக்கோவில்களில் நடைபெறும் திருவிழாக்கள் காலம் தொட்டு உபயதாரர்கள் கொண்டு நடத்தப் பெற்றதையும் இக்கல்வெட்டு நமக்கு ஒரு சான்றாக அளிக்கிறது.

காஞ்சிபுரம் பெருநகரிலே பாண்டியர்கள் காலத்து கல்வெட்டு இரண்டு காணப்படுகிறது. சுந்தரபாண்டியரின் ஏழாவது ஆட்சியாண்டு மற்றும் திரிபுவன வீரபாண்டிய தேவரின் ஐந்தாவது ஆட்சியாண்டு கல்வெட்டு இக்கோயிலிலே உள்ளன. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து வெண்குன்ற கோட்டத்தின் கீழ் வரும் இந்த பெருநகர் நாட்டு பெருநகரில் எழுந்தருளி இருக்கக்கூடிய இறைவன் திருப்பெயர் பிரம்மீஸ்வரமுடைய மகாதேவர் ஆவார். இவருக்கு சுந்தரபாண்டிய தேவரின் ஏழாவது ஆட்சி ஆண்டிலே சேதி மண்டலத்தை சேர்ந்த வானவராயன் என்பவர் சுந்தரபாண்டியர் நலனுக்காக பிரம்மீசுவரம் உடைய மகாதேவர் கோயிலுக்கு இரண்டு வேலி நிலம் தேவதானமாக அளித்துள்ளார். மன்னர் நலன் வேண்டி நிலம் கொடுக்கப்பட்ட செய்தியை இக்கல்வெட்டு வாயிலாக அறிகிறோம்.

வீரபாண்டிய தேவரின் ஐந்தாவது ஆட்சி ஆண்டிலேயே எடுக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் நிலம் ஒத்தி கொடுக்கப்பட்ட செய்தியை நம்மால் அறிய முடிகிறது. வெண்குன்ற கோட்டத்தில் பெருநகர் நாட்டு பெருநகர் ஊரில் இருக்கக்கூடிய பிரம்மீசுவரம் உடைய நாயனார் கோவிலில் அதே ஊரைச் சேர்ந்த காழி காக்கு நாயகன் என்பவர் முதலியார் காக்கு நாயகர் என்னும் இறைவனை எழுந்தருளுவித்துள்ளார். அவர் எடுப்பித்த இறைவனுக்கு ஆறு சந்தி விளக்குகள் தானமாக கொடுத்துள்ளார். இந்த ஆறு சந்தி விளக்கிற்க்கும் பணமானது சேத்துப்பட்டு பகுதியிலேயே விளக்குப்பட்டியாக ஒத்தி வைக்கப்பட்ட நிலத்திலிருந்து 40 பணம் பெறப்பட்டு, அதற்கு வட்டி ஏற்றி 60 பணத்தை இந்த ஆறு சந்தி விளக்கிற்கும் இத்திருக்கோவில் சிவபிராமணர்கள் மூலம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னையில் இன்று பல்லாவரம் என்று அழைக்கப்படும் வானவன்மாதேவி சதுர்வேதிமங்கலம் பாண்டியர்கள் காலத்திலும் சோழப்பேரரசிகளின் பெயர்களாலே வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்க செய்தி ஆகும். புலியூர் கோட்டத்தில் வரும் திரிசூலம் திருச்சுரம் உடைய நாயனாருக்கு நந்தா விளக்கு எரிப்பதற்கு 32 பசுவும், ஒரு ரிஷபமும் தானமாக கொடுக்கப்பட்டிருக்கிறது.

இவை தவிர தொண்டை மண்டலத்தில் பல திருக்கோயில்களில் பாண்டியர்கள் செய்த திருப்பணியானது கல்வெட்டுகளில் இன்றும் மிளிர்ந்து கொண்டிருக்கிறது.



அழகர் மலை ஓவியங்கள்





வெ.பாலமுரளி

தமிழர் தொன்மவியல் ஆய்வாளர்

மதுரை

இங்கே இருக்கும் ஓவியங்களில் மிகவும் சிறப்பான ஓவியம் என்றால் அது ஒரு மனிதனை குனிய வைத்து ஒரு பெரிய வாளால் கழுத்தை வெட்டுவது (பலியிடுவது) போல் இருக்கும் ஒரு ஓவியம்தான். வாள் வந்து விட்டதால் இரும்புக்காலப் பண்பாடு என்று உறுதியாக சொல்லலாம். அதாவது ஏறத்தாழ 4000 வருடப் பழைமை எனலாம். இது மயிலாடும்பாறை ஆய்வு முடிவை வைத்து சொல்லப்படும் காலக் கணிப்பு. வரும் காலங்களில் இதுவும் மாறலாம்.

(இந்த ஓவியத்தை என்னை இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்க வைத்த தம்பி திருச்சி பார்த்திக்கு நன்றி).

மதுரையில் திருப்பரங்குன்றம், யானைமலை போலவே அழகர்மலையும் ஒரு அதிசயக் குவியல்தான்.

தோண்டத் தோண்ட வந்து கொண்டேயிருக்கும்.

திருமாலிருஞ்சோலை என்ற பெருமாள் கோயில், அதன் மேலே முதல் அடுக்கில் இருக்கும் பழமுதிர்ச் சோலை, அதன் உச்சியில் இருக்கும் நூபுரகங்கை என்னும் சுனை மற்றும் அதனை ஒட்டி இருக்கும் ராக்காயி அம்மன் கோயில், அதே மலையில் சிறிது நடந்தால் வரும் இராம தேவர் என்னும் சித்தர் தவம் இருந்த இடம் என்று ஒரே மலையில் வரலாறும், ஆன்மீகமும் கொட்டிக் கிடக்கின்றன.

இது ஒரே மலை இல்லை. மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு அங்கமான இதுவும் ஒரு தொடர்ச்சியான மலைகள்தான். அழகர்மலைத் தொடர்ச்சி.

இந்த அழகர்கோயில் பெருமாள் ஆலயத்திலிருந்து மேலூர் செல்லும் சாலையில் 6 கி.மீ. தொலைவில் இருக்கும் ஒரு சிற்றூர்தான் கிடாரிப் பட்டி. இந்த ஊருக்கு நுழைவதற்கு ஒரு கி.மீ தூரத்திற்கு முன்னால் உங்கள் இடது கைப்பக்கம், வழக்கம்போல்) சமணச் சின்னம் என்ற மஞ்சள் போர்டு இருக்கும் இடத்தில் திரும்பி, ஒரு கிமீ தூரம் சென்றால் வரும் ஒரு குன்றில்தான் 12 தமிழிக் கல்வெட்டுக்களும், 10ம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரரின் ஜெயின சிற்பம் ஒன்றும், வட்டெழுத்துக் கல்வெட்டு ஒன்றும் ஏராளமான செஞ்சாந்து ஓவியங்களும் உள்ளன.

எல்லா ஓவியங்களுமே செஞ்சாந்து என்றாலும் கூட, அவை அனைத்தும் ஒரே காலகட்டத்தில் வரையப்பட்டவை அல்ல. கையில் கல் ஆயுதத்தை வைத்து சுழற்றுவதுபோல் இருக்கும் பறவை முகம் கொண்ட மனிதனின் ஓவியம் இடைக் கற்காலம் அல்லது புதிய கற்காலத்தின் தொடக்கமாக இருக்கலாம். ஓரிரு இடங்களில் சில ஓவியங்கள் கருப்பு நிறத்தில் வரையப்பட்டு காலத்தால் அழிந்து போன தடங்கள் உள்ளன. இவை கண்டிப்பாக இடைக் கற்கால ஓவியங்களாக இருக்கலாம்.

இங்கே இருக்கும் ஓவியங்களில் மிகவும் சிறப்பான ஓவியம் என்றால் அது ஒரு மனிதனை குனிய வைத்து ஒரு பெரிய வாளால் கழுத்தை வெட்டுவது (பலியிடுவது) போல் இருக்கும் ஒரு ஓவியம்தான். வாள் வந்து விட்டதால் இரும்புக்காலப் பண்பாடு என்று உறுதியாக சொல்லலாம். அதாவது ஏறத்தாழ 4000 வருடப் பழைமை எனலாம். இது மயிலாடும்பாறை ஆய்வு முடிவை வைத்து சொல்லப்படும் காலக் கணிப்பு. வரும் காலங்களில் இதுவும் மாறலாம். (இந்த ஓவியத்தை என்னை இந்தக் கண்ணோட்டத்தில் பார்க்க வைத்த தம்பி திருச்சி பார்த்திக்கு நன்றி).

இது தவிர ஏணி, நங்கூரம், முக்கொம்பு போன்ற சில பல குறியீடுகளும் செஞ்சாந்து நிறத்தில் உள்ளன. அழகு.

இதில் உள்ள ஏணி ஓவியம், மனிதன் உயிர் பிரிந்து மேலுலகம் செல்வதைக் குறிக்கலாம் என்பது திரு. பாலா பாரதி போன்ற நிறைய அறிஞர்களின் கருத்து (இன்னும் நிறைய ஆய்வு தேவை).

சில ஓவியங்கள் பெருங்கற்காலத்தைச் சார்ந்தவை. பெருங்கற்கால ஓவியம் என்றாலே வெண் சாந்துதான் என்ற கருதுகோளை தகர்க்கின்றன அழகர் மலை ஓவியங்கள்.

இந்த ஓவியங்கள் தவிர, ஒரே இடத்தில் அதிகமான தமிழிக் கல்வெட்டுக்கள் இருக்கும் மிகச் சில இடங்களில், அழகர் மலையும் ஒன்று.

இங்கு **மொத்தம் 12 கல்வெட்டுக்கள் உள்ளன. படிப்பதற்கு ரொம்பவே பொறுமை வேண்டும். அனைத்துக் கல்வெட்டுக்களும் நல்ல உயரத்தில் உள்ளன. கிட்டத்தட்ட 30 அல்லது 40 மீட்டர் நீளமான குகை. குகை விளிம்பில் ஒட்டுமொத்த நீள வசத்தில் இரண்டு வரிசைகளில் அந்த 12 கல்வெட்டுக்களும் உள்ளன.**

இங்குள்ள பொதுவான சிறப்பம்சங்கள் சிலவற்றைப் பார்ப்போம்.

1. இங்குள்ள கல்வெட்டுக்களில் பொற்கொல்லன், உப்பு வணிகன், கொழு வணிகன் (கலப்பையின் கூர் பகுதியே கொழு), அறுவை (துணி) வணிகன், பாணித (சர்க்கரைப் பாகு) வணிகன் போன்ற சொற்கள் நேரிடையாக இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன. இதன் மூலம் வணிகர்கள் இங்குள்ள துறவிகளை எவ்வளவு தூரம் ஆதரித்துள்ளனர் என்பது தெளிவு.

2. இங்கு மதுரை மாநகரை மதிரை, மத்திரை என்று குறிக்கும் கல்வெட்டுக்கள் உள்ளன. இதேபோல், மேட்டுப்பட்டி கல்வெட்டிலும் ''மதிரை'' என்னும் சொல் குறிப்பிடப்பட்டுள்ளது. இதை, பேச்சு வழக்கை அப்படியே பொறித்துள்ளதாகக் கொள்ளலாம்.

3. மோதிரம் போல் உள்ள சில குறியீடுகளை இங்கு காண முடிகிறது. இவை கொடுமணல் அகழ்வாராய்ச்சியிலும், சிந்துவெளி குறியீடுகளிலும் காண முடிகிறது. இதன் மூலமாக சிந்துவெளியுடனான தமிழகத்தின் உறவை ஓரளவிற்கு ஊகிக்க முடிகிறது. இந்தக் குறியீடுகளின் அர்த்தம்: இந்தக் குகைத்தளத்தில் உள்ள கற்படுக்கைகளையும், நீர்த்தேக்கத்தையும் உருவாக்க ஆன செலவின் மதிப்பாக இருக்கலாம் என்கிறது நமது தொல்லியல் துறை.

4. ''ஆதன்'' என்னும் சொல் சங்ககாலத்தில் மிகவும் பொதுவான பெயராகவோ அல்லது ஒரு பெரிய தலைவனைக் குறிக்கும் சொல்லாகவோ இருந்துள்ளது. அதில் நெடில் நீங்கி குறிலாக ''அதன்'' என்னும் பெயர்ச் சொல்லும் ''அதன் அதன்'' என்னும் பெயர்ச் சொல்லும் இரண்டு மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன.

5. சிலப்பதிகாரத்தில், கவுந்தி அடிகளுடன் மதுரைக்கு வரும் கண்ணகியும், கோவலனும் அழகர் மலையில் உள்ள குகையில் சில ஆசீவகத் துறவிகளைச் சந்தித்ததாகவும், அவர்கள் முக்காலத்தையும் உணர்ந்த ''கணியர்களாக'' இருந்ததாகவும், அதில் ஒருவர் இவர்களைப் பார்த்து சில வினாடிகள் கண் மூடி இருந்து விட்டு பின்னர் இவர்களை சைகையால் போகச் சொன்னதாகவும் ஒரு குறிப்பு வருகிறது. அப்போது அந்தத் துறவியின் கண்கள் கலங்கி இருந்ததாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். அதாவது, கோவலனுக்கு நடக்கப் போவது அந்தத் துறவிக்கு முன் கூட்டியே தெரிந்திருக்கிறது. அதை நிரூபிக்கும் வகையில், இங்குள்ள ஒரு கல்வெட்டில் ''கணிநாகன், கணி நதன்'' என்ற இரண்டு (ஆசீவகத்) துறவிகளின் பெயர்கள் இடம் பெற்றுள்ளன. ஆசீவகத் துறவிகளுக்கே ''கணி'' ''கணியர்'' என்ற அடைப் பெயர்கள் உண்டு (உ-ம்: கணியன் பூங்குன்றனார்).

6. இங்குள்ள தமிழிக் கல்வெட்டுக்களின் காலத்தை கி.மு.முதலாம் நூற்றாண்டு என்று நமது அரசாங்கம் உத்தேசமாக வரையறுத்துள்ளது. நூறு அல்லது இரு நூறு ஆண்டுகள் இன்னும் பழைமையாக் கூட இருக்கலாம்.

7. இதே இடத்தில் கி.பி.9 அல்லது 10 ம் நூற்றாண்டைச் சேர்ந்த மகாவீரரின் ஜெயின சிற்பம் ஒன்றும் ஒரு வட்டெழுத்துக் கல்வெட்டும் உள்ளன. மற்ற இடங்கள் போலவே இங்கும் கி.பி. 9 அல்லது 10ம் நூற்றாண்டில் அச்சணந்தி முனிவர் ஆசீவகக் குகைகளைப் பின்தொடர்ந்திருப்பதை உணர முடிகிறது.

8. மற்ற இடங்களைப் போலவே, இங்கும் வானவியல் ஆராய்ச்சி செய்ய வசதியான "நிலாப்பாறை" உள்ளது. இரவில் இங்கு மல்லாந்து படுத்துக் கொண்டு வானத்தைப் பார்த்தால், வானத்தின் 360 டிகிரி கோணத்தையும் முழுமையாக பார்க்க முடிகிறது.

9. ஒரு கல்வெட்டில் "தியன் சந்தன்" என்று வருகிறது. இதில் வரும் "தியன்" என்னும் சொல் "தீயர்" என்ற ஆதிகுடியைச் சேர்ந்தவரைக் குறிப்பதாக இருக்கலாம் என்பது வரலாற்று ஆய்வாளர் உயர்திரு ராஜகுரு அவர்களின் கருத்து. இந்தத் தீயர்கள் இன்று கேரளாவின் ஒரு பகுதியில் வாழ்ந்து வருவதாகவும், அங்கும் அவர்கள் தமிழ்தான் பேசுகிறார்கள் என்கிறார் ராஜகுரு.

10. இன்னொரு கல்வெட்டு "சபமிதா இன பமித்தி" என்று வருகிறது. இதில் வரும் "பமித்தி" க்கு சமணப் பெண்துறவி என்று பொருள் என்கிறது இந்தியத் தொல்லியல் துறை. அதேபோல் "சபமிதா" என்பது "சர்ப்பமித்ரா" என்ற சமஸ்கிருதச் சொல்லே என ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இதுவும் மறுஆய்வுக்குட்பட்டது. தமிழகத்தில் உள்ள தமிழிக் கல்வெட்டுக்கள் சிலவற்றில் பிராகிருதத்தின் தாக்கம் இருந்தாலும் கூட, எங்குமே சமஸ்கிருதத்தின் தாக்கம் இல்லை. எனவே, "சர்ப்பமித்ரா" என்ற சமஸ்கிருதப் பெயர் சில "ஆய்வாளர்களால்" வலிந்து திணிக்கப்பட்டுள்ளது போல் தெரிகிறது.

11. குகையின் உள்ளே ஒரு சுனை உள்ளதாக அரசு ஆவணம் சொல்கிறது. ஆனால், அது மழை நீர்த் தேக்கம் போல்தான் தெரிகிறது. அதன் மேல் விதானத்திலும் சில ஓவியங்கள் உள்ளன.

சில டிப்ஸ்:


இந்தக் குன்றின் மேலே செல்வது ஒன்றும் கடினம் இல்லை என்றாலும் கூட, ஒரே ஒரு இடத்தில் மட்டும் இரண்டு குன்றுகளை இணைக்க நமது அரசாங்கம் ஒரு இரும்பு ஏணிப்படியை போட்டு வைத்திருக்கிறது. அதில் கைப்பிடி இல்லாதலால், கொஞ்சம் ஜாக்கிரதையாய் ஏறி இறங்க வேண்டும்.


தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை வெளியிட்ட "தமிழ்-பிராமி கல்வெட்டுகள்" ஆவணம். உயர்திரு ராஜகுரு அவர்கள் தம்பி திருச்சி பார்த்தி மற்றும் நண்பர்.


உயர்திரு. பாலாபாரதி பேராசிரியர்

க.நெடுஞ்செழியனின் ஆசீவகமும் ஐயனார் வரலாறும்.




கல் ஆயுதத்துடன் ஒரு வேட்டை


நங்கூரம் போன்ற ஏதோவொன்று


ஓவியங்களும் , தமிழிக் கல்வெட்டுக்களும்
உள்ள குகை


சுனை


சில குறியீடுகள்


இறை சக்தி ????
நீண்ட வாளுடன் பலி கொடுப்பவன்
முழு விருப்பத்துடன் பலியாகுபவன்



நடுகல்லில் வாழும் ஓர் ஆசான்



க.சீனிவாசன்
பொறியாளர்,
வரலாற்று ஆர்வலர்,
வாணியம்பாடி

ஹலே கன்னடத்தில் (பழைய கன்னடம்) மொழியில் எழுதப்பட்ட இக்கல்வெட்டு தரும் தகவல். வித்யராசி என்ற லகுலிச சைவ ஆசிரியர் நினைவாக அவரது மாணவர் ஒருவர் இந்த நடுகல் அமைத்துள்ளார்.

ஆசானும் மாணவரும் சிவலிங்கத்தை வழிப்படும் அமைப்பில் இந்நடுகல் உள்ளது. அக்கால ஆடை அலங்காரம் சிவ லிங்கத்தின் அமைப்பு போன்றவரை இந்நடுகல்லில் அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இடது புறத்தில் சிவலிங்கத்தை நோக்கி அமர்ந்திருந்தவர் வித்யராசி ஆவார் வலது புரத்தில் சிவலிங்கத்தை வணங்கியப்படி இருப்பவர் வித்யராசியின் சீடர் ஆவார்.

8 ஆம் நூற்றாண்டு தமிழக வரலாற்றில் ஓர் மிக முக்கியமான காலம் பல்லவ பேரரசு மெல்ல தனது சரிவை நோக்கி சென்று கொண்டிருந்தது, பல்லவ பேரரசின் கீழ் அமைந்த சிற்றரசுகள் கங்கர்கள், வாணர்கள், நுளம்பர்கள் சுயாமாக ஆட்சிபுரிய தொடங்கினார்கள் இவ்வாறு தகடூர் நுளம்பர்கள் வசம் ஆனது. நுளம்பர்கள் கால நடுகற்கள் கோவில்கள் தருமபுரியில் இன்றும் காணக்கிடைக்கின்றன.

கல்வியில் சிறந்து விளங்கியவர்களின் நினைவாக நடுகற்கள் எடுக்கப்பட்டுள்ளன, இவ்வகையான நடுகற்கள் மிகவும் அரிதானவை. கல்வியின் முலம் மக்களுக்குசேவை புரிந்ததின் நினைவை போற்றும் விதமாக இவ்வகை நடுகற்களை மக்களும் மாணவர்களும் எடுப்பித்தனர்.

அரிதான இந்த நடுகல் முதன் முதலாக தருமபுரி ஏரிகரையில் கிடைத்தது, இதன்பின்னர் இந்நடுகல்லை சென்னை அருங்காட்சியகத்திற்கு கொண்டு வந்து கல்வெட்டை படித்து அதன் பொருளை அறிந்துக்கொண்டனர்.

ஹலே கன்னடத்தில் (பழைய கன்னடம்) மொழியில் எழுதப்பட்ட இக்கல்வெட்டு தரும் தகவல்.

வித்யராசி என்ற லகுலிச சைவ ஆசிரியர் நினைவாக அவரது மாணவர் ஒருவர் இந்த நடுகல் அமைத்துள்ளார். ஆசானும் மாணவரும் சிவலிங்கத்தை வழிப்படும் அமைப்பில் இந்நடுகல் உள்ளது. அக்கால ஆடை அலங்காரம் சிவ லிங்கத்தின் அமைப்பு போன்றவரை இந்நடுகல்லில் அழகாக காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இடது புறத்தில் சிவலிங்கத்தை நோக்கி அமர்ந்திருந்தவர் வித்யராசி ஆவார்

வலது புரத்தில் சிவலிங்கத்தை வணங்கியப்படி இருப்பவர் வித்யராசியின் சீடர் ஆவார்.

<u>கல்வெட்டு தகவல்:</u>

தகடூரில் இருந்த மஹாபோகேஷ்வரா கோவிலில் இந்த நடுகல் நிறுவப்பட்டது எனவும். சிறந்த கல்வி வேள்விகள் வேத ஞானத்தை அடைந்தவரும் நல்ல குணத்தை கொண்ட வித்யராசி என்பவர் பல்லவேஷ்வரத்தில் உள்ள ரூதர்பூஜங்கர் உடைய சிஷ்யர் ஆவார்.

வித்யராசி லகுலிசத்தை எமக்கு கற்று தந்த ஆசான், மூன்று வேளையும் தினமும் இந்த நடுகல்லுக்கு சிவபூஜை செய்பவர்களை அந்த ருத்ரன் ரக்ஷிப்பார் என கல்வெட்டு விவரிக்கிறது.

<u>குறிப்புகள்:</u>

கலிசோரரேஷ்வரா நன்னேஷ்வரா மஹாபோகேஷ்வரா என மூன்று கோவில் தகடூரில் இருந்தாக என்ற குறிப்பும். உள்ளது


காஞ்சிபுரத்தை சேர்ந்த ரூதர்பூஜங்கர் உடைய சிஷ்யர் வித்யராசி காஞ்சிபுரத்திலிருந்து தகடூர் வந்து மாணவர்களுக்கு லகுலிச சைவ முறைய கற்று தந்துள்ளார்.

வித்யராசியின் நினைவாக அவரது சிஷ்யர் நரங்கே கணிஷிகே தேசிகா என்பவர் இந்த இந்த நடுகல்லை நட்டுள்ளார்.

ஓர் நடுகல் நடுவது மட்டுமின்றி நடுகல் வழிபாடும் இருந்துள்ளது மேலும் நடுகல் வழிபாடு ஊக்குவிக்கப்பட்டது என இக்கல்வெட்டு முலம் அறியமுடிகிறது,

தற்போது இந்நடுகல் சென்னை அருங்காட்சியகத்தில் உள்ளது.

கோயிற் கட்டிடக்கலை





விஜய்பட்
மென்பொறியாளர்,
கோயிற் கட்டிடக்கலை ஆய்வாளர்,
சென்னை

மிகத் தொன்மையான கலாச்சாரமும் பண்பாடுகளும் கொண்ட மிகப் பரந்த தேசம் பாரதம் வடக்கே அஜர்பெய்ஜான் துருக்மெனிஸ்தான் முதல் தெற்கே தமிழகம் வரை இதன் பண்பாட்டு எச்சங்களைக் காண முடிகிறது எனவே இதன் பின்னணியில் பல்வேறு பிரிவுகளாக கோயில் கட்டிடக் கலை மரபுகள் மாபெரும் வெளியில் பரந்து விரிந்து கிடக்கின்றன

கோயிற் கட்டிடக்கலையில் நாம் காணும் பல மரபுகளிடையே (உதாரணம்: நாகர, திராவிட, வேசரம்) காணும் ஒற்றுமைகளை நுணுகி கண்டறிந்து வகைப் படுத்தி அறிய முயன்றுள்ளனர்.

பாகம் இரண்டு:

விமானத்தின் உறுப்புகள் contd…:




***Figure-1:* விமானத்தின் உறுப்புகள்**

விமானத்தின் உறுப்புகளை புரிந்துகொள்ள திருப்பழனம் ஆபத்சகாயேஸ்வரர் கோயிலை உதாரணமாக எடுத்துக்கொள்வோம்.



***Figure-2:* திருப்பழனம் ஆபத்சகாயேஸ்வரர் கோயில்**

திருப்பழனம் ஆபத்சகாயேஸ்வரர் கோயில், தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள திருப்பழனம் எனும் ஊரில்அமைந்துள்ளது.

விமானத்தின் உறுப்புகள் -6:

விமானத்தின் உருப்புகள் மொத்தம் ஆறு. அவற்றை ஆகமங்களில் **ஷடவர்கம்** *(Shadvarga)* என்று அழைக்குப்படுகின்றது.

•அதிட்டானம்:

கருவறையின் மேல் உறுப்புகளாகிய சுவர் (பாதம்) கூரை (பிரஸ்தரம் /பிரத்தரம்) விமானம் எழுவதற்கு அடிவாரமாகவும், ஆதாரமாகவும் உறுதியுடன் கூடியதாக அமைக்கப்படும் உறுப்பிற்கு அதிட்டானம் / அதிஷ்டானம் என்று பெயர்.

ADHISHTANA: Basement of a vimana, a mandapa, or similar structure, forming a distinct architectural feature supporting walls and pilasters or pillars, and consisting of distinct moulded tiers.

•பித்தி (சுவர்):

கருவறை சுவரை பாதமென கூறுவர். இப்பகுதியில் வாயில் கோட்ட /கோஷ் பஞ்சரம, கும்பலதா, விருத்தஸ் புடிதம், கோஷ்ட மூர்த்திகள் முதலிய அழகிய வேலைப்பாடுகளுடன் இருக்கும்.

BHITTI: Wall.

•பிரஸ்தரம்:

பிரஸ்தரம் /பிரத்தரம் கூரை எனப்படும் பகுதி

PRASTARA:

Entablature consisting of mouldings over walls and pillars, viz. the uttira [beam] vajana, valabhi, kapota, alinga, and antari.




Figure-3: Shadvarga

•க்ரீவம் - கழுத்து:

விமானத்தின் கழுத்து பகுதியை க்ரீவம் அல்லது கண்டம் என்று அழைக்கப்படும்

GRIVA-GALA: Neck usually the clerestory raising up the roof (sikhara) with light and air-openings (nasikas) on its sides in the vimana types.

•சிகரம் - கலயம்:

விமோனத்தின் மேல் பகுதியில் மனித உடலின் தலை பாகத்துடன்

ஒப்பமைப்படுத்தப்படும் அங்கம் சிகரம்

SIKHARA: Roof of the 'vimana' over the 'griva', domical or four-sided with a single finial, vaulted with many finials on the ridge or apsidal with many finials over the horizontal part.

The entire superstructure is of northern 'prasadas'.

•ஸ்துபம்:

சிகரத்தின் உச்சியில் ஏற்படுத்தப் படும் துலையில் இருத்தப்படும் ஆறோவது அங்கம் ஸ்தூபி /கலசம்

STUPI-STUPICA: Final morphologically the 'ushnisha', taking in later times the form of a 'purna ghata' or purna kumbha' forming the topmost or ultimate member of the 'vimana



Figure-4: Shadvarga

ஆகம நூல்களும் மற்றும் அவற்றின் வகைகளும் - ஓர் அறிமுகம்

Agamam:

மிகத் தொன்மையான கலாச்சாரமும் பண்பாடுகளும் கொண்ட மிகப் பரந்த தேசம் பாரதம் வடக்கே அஜர்பெய்ஜான் துருக்மெனிஸ்தான் முதல் தெற்கே தமிழகம் வரை இதன் பண்பாட்டு எச்சங்களைக் காண முடிகிறது எனவே இதன் பின்னணியில் பல்வேறு பிரிவுகளாக கோயில் கட்டிடக் கலை மரபுகள் மாபெரும் வெளியில் பரந்து விரிந்து கிடக்கின்றன. கோயிற் கட்டிடக்கலையில் நாம் காணும் பல மரபுகளிடையே (உதாரணம்: நாகர, திராவிட, வேசரம்) காணும் ஒற்றுமைகளை நுணுகி கண்டறிந்து வகைப் படுத்தி அறிய முயன்றுள்ளனர். நாம் தற்போது அறியும் மரபு நூல்கள் பல முழுமையாக கிடைத்தில கிடைத்துள்ள பலவும் வழிநூல்களே,

தொகுப்பு நூல்களே அவை

- *மய மதம்*
- *காமிகா ஆகமம்*
- *காரண ஆகமம்*
- *கடகபூஷணம்*
- *பாதசம்ஹிதை*
- *பிருஹத் சம்ஹிதை*
- *தீப்த ஆகமம்*
- *மானசாரம்*
- *மரீசி சம்ஹிதை*
- *காரண ஆகமம்*
- *சுவாயம்பு ஆகமம்*
- *அஜித ஆகமம்*
- *சுப்ரபேத ஆகமம்*

மயமதம், காசியப சில்ப சாஸ்திரம், மானசாரம், காமிகாகமம் இவற்றை அடிப்படையாக கொண்டே தென்னிந்தியக் கோயில்கள் - திராவிட கட்டிடக்கலையில் அமைந்துள்ளமை காணக்கிடைக்கிறது.



இலக்கியங்களிலும் பாறை ஓவியங்களிலும் பறவைக் காவலர்கள்



சரவணமணியன்.ப.அ

பொறியாளர், வரலாறு,
பறவைகள் புகைப்பட ஆர்வலர்,

காளையார்கோவில்

அலகின் அமைப்புகளிலும் இறக்கை, கால் அமைப்பிலும் பறவைகளின் ஓவியங்கள். பலவாறாக வரையப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இந்த பாறை ஓவியங்கள் பல்வேறு காலகட்டங்களில் தொடர்ச்சியாக வரையப்பட்டிருக்க கூடும். அதிலும் வேறு வேறு கோணங்களில் வேறு வேறு அளவுப் பிரமாணங்களில் இந்தப் பறவைகளை வரைந்திருக்கிறார்கள். இதுபோக பாறை கீறல்களிலும் பறவையின் உருவங்கள் மகாராஷ்டிரா மாநிலத்தில் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்திலும் நீலகிரி, கிருஷ்ணகிரி மாவட்ட பாறை ஓவியங்களில் பறவை ஓவியங்கள் கிடைக்கப் பெறுகின்றன.

தற்போதைய காலகட்டத்தில் பறவைகளையும் விலங்குகளையும் பாதுகாத்திட உலகெங்கும் பல்வேறு அமைப்புகள் உள்ளன. ஆயிரம், ஈராயிரம் வருடங்களுக்கு முன்னர் நமது முன்னோர்கள் இதுபோன்ற ஏதேனும் வழிமுறைகள் செய்துள்ளார்களா என்ற எனது வினாவிற்கான தேடலில் கிடைத்தது ஆச்சரியமூட்டும் தகவல்கள்.

ஆமாங்க. சங்க காலத்தில் தனி மனிதர்களிடம் இத்தகைய கருணையுணர்வும், காப்பு சிந்தனையும் வேரூன்றி இருந்ததை அகநானூற்றில் உள்ள நான்கு பாடல்களின் வழியே அறிய முடிகிறது. பின்வரும் பாடல்களில் அதிகன் மற்றும் எயினன் என்ற இருவர் பறவைக் காவலர்களாய் குறிப்பிடப்படுவது சிறப்பு வாய்ந்த தகவல்கள். வாங்க பார்ப்போம்.

அகநானூறு பாடல் 142:

புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும் பெயர்

வெள்ளத் தானை அதிகற் கொன்று, உவந்து

ஒள் வாள் அமலை ஆடிய ஞாட்பின்,

பலர் அறிவுறுதல் அஞ்சி, பைப்பய,

உரையாசிரியர்கள் விளக்கம்:

அதிகன் பறவைகளைப் பாதுகாத்து வந்த ஒரு வள்ளல். அதனால் புகழ் பெற்றவன் அதிகன். இந்த அதிகனை மிஞிலி கொன்றான். வாக்களித்தபடி பேய்த் தெய்வத்துக்கு அதிகனைப் பலி கொடுத்துவிட்டு வாளைச் சுழற்றிக்கொண்டு ஆடினான். அச்சுறுத்தும் அந்த ஆட்டத்தைப் பலரும் அறிந்திருந்தனர். அதுபோலப் பலருக்கும் தன் கள்ளக் காதல் தெரிந்துவிடக் கூடாது என்று எண்ணிக்கொண்டு வந்து அவள் தழுவினாள்.

அகநானூறு பாடல் 148:

கடும் பரிக் குதிரை ஆஅய் எயினன்

நெடுந் தேர் ஞிமிலியொடு பொருது, களம் பட்டென,

காணிய செல்லாக் கூகை நாணி,

கடும் பகல் வழங்காதாஅங்கு, இடும்பை

உரையாசிரியர்கள் விளக்கம்:

அரசன் ஆய்எயினன் சிறந்த குதிரைவீரன். தேர்வீரன் ஞிமிலியைத் தாக்கினான். போர்க்களத்திலேயே எயினன் மாண்டு போனான்.

எயினன் பறவைகளைப் பாதுகாத்து வந்தவன். அவன் மாண்டுகிடப்பதைப் பிணம் தின்னும் கூகை கண்ணால்கூடக் காண விரும்பவில்லை. எனவே இனி எல்லாப் பகலிலும் வெளியில் வருவதில்லை என்று முடிவு எடுத்துக் கொண்டது.

அகநானூறு பாடல் 181:

ஓம்பு அரண் கடந்த வீங்கு பெருந் தானை

அடு போர் மிஞிலி செரு வேல் கடைஇ,

முருகு உறழ் முன்பொடு பொருது களம் சிவப்ப,

ஆஅய் எயினன் வீழ்ந்தென, ஞாயிற்று

ஒண் கதிர் உருப்பம் புதைய ஓராங்கு

வம்பப் புள்ளின் கம்பலைப் பெருந் தோடு

விசும்பிடை தூர ஆடி, மொசிந்து உடன்,

உரையாசிரியர்கள் விளக்கம்:

மிஞிலி என்னும் படைத்தலைவன் பகைவரின் கோட்டைகள் பலவற்றைக் கைப்பற்றியவன். அவன் பெரும் படையுடன் சென்று போர்க்களம் இரத்தத்தால் சிவக்கும்படி முருகக் கடவுள் போலத் தாக்கினான். எதிர்த்து நின்ற

ஆய்-எயினன் போர்க்களத்தில் வீழ்ந்தான். ஆய்எயினன் பறவைகளைப் பேணி வளர்த்து வந்த வள்ளல். அவன் போர்களத்தில் கிடப்பதைப் பார்த்த சில பறவைகள் மற்ற பறவைகளை அழைத்துக்கொண்டு வானில் பறந்து அவன் உடலில் வெயில் தாக்காதபடி நிழல் செய்தது.

அகநானூறு பாடல் 208:

அளி இயல் வாழ்க்கைப் பாழிப் பறந்தலை,

இழை அணி யானை இயல் தேர் மிஞிலியொடு

நண்பகல் உற்ற செருவில் புண் கூர்ந்து,

ஒள் வாள் மயங்கு அமர் வீழ்ந்தென,"புள் ஒருங்கு

அம் கண் விசும்பின் விளங்கு ஞாயிற்று

ஒண் கதிர் தெறாமை, சிறகரின் கோலி,

நிழல் செய்து உழறல் காணேன், யான்" எனப்

உரையாசிரியர்கள் விளக்கம்:

பாழி என்னும் ஊரில் எயினன் பறவைகளைப் பேணி வளர்த்து வந்தான். அந்த ஊர் பாழிப்பறந்தலை என்னும் போர்க்களமாக மாறியது. மிஞிலி அவனைத் தாக்கினான்.

யானைப்படையும் தேர்ப்படையும் கொண்டு தாக்கினான்.எயினன் வாளேந்திப் போரிட்டான்.

நண்பகல் வேளையில் பெருங்காயம் பட்டுப் போர்க்களத்தில் எயினன் வீழ்ந்தார்.

அவன் பேணிவந்த பறவைகள் வானத்தில் பறந்து வெயில் அவன்மேல் படாமல் சிறகுகளை விரித்து நிழல் செய்தன.

"இந்தக் காட்சியை நான் காணமாட்டேன்" என்று நன்னன் சொல்லிவிட்டார்.

நான்கு பாடல்களின் விளக்கம்:

இந்த பாடல்களின் வழி, வெளியன் வேண்மான் ஆய் எயினன் பறவைகளின் பாதுகாவலராக வாழ்ந்துள்ளார். நன்னன் புன்னாட்டின் மீது படையெடுத்த போது, அஞ்சலிர் என்று அந்நாட்டிற்கு துணை நின்ற இவ்வேந்தர், பாழியில் நடைப்பெற்ற போரில் தம் சொல்லை காப்பாற்றி நன்னனுக்கு துணை வந்த பெரும்படை மிஞிலியுடன், முருகனை யொப்பப் போரிட்டு தம் இன்னுயிரை இழந்தவர்.

நன்பகல் போரில் பொருது வீழ்ந்த பறவைக் காவலராம் எயினர் உடலை ஞாயிற்றின் கதிர்கள் சுடுதலை விரும்பாத புள்ளினங்கள் அவலப் பேரொலியுடன் வானில் ஒன்றினைந்து பறந்தவாறு தன் சிறகுகளால் பந்தலிட்டு நிழல் தந்தன. பகலில் கண்தெரியாத ஆந்தைகளுள் ஒன்று இந்த நிகழ்வில் பங்கேற்க முடியாததால் தன் ஆற்றாமைக்கு நாணுற்றுத் துன்புற்றது.

வெள்ளம் போல் படையுடைய அதிகன் பறவைக்காவலராக வாழ்ந்த மற்றொரு மனிதர். இவரையும் மிஞிலி போர்களத்தில் கொன்றொழித்தார். இவர்கள் (அதிகன், எய்னன்) இருவரை பற்றியும் குறிப்புகள் கிடைத்தும், சில உரையாசிரியர்கள் இவர்கள் இருவரும் ஒருவரே என்பது போல் எழுதியிருப்பதை பார்க்க முடிகிறது.

பாறை ஓவியங்களுக்கான விளக்கம்:


அதே போல் மேற்காணும் புகைப்படங்களில் உள்ள ஐந்தாயிரம் வருடங்களுக்கு முன் வரையப்பட்டதாக கருதப்படும் பாறை ஓவியங்களும், பறவைகளுக்கும் மனிதர்களுக்குமான தொடர்பினை மிகவும் அழகாக காட்சிப்படுத்துகிறது. இங்கே பறவைகளின் இறக்கைகள் மற்றும் கால் பகுதிகள் மிக சரியான அளவில் இருப்பதால் பறவைகளோடு நெருங்கிப் பழகிய அவதானிப்பாளர்களால்தான் இவைகள் வரையப்பட்டிருக்க வேண்டும்.

அலகின் அமைப்புகளிலும் இறக்கை, கால் அமைப்பிலும் பறவைகளின் ஓவியங்கள். பலவாறாக வரையப்பட்டிருக்கின்றன. இதன் மூலம் இந்த பாறை ஓவியங்கள் பல்வேறு காலகட்டங்களில் தொடர்ச்சியாக வரையப்பட்டிருக்க கூடும். அதிலும் வேறு வேறு கோணங்களில் வேறு வேறு அளவுப் பிரமாணங்களில் இந்தப் பறவைகளை வரைந்திருக்கிறார்கள். இதுபோக பாறை கீறல்களிலும் பறவையின் உருவங்கள் மகாராஷ்டிரா மாநிலத்தில் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்திலும் நீலகிரி, கிருஷ்ணகிரி மாவட்ட பாறை ஓவியங்களில் பறவை ஓவியங்கள் கிடைக்கப் பெறுகின்றன.


இன்று நாடு தழுவிய அளவில் பறவைகளை பாதுகாத்திட பல குழுக்கள் இருப்பதற்கு முன்னோடியாக அந்த காலத்திலேயே சிறந்த பறவைக்காப்பாளர்களாக வாழ்ந்திருப்பது கிடைக்கின்ற பாறை கீறல்கள், பாறை ஓவியங்களின் ஊடாகவும், இலக்கியங்களின் வாயிலாகவும் அறிந்துக்கொள்ள முடிகிறது.

நன்றி துவாரகன் அண்ணா.

நன்றி வரலாறு இதழ், தமிழ்த்துளி மற்றும் கூகுள்.



டெக்சாஸ் மேற்கு பகுதியில் உள்ள பாறை ஓவியம்



குருல்லன்கல பாறை ஓவியங்கள், இலங்கை



குருல்லன்கல பாறை ஓவியங்கள், இலங்கை



குருல்லன்கல பாறை ஓவியங்கள், இலங்கை



குருல்லன்கல பாறை ஓவியங்கள், இலங்கை



மஹாராஷ்டிர மாநிலத்தில் உள்ள கற்பாறை செதுக்குவேலை



செப்பேடுகள் வழி சோழர் வரலாறு - 2



மா.மாரிராஜன்
வரலாற்று ஆய்வாளர்
சோழர் வரலாற்று ஆய்வு சங்கம்
காரைக்கால்

இச்செப்பேட்டில் நமக்கு கிடைக்கக்கூடிய அவசியத்தரவுகள்.

விஜயாலயன் மகன் ஆதித்தன். அவனது மகன் பராந்தகன். அவன் கேரள இளவரசி ஒருவரை மணந்தான். வாணர் மற்றும் வைதும்பர்களை வென்றான். இராசசிம்ம பாண்டியனை வென்று மதுரையைக் கைப்பற்றினான்.

திருப்புறம்பியம் போர் பற்றிய செய்தி இச்செப்பேட்டில் மட்டுமே காணப்படுகிறது. வேறு எந்த ஒரு சோழர் சாசனத்திலும் திருப்புறம்பியம் போர் பற்றிய செய்தி இல்லை.

::உதயந்திரம் செப்பேடு::

முதாலாம் பராந்தகன்.

காலம் - கி.பி. 922

சோழர்களது செப்பேடுகளில் காலத்தால் மிகவும் மூத்தது உதயேந்திரம் செப்பேடு ஆகும்.

கி.பி. 1850 ஆண்டு வேலூர் மாவட்டம் குடியாத்தம் அருகே உள்ள உதயேந்திரம் என்னும் ஊரின் சௌந்திரராஜபெருமாள் கோவில் தர்மகர்த்தாவிடம் இச்செப்பேடு தொகுதிகள் இருந்தது. இச்செப்பேட்டை வாசித்த கல்வெட்டாய்வாளர் திரு ஹூல்சு அவர்கள் தென்னிந்திய கல்வெட்டுத்தொகுதி எண் 2 பாகம் 3 ல் 76 ம் எண் சாசனமாக பதிப்பித்தார்.

மதுரை கொண்ட கோப்பரகேசரி முதலாம் பராந்தகனின் 15 ஆம் ஆட்சியாண்டில் வெளியிடப்பட்ட செப்பேடு இது. இச்செப்பேட்டில் 7 பட்டைகள் உள்ளன. செப்பேட்டின் முதல் பகுதி வடமொழியிலும், இரண்டாம் பகுதி தமிழ் மொழியிலும் உள்ளது.

907 ல் ஆட்சிக்கு வந்த பராந்தகசோழனின் 15 ம் ஆட்சியாண்டில் இச் செப்பேடு வெளியிடப்பட்டதால் இச்செப்பேட்டின் காலம் கி.பி. 922. கங்கமன்னன் இரண்டாம் பிருத்விபதியின் வேண்டுகோளை ஏற்று, உதயச்சந்திரமங்கலம் என்னும் ஊரில் வாழும் பிராமணர்களுக்கு இரண்டு கிராமத்தை தானமாக வழங்கினார் சோழ வேந்தன் பராந்தகன். தானமாக வழங்கப்பட்டபகுதி வீரநாரயணச்சேரி என்று பராந்தகனது பெயராலே வழங்கப்பட்டது. இதற்கான அரச ஆணைதான் உதயேந்திரம் செப்பேடு.

இச்செப்பேட்டில் அதிமுக்கியமான வரலாற்றுத்தரவுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சோழ சரித்திரத்தில் மிகப்பெரும் பங்காற்றிய திருப்புறம்பியம் போர் பற்றிய குறிப்பு இச்செப்பேட்டில் மட்டுமே காணப்படுகிறது.

இனி செப்பேட்டில் காணப்படும் செய்திகளின் அவசியாமானவைப் பற்றியத் தொகுப்பு.

முதல் பகுதியில் சோழ அரச பரம்பரை பற்றியும், இரண்டாம் பகுதியில் கங்க மன்னர்களின் வரிசையும் உள்ளன. பிறகு தானம் பற்றிய செய்தி.

ஆரம்ப செய்யுட்கள் கடவுள் வாழ்த்துகளுடன் துவங்குகின்றன.

செய்யுள் 1&2

பெருமாள், சிவன், பிரம்மா, வாழ்த்துகள்.

செய்யுள் 3

திருமாலின் நாபியிலிருந்து பிரம்மா தோன்றினார். பிறகு மரீசி அதன் பிறகு கோத்திரத்தை உருவாக்கிய கச்யபர் அதன் பிறகு சூரியன் பிறகு ருத்திரசித், சந்திரசித். இந்தக் குலத்தில் அரசர்களின் உத்தமனான சிபி தோன்றினான்.

அவன் புறாவை காத்தவன்.

செய்யுள் 4 - 11

கோக்கிள்ளி, சோழன், கரிகாலன், கோச்செங்கணான் போன்ற அரசர்கள் தோன்றிய சோழர்குலத்தில் வெற்றித்திருமகனான விஜயாலயன் தோன்றினான். அவனுக்கு மகனாக ஆதித்தன் பிறந்தான். அந்த ஆதித்தனுக்கு மகனாக ஶ்ரீவீரநாரயணன் (பராந்தகன்) தோன்றினான். எதிரிகளுக்கு காட்டுத்தீ போன்றவன் கோவில்கள் எடுப்பது போன்ற காரியங்களில் ஈடுபட்டான்.கேரள அரசனின் மகளை மணந்தான். இரு பாண அரசர்கள் மற்றும் வைதும்பர்களை வென்றான். பாண்டியர் தலைவனை போரில் சீர்குலைத்த அவனது படை மதுரையை கைப்பற்றியது. பாண்டியன் இராசசிம்மன் தோற்று பின்வாங்கினான்.


செய்யுள் 12 முதல் கங்கர்களின் வம்சம் பற்றிய செய்திகள்.

கங்கர்குல முதல்வன் கொங்கணி, பாணர்களை வெல்வதற்காக பட்டாபிசேகம் செய்யப்பட்டான். ஸ்ரீவிஷ்ணுகோபன், அரி, மாதவன், துர்வினீதன், பூவிக்ரமன் பிறப்பால் பெருமைகொண்ட கங்கர் குலத்தில் சிவமாரனின் மகனாக பிருதிவீபதி (முதலாம்)

தோன்றினான்.

உதயேந்திரம் செப்பேட்டின் 18 வது செய்யுள் திரும்புறம்பியம் போர் பற்றிய செய்தியை பதிவு செய்கிறது.


வீரனான பிரிதிவீபதி திரும்புறம்பியத்தில் நடந்த போரில் வரகுணபாண்டியனை வென்றான். அபராஜிதனின் வெற்றியை உறுதி செய்துவிட்டு அப்போர்க் களத்தில் இறந்தான்.



செய்யுள் 19 - 28

முதலாம் பிருதிவீபதியின் மகனாக மாரசிம்மன்.அவனுக்கு (இரண்டாம்) பிருதிவீபதி பிறந்தான். இவன் அரசர்களில் சிங்கம் போன்றவன். பராந்தகச் சோழனிடமிருந்து பாணர்களுக்கு அரசனாகும் ஆணையான மாவலிவாணராயன் என்னும் பட்டம் பெற்றான். மகாபலியின் வழிவந்த பாணர்களின் அரசு அவனுக்கு வழங்கப்பட்டது அத்திமல்லன் என்னும் பெயரைப் பெற்றான். தான் வழங்கும் தானத்தை பராந்தகச் சோழன் பாதுகாக்கவேண்டும் என்று தலையால் வணங்கி கேட்கிறான். கடைக்காட்டூர் என்று பெயருள்ள கிராமத்தை உதயச் சதுர்வேதிமங்கலத்திற்குக் கொடுத்தான்.

சமணர்களுக்கு உரிமையான இரண்டு பட்டிகளை விலக்கி அரசன் நிலத்தை வணங்கினான்.



No. 76. UDAYENDIRAM PLATES OF PRITHIVIPATI II. (921-22). 385

Plate Vb.

[64.] णा नृपेण ॥ [२४*] पुण्यं समं कृतवताम् परिरक्षताश्च त-
[65.] द्रक्षतेति स परान्तक एकवीर[:।*] आगामिन[:*] क्षितिपतीन्[1]
[66.] प्रणमत्यनल्पमूर्द्धा स्म(।)रारिचरणाम्बुजशेखरेण ॥ [२५*]
[67.] भूमिं स दत्तवानस्मै [2]कटैक्कोट्टूरिति श्रुताम् [।*] उदयेन्दुचतुर्वे-
[68.] दिमंगलाय च पार्थिव[:*] ॥ [२६*] अत्र विद्याधिरीपट्टिदेवपट्टिरिति[3]
[69.] श्रुतम् [।*] एतत्पट्टिद्वयं पूर्वं भुज्यमानन्दिगम्परैः[4] [॥ २७*] द्वयमेतत्[5]
[70.] विहायात्र दत्तवांश्च स पार्थिवः [।*] एतत्[6] द्वयं प्रसिद्धं हि पूर्वं
[71.] क्षपणकान्वितम् ॥ [२८*] மதிரை கொண்ட கோப்பரகேசரிவற்மற்கு யாண்டு

Plate VIa.

[72.] பதினெட்டாவதுக்கு செம்பியன் மாவலிவாணராயர் விண்ணப்பத்தா-
[73.] ற்பெருமானடிகள் தம் பொரச்செய்த ஸ்ரீகூடமும் படுவூர்க்கோட்டத்து மேலடை-
[74.] யாறுநாட்டுக்கடைக்கோட்டூரை உதயசந்திரமங்கலத்தொடேய் கூட வீரநாராயண-
ச்சேரி
[75.] யென்று ஸ்ரீகூடமுஞ்செய்தமையில்லிதற்குக்கீழ்பாற்கெல்லை பாலாற்றின் இ-
[76.] முக்கிலிடையாற்றுக்கொல்லையின் கிழையாலும்மிதன் தெற்கு நோக்கிச்செ-
[77.] ல்ல மருதம்மிதன்தெற்கு நோக்கிச்செல்ல விண்ணமங்கலத்தாரேரிக்-
[78.] குப்பாய்ந்த வயிரக்காலுக்தென்கீழ்பாற்கெல்லை பாலாறுக்தென்பாற்கெல்-
[79.] லை எட்டிப்புஞ்சியும்மிதன் மேற்கு நோக்கியெதிர்சிற்றரியூர்ப்பாழின் வட-[7]
[80.] க்கிற்பன்னரும்மிதன்[8] மேற்கு நோக்கிபெற விண்ணப்புலியனேரியின் கீழ்-
[81.] கடைக்கொம்பிருவமும்மிதன் மேற்கு நோக்கிபெற வெவெக்கார் மூடவெம்[பு]-

Plate VIb.

[82.] ம்மிதன் மேற்கெறப்புளர்செபெம்மிதன் மேற்கெற இண்டக்குழக்கியின்
[83.] தெற்கிற்[பூ]தழும்மிதன்[9] மேற்கெற பெரியமலையனவும் மேல்பாற்கெ-
[84.] ல்லை நவிக்கும் பாறையும்மிதன் வடக்கு நோக்கிச்சென்று முப்பெண்-
[85.] டிர்குழக்கியும்மிதன் வடக்கு நோக்கிச்சென்று குதிரைவடியும்மி-[10]
[86.] தன் வடபாற்கெல்லையயமான்முன்னையும்மிதன் கிழக்கு
[87.] நோக்கியிழியப்பிடாம்புழையும்மிதன் கிழக்கு நோக்கியிழிய-
[88.] க்குராக்குட்டையும்மிதன் கிழக்கு நோக்கியிழியவோரொருமைச்சரியும்மி-
[89.] தன் கிழக்கு நோக்கியிழிய கக்காயனேரி வடக்கிலாலத்தொட்டை மெடும்மி-
[90.] தன் கிழக்கு நோக்கியிழிய பெரிய கன்னாரம்பும்மிதன் கிழக்கு நோக்கியிழியக்-
[91.] கல்லாலியொட்டைப்பட்ட பாறையும்மிதன் கிழக்கு நோக்கியிழிய பெரிய அரி-

Plate VII.

[92.] ஞ்சிலும்மிதன் கிழக்கு நோக்கியிழியப்பட்ட பாறையும்மிதன் கிழக்கு நோக்கி-
[93.] யிழிய அரிஞ்சிலொட்டைக்கற்குழம்பும்மிதன் கிழக்கு நோக்கியிழிய மொட்டை-

[1] Read °पतीन्. [2] Read कूटै°. [3] Read विद्याधरीपट्टिदेव°.
[4] Read °गम्परैः. [5] Read °तद्वि°. [6] Read एतद्द्वयं.
[7] The letters ... வட are engraved on an erasure.
[8] The first ... of பன்னர் is engraved on an erasure. [9] Read புதலும்.
[10] The யு of வடியும் is engraved on an erasure.

97



4. Udayendiram Plates of Pallavamalla; South-Indian Inscriptions, Vol. II. No. 74.
FULL-SIZE.



நாட்டு ரக மீன்கள் அறிமுகம்-02

உழுவை மீன்



இராமமூர்த்தி நாகராஜன்
சூழலியல் ஆர்வலர்
பூதலூர்

சித்தர் பாடல்களில் உழுவை மீன்:

"முழுதும் முடிக்கலாம் முள்ளுமில்லை அந்த
உழுவைக் குடற்பிணி விட்டோடும் - வழுவான
முன்மலமுஞ் சாறும் முதிர்கரப்பான் உண்டாகும்
வன்முலையாய் நீயறிந்து வை."

உழுவை மீன்

Common name: Tank goby.

Scientific name: Glossogobius giuris.

நமது உள்ளூர் ரக மீன்களில் மிக முக்கியமானது உழுவை மீன் ஆகும்.

வாழிடம்:

இவை ஆறு, குளம், ஏரி போன்றவற்றில் வாழும் நன்னீர் ரக மீன் ஆகும். இவை நீரின் அடியில் வாழும் வகை ஆகும். இவ்வாறு நீரின் அடியில் சேற்றில் கிண்டி உணவு தேட ஏற்றவாறு இதன் வாய் அமைப்பு உழும் வாய் போன்று உள்ளதால் இம்மீன் "உழுவாய்" என்றாகி பின் "உழுவை" மீன் என்று ஆகியிருக்கலாம் என நான் ஊகிக்கின்றேன்.

நீளம்:

அதிக பட்சமாக 50 செமீ வரை இயல்பு கொண்டிருந்தாலும் இயல்பாக 20 செமீ அளவிலேயே நிறைய இருக்கிறது.

எடை:

இது சிறு மீன் ரகமாதலால் அதிகபட்சமாக 200 கிராம் அளவில் இருக்கும்.

நிறம் மற்றும் தோற்றம்:

மஞ்சள் நிறத்தில் ஆங்காங்கே கறுப்புத் திட்டுக்கள் இருக்கும்.

இதன் பின் வால் அமைப்பு தூரிகை போன்று அழகாக இருக்கும். மீனின் அடியில் உள்ள துடுப்புகள் வட்ட வடிவில் இருக்கும். மற்ற மீன்களைப் போல் அல்லாமல் தட்டையான தலையில் சற்று மேல் புறத்தில் அருகருகே இரு கண்களும் இருப்பது இதன் தனித்துவம் ஆகும்.

உண்பவை:

இவை சிறு தாவரங்கள் மற்றும் பூச்சி புழுக்களை உண்ணும் அனைத்துண்ணி வகையைச் சார்ந்தது.

உணவு மீன்:

இயற்கையான சூழலில் மட்டுமே இம்மீன் கிடைக்கிறது. இதனை யாரும் வளர்ப்பு மீனாக வளர்ப்பது போன்று தெரியவில்லை.

உணவு:

இம்மீன் பிடித்த சற்று நேரத்துக்கெல்லாம் இறந்து விடும் குணம் உடையது. மேலும் இதனை குழம்பு சமைக்கும் போது கொஞ்சம் அதிகமாக சூடுபடுத்தினாலே மீன் உடைந்து கரைந்து விடும. ஆனால் சிறிதளவே முட்கள் கொண்ட மீன் இது. சிறு குழந்தைகளுக்கும் எளிதில் சீரணமாகும் மீன் வகை இதுவாகும்.

சித்தர் பாடல்களில் உழுவை மீன்:

"முழுதும் முடிக்கலாம் முள்ளுமில்லை அந்த

உழுவைக் குடற்பிணி விட்டோடும் - வழுவான

முன்மலமுஞ் சாறும் முதிர்கரப்பான் உண்டாகும்


வன்முலையாய் நீயறிந்து வை."

உழுவை மீனை உண்பவர்களுக்கு குடலில் உண்டாகும் நோய்கள் அனைத்தும் போகுமென்றும், பழைய மலத்தை வெளியாக்கி மலச்சிக்கலை நீக்குமென்றும், கரப்பான் உண்டாக்குமென்றும் சொல்லப்படுகிறது. சித்த மருந்துகளை உட்கொள்பவர்கள் கூட கூட இம்மீனை பத்திய உணவாக பயன்படுத்தலாம். முள் அதிகமில்லாத இம்மீனை உண்பவர்களின் தேகம் ஆரோக்கியம் எய்தும் என்பதை மேற்கண்ட சித்தர் பாடல் விளக்குகிறது.

ஆதாரம்: மீன்கள் அன்றும் இன்றும், முனைவர் ச.பரிமளா, தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீடு.


















பேய்கள் சில குறிப்புகள்

காந்த்திறம் உரைத்த காதையில் இடாகினிப் பேய்

"சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளில் சென்றாங்கு

இடுபிணந் தின்னும் இடாகினிப் பேய்வாங்கி

மடியகத்து இட்டாள் மகவை"



வே.பார்த்திபன்
ஆற்றுப்படை
திருச்சி

இந்த உலகத்தில் ஆவி பேய் உள்ளனவா. பேய் எப்படி இருக்கும், உலகம் முழுவதும் பேய்கள் உள்ளன என்பதை எப்படி நம்புகின்றனர். ஆவிகள் மனிதர்களுடன் தொடர்பு கொள்கின்றனவா? என நீண்டதொரு விவாதம் நிகழ்ந்து வருகிறது!

பேய்கள் குறித்து நம் இலக்கியத்திலும் கல்வெட்டிலும் வருவதை காண்போம்.

போர்க்களத்தில் பேய்:

பல்லவ அரசன் இரண்டாம் நந்திவர்மன் இன்றைய கண்டியூருக்கு அருகே தனது அரண்னையில் தங்கியிருந்தபோது, பாண்டியன் அரிகேசரி பராங்குச மாறவர்மன் பெரும்படையுடன் வந்து முற்றுகையிட, நந்திவர்மனின் தளபதி உதயசந்திரன் திருத்தணி அருகேயிருந்தும்,மாறன் பரமேஸ்வரன் எனும் முத்தரையரும் ஒன்றிணைந்து நிம்பவனம், சூதவனம்,மண்ணைக்குறிச்சி,சூரவந்தூர் முதலிய இடங்களுக்கு விரட்டி சென்று பாண்டியனை தோற்கடித்தனர்.

அப்போது சுவரன்மாறன் எனும் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர் இளைஞராய் இருந்து தன் தந்தையுடன் போருக்கு சென்றிருக்க வேண்டும்.இந்த வெற்றியினை தனது மெய்கீர்த்தியில் பொறித்து வைக்கிறார்.முதன்முதலாய் மெய்கீர்த்தியை அறிமுகப்படுத்தியவர் இவரே.

இம்மன்னனனது கொடியாக கயலுடன் கூடிய வேல் கொடி இருந்துள்ளதை அவரது மெய்கீர்த்தி கூறுகிறது.

இம்மன்னன் மணலூரில் ஒரு பெரும்போர் நடத்தி வெற்றி பெருகிறார். இதில் இம்மன்னனை எதிர்த்து போர்புரிந்தவர்கள் மரணமடைந்து அந்த பூமியே இரத்தத்தால் சிவந்து கிடந்ததாகவும், இறந்துகிடந்த பிணங்களிலின் மேலே கழுகுகள் அமர்ந்து குடலை பிய்த்து திண்பதாகவும், பிணங்களுக்கு மத்தியில் பேய்கள் நிறைய உலாவருவதாகவும், இக்காரியத்தை செய்தது பெரும்பிடுகு முத்தரையனின் வாள் என்கிறது செந்தலையில் உள்ள கல்வெட்டு.

கல்வெட்டில் "பேய்" குறித்து வரும் முதல் தகவல் இது. இதனை கோட்டாற்று **இளம்பெருமானார் எனும் புலவர்**

"ஒழுகு குருதியுடனொப்ப வோடிக்

கழுகு கொழுங்குடர்கவ்வ– விழிகட் பேய்"

என அழகுதமிழில் பாட அந்த பாடல் அழகிய கல்வெட்டெழுத்தாய் முத்தரைய சிற்பிகளால் வெட்டப்படுகிறது.

இடாகினிப்பேய்:

சிலம்பில் மாலதி எனும் பெண் தனது கணவனின் முதல் மனைவியின் குழந்தை அழுததைக் கண்டு தூக்கி எடுத்து பால் ஊட்டுவாள். அந்தக் குழந்தை அதீத பால்குடித்து மூச்சுத் திணறி இறந்துவிடும். குழந்தையை பெற்றெடுத்த அவளது சக்கலத்தி இவளை ஏசிவாடுவாள்.

''என் பிள்ளையை உயிருடன் கொண்டு வந்து தா'' என் அவள் கூற, மாலதி அக்குழந்தையுடன் சுடுகாட்டுக்கு செல்வாள். அங்கு இடாகினிப் பேய் வந்து அவளிடமிருந்து குழந்தையைப் பறித்துக் கொண்டு போய்விடும். அப்போது பாசண்டச் சாத்தான் எனும் தெய்வம் இடாகினியிடமிருந்து குழந்தையைப் பறித்து அதற்கு உயிருண்டாக்கிக் கொடுத்ததாய் சிலம்பு கூறுகிறது.

மேலும், காந்த்திறம் உரைத்த காதையில் இடாகினிப் பேய்

"சுடுகாட்டுக் கோட்டத்துத் தூங்கிருளில் சென்றாங்கு

இடுபிணந் தின்னும் இடாகினிப் பேய்வாங்கி

மடியகத்து இட்டாள் மகவை"

என்ற வரிகளில் இடாகினி என்பவள் ஒரு பிணம் தின்னிப் பேய் என்பது தெளிவாகிறது.

சிலம்பு கூறும், பாசாண்ட சாத்தன் இன்று அய்யனாராகவும், கொற்றவை துர்க்கையாகவும் மாறியிருக்க வாய்ப்பு அதிகம். சிலம்பு குறிப்பிடும் அத்தனை விஷயங்களும் தொண்டைநாடு மற்றும், நடுநாட்டில் அப்படியே பிரதிபலிக்கிறது. ஜவ்வாது மலைப்பகுதியில் சிலப்பதிகார வழக்காற்றுபடியே இன்னும் கொற்றவையை "சூலி" என்றழைத்துவருவது குறிப்பிடத்தக்கது.

இடாகினிப்பேயின் இந்த சிற்பம் விழுப்புரம் அருகே இன்றும் வழிபாட்டில் உள்ளது.


இலக்கியத்தில் பேய்கள்
கவிசெந் தாழிக் குவிபுறத்து இருந்த
செவிசெஞ் சேவலும் பொகுவலும் வெருவா,
வாய் வன் காக்கையும் கூகையும் கூழப்
பேஎய் ஆயமொடு பெட்டாங்கு வழங்கும்
காடுமுன் னினனே, கட்கா முறுந
(புறநானூறு)
கள்ளை விரும்பும் காவலன் காட்டில் கிடக்கிறான்.
அவனை இடுவதற்காக வைக்கப்பட்டிருக்கும்
தாழியின்மேல் செம்பருந்தும், பொகுவல் என்னும்
பிணம்தின்னிக் கழுகும் அஞ்சாமல் காத்திருக்கின்றன.
வாய் வலிமை கொண்ட காக்கை, கோட்டான்,
பேய்க்கூட்டம் முதலானவும் சுழன்றுகொண்டிருக்கின்றன.


இலக்கியத்தில் பேய்கள்
"அளகுடைச் சேவல் கிளை புகா ஆர,
தலை துமிந்து எஞ்சிய மெய் ஆடு
பறந்தலை,அந்தி மாலை விசும்பு கண்டன்ன
செஞ் சுடர் கொண்ட குருதி மன்றத்து,
பேஎய் ஆடும் வெல்போர்
வீயா யாணர் நின்வயினானே"
(பதிற்றுப்பத்து)
போர்களத்தில் பேய்கள் ஆடுகின்றன. தலை
துண்டுபட்ட வீரர்களின் முண்டங்கள் ஆடுகின்றன.
யானைகள் வெள்ளைக் கொம்புகள் வெட்டப்பட்டுக்
கிடக்கின்றன. தேர்த் திகிரி உடைந்து கிடக்கிறது.
குதிரைகளும் சாய்ந்து கிடக்கின்றன. பேய்கள்
வயிறார உண்கின்றன


இலக்கியத்தில் பேய்கள்
"மன்னெயில் முகவைக்கு வந்திசின், பெரும!
பகைவர் புகழ்ந்த அண்மை, நகைவர்க்குத்
தாவின்று உதவும் பண்பின், பேயொடு
கணநரி திரிதரும் ஆங்கண், நிணன் அருந்து
செஞ்செவி எருவை குழீஇ,
அஞ்சுவரு கிடக்கைய களங்கிழ வோயே!"
(புறநானூறு)
சோழன் குரைப்பள்ளி துஞ்சிய கிள்ளிவளவனை
பார்த்து கோவூர்கிழார்,உன் ஆண்மைத் திறத்தைப்
பகைவர்களும் புகழ்கின்றனர். நண்பர்கள் [நகைவர்]
குறைபட்டுக்கொள்ளாமல் நீ உதவுகிறாய். நீயோ
பேயும், நரியும், பருந்தும் கறி தின்னும்
போர்க்களத்திலேயை கிடக்கிறாய் என்கிறார்.


இலக்கியத்தில் பேய்கள்
"முடித்தலை வெள்ளோட்டு மூளைநெய் யாகத்
தடித்த குடர்திரியா மாட்டி எடுத்தெடுத்துப்
பேஎய் விளக்கயரும் பெற்றித்தே செம்பியன்
சேஎய் பொருத களம்"
(முத்தொள்ளாயிரம்)
செம்பியன் போரிட்ட களத்தில் பேய் விளக்கு
வைத்திருந்தது. மன்னரின் தலைமண்டை விளக்கின்
ஓடு. அவர்களின் மூளை நெய். அவர்களின் குடல்
திரி. இப்படிப் பேய்கள் விளக்கு வைத்து
(கார்த்திகை) விழாக் கொண்டாடின

இலக்கியத்தில் பேய்கள்



"சுழலும் அழல்விழிக் கொள்ளிவாய்ப்பேய்
சூழ்ந்து துணங்கையிட் டோடிஆடித்
தழலுள் எரியும் பிணத்தைவாங்கித் தான்தடி
தின்றணங் காடுகாட்டிற்
கழல்ஒலி ஓசைச் சிலம்பொலிப்பக் காலுயர்
வட்டணை இட்டுநட்டம்
அழல்உமிழ்ந் தோரி கதிக்க"

(பதினோறாம் திருமுறை)

எரியும் பிணத்தை சுற்றி
இருகைகளையும் மடக்கி பேய்கள்
கூத்தினை "துணங்கை கூத்து" என
இப்பாடல் தெரிவிக்கிறது.

இலக்கியத்தில் பேய்கள்



"பெருநெடும்பசி பெய்கல மாவன பிற்றை
நாளின்முன் னாளின்மெ லிவன
கருநெ டும்பனங் காடும முமையுங் காலுங்
கையுமு டையன போல்வன
வாய் வயிறு முழங்கால்கள்"

(கலிங்கத்துப்பரணி)

பேய்களின் உடல், அவைகளின்
நீண்ட கொடூர கைகால்கள் குறித்து
இப்பாடல் வர்ணிக்கிறது.

இலக்கியத்தில் பேய்கள்



"கொடுவில் எயினர்தம் கொல்படையால் வீழ்ந்த
தடிநிணம் மாந்திய பேஎய் நடுகல்
விரிநிழல் கண்படுக்கும் வெங்கானம் என்பர்
பொருள்புரிந்தார் போய சுரம்".

(ஐந்திணை ஐம்பது)

"பொருள்வயின் பிரிந்த எம் தலைவர் சென்ற பாலை நிலத்துவழி, வளைந்த வில்லினையுடைய வேட்டுவர் தம்முடைய கொலைக் கருவிகளால் வீழ்த்திய தசையையும், கொழுப்பையும் தின்ற பேய்கள் போரிலே மடிந்தாரின் பெயர் வரையப்பட்ட நடுகல்லின் நிழலில் உறங்கும் படியான கொடிய காட்டிலே உள்ளது என்று சொல்வர்" என்று தலைவி தோழியிடம் தலைவன் பிரிந்து சென்ற பாலை நிலத்தின் கொடிய தன்மையை எடுத்துக் கூறினாள்.

கல்வெட்டில் பிசாசு



கல்வெட்டு:

"ஸ்வஸ்திஶ்ரீ திருக்கோளக்கு(டி)
முன்பில் ஊருணி மூவேந்தந் எ
ந்நும் பசாசிந் பேர்

திருக்கோளக்குடியில் உள்ள ஓர் ஊருணிக்கு மூவேந்தன் எனும் பைசாசத்தின் பெயரை வைத்துள்ளனர். இந்திய அளவில் பிசாசு குறித்துள்ள ஒரே கல்வெட்டு இதுவேயாகும்.



தேசூர் நடுகற்கள்



பாலாஜி கிருஷ்ணமூர்த்தி
இயந்திரவியல் பொறியாளர்
கும்பகோணம்

காலம் உருண்டோடியது. பிற்காலங்களில் அந்த கோட்டை இருந்த இடத்திலேயே பலமுறை சிதைந்தும் மீண்டும் எழுப்பப்பட்டும் சுழற்சிகள் நடந்த வண்ணம் இருந்தன. எனினும் அந்த நடுகற்களுக்கு செய்யப்படும் மரியாதை மட்டும் பண்பு மாற்றம் கொண்டாலும் நின்றுவிடவில்லை. கடைசியாக அங்கே அந்த கோட்டை இசுலாமியர் வசம் இருந்திருக்கிறது. அதனுள்ளே ஒரு கோரியும் எழுப்பட்டிருக்கிறது. வருடத்துக்கு ஒரு முறை அருகில் இருக்கும் பச்சையம்மனுக்கு நடக்கும் படையலோடு, கொற்றம்பக்கிழாருக்கும், அவர் மகன் சீலனுக்கும் மற்ற மூவருக்கும் படையல் நடக்கிறது.

பொயு (கிபி) ஐந்தாம்-ஆறாம் நூற்றாண்டின் ஒரு அழகான காலை வேளை!

அவசரமாக வந்திருந்த கோட்டைக்காவலனுக்கு நீர் தந்து ஆசுவாசம் செய்தார் கொற்றம்பக்கிழார். சீயமங்களம் குடவரை பணிகளுக்காக வந்தவரை கோட்டைமேடு காவலன் நேராக அங்கேயே சந்திக்க வேண்டிய அவசரம் யாதென வியந்தார். ஆசுவாசம் கொள்ள நேரமில்லை அப்பா. கோட்டைமேடு மீண்டும் தாக்குதலுக்குள்ளாகியிருக்க வேண்டும் என்றே எண்ணுகிறேன் என்றபடியே ஏரியிலிருந்து குத்துகல் வழிபாட்டை முடித்துக்கொண்டு வந்த அவர் மகன் சீலன் பொறுமினான்.

எதிரிகளாக இருப்பின் கச்சிக்கு தகவல் தரலாம். இவர்கள் எங்கிருந்து வருகின்றனர் என்றே அறியக்கூடவில்லையடா என்றபடியே, செய்தி கொண்டு வந்தவனிடம் மயேந்திர போத்தரசரிடம் சேரப்பிக்குமாறு ஓலைத்துணுக்கு ஒன்றை தந்தார். பின், தன் மகனிடம் திரும்பி, இம்முறை அவர்களை விடக்கூடாது சீலா, கிளம்பு. நானும் வருகிறேன், இன்றைக்கே அவர்களுக்கு நாம் முடிவுரை எழுதிவிட வேண்டும் என்றபடியே குதிரையில் தாவி ஏறினார் அந்த பாணரைசியர் குலக் கிழார். என்ன காரணத்தினால் அந்த எதிரிக்கூட்டம் நம்மை தொடர்ந்து கிளரிக்கொண்டே இருக்கின்றனர், ஒருவேளை நம் செல்வம் அவர்களுக்கு வேண்டுமா, நம் ஆநிரைகள் வேண்டுமா, எதுவாக இருந்தாலும் இன்று விடக்கூடாது என்றவாரே பயணித்து அந்த கோட்டைக்கு வந்த போது, இன்னமும் தள்ளுமுள்ளு நடந்துக்கொண்டிருந்தது. இவர்களை கண்டதும், அந்த வீரர் கூட்டம் இவர்களைத் தாக்க வந்தது. கடும் போரின் முடிவில், இருபக்கமும் உயிரிழப்புகள் நேர்ந்தன. தந்தையும் மகனும் கோட்டைத் தளபதியும் இன்னும் இருவீரர்களும் மாண்டனர். அந்திசாய்ந்த நேரத்தில் போர் ஓய்ந்தது. அந்த இரவு நேரத்தில் அங்கே நிசப்தமான சூழலில், நரிகளும் வெளிவரத் துவங்கின. காயமடைந்து கிடந்த வீரர்களின் அலரலும் அடங்கிக் கிடந்தது. மெல்ல ஊர் மருத்துவக்குழு பாணரைசியர் குலத்தோர்களை தேடி பிடித்து காயமடைந்தோருக்கு மருத்துவம் செய்தும், இறந்தோரின் உடலை தனியாக பிரிக்கும் பணியிலும் ஈடுபட்டனர். சிலர் நரிகளை விரட்டிக்கொண்டிருந்தனர். கிழக்கே வெள்ளி எழுந்த நேரத்தில், கச்சியிலிருந்து படைகள் வந்து சேர்ந்தன. உடனடியாக கோட்டைக்காவல் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது. தலைமை ஏற்று வந்த தளபதி, அங்கிருந்த மருத்துவர்களிடம் ஏதோ சொல்ல, கொற்றம்பக்கிழாரின் உறவுகளுக்கு தகவல் அனுப்பபட்டது. அன்று மாலை, அந்த கோட்டை வளாகத்தில் உள்ளேயே, கொற்றம்பக்கிழாருக்கும் அவர் மகன் சீலனுக்கும் நடுகற்கள் எடுக்கப்பட்டு, இன்னார் என்று கல்வெட்டுகளும் பொறிக்கப்பட்டன.

காலம் உருண்டோடியது. பிற்காலங்களில் அந்த கோட்டை இருந்த இடத்திலேயே பலமுறை சிதைந்தும் மீண்டும் எழுப்பப்பட்டும் சுழற்சிகள் நடந்த வண்ணம் இருந்தன. எனினும் அந்த நடுகற்களுக்கு செய்யப்படும் மரியாதை மட்டும் பண்பு மாற்றம் கொண்டாலும் நின்றுவிடவில்லை. கடைசியாக அங்கே அந்த கோட்டை இசுலாமியர் வசம் இருந்திருக்கிறது. அதனுள்ளே ஒரு கோரியும் எழுப்பட்டிருக்கிறது. வருடத்துக்கு ஒரு முறை அருகில் இருக்கும் பச்சையம்மனுக்கு நடக்கும் படையலோடு, கொற்றம்பக்கிழாருக்கும், அவர் மகன் சீலனுக்கும் மற்ற மூவருக்கும் படையல் நடக்கிறது. அந்த கோரியிலும் இசுலாமியர் வந்து வணங்கி செல்கின்றனர். மற்றபடி ஆள் அரவமற்ற அந்த திடலில் ஊர் மக்கள் மாடுகளை மேய்ச்சலுக்கு கட்டிவிடுகின்றனர்.

கூகுள் மேப்பில் பார்த்தால் அந்த கோட்டை இடம் அழகாக தெரிகிறது. சீயமங்களம் செல்வோர் ஒரு பத்து நிமிடம் கூடுதலாக செலவழித்தால் இந்த நடுகற்களை காணலாம். சென்ற ஆண்டு நவம்பர் மாதம் திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆர்வலர் திரு பாலமுருகன் இவற்றை வெளிக்கொணர்ந்தார். இந்த இடத்திற்கு செல்ல அவரே வழியும் சொல்லி உதவினார். அவருக்கும் எங்கள் நன்றி.

நிகழ்வு உண்மை, நிகழ்ந்த விதம் நம் எழுத்தாக்கம்.







தலைவனுக்காக தன்னுயிர் ஈந்த சரதேவன்



"சிவத்தமிழ்ச் செல்வர்"

பி.திருச்சிற்றம்பலம் *M.Sc., M.A, DIAE, DCT,*

திருவாவடுதுறை ஆதீனப் பேராசிரியர்

குன்றத்தூர், சென்னை -69

"வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென

நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு

உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து

மயிர்க்கண் முரசொடு வான்பலியூட்டி"

- சிலப்பதிகாரம்

உயிர்க்கொடை:

பழங்காலத்தில் மன்னர்கள் போரில் வெற்றிபெறவும் உடல்நலம் குன்றியிருப்பின் விரைவில் உடல்நலம் பெறவும் வீரம் செறிந்த போர்க்குடியினர் இறையருளை வேண்டி கொற்றவை தெய்வம் முன் தங்களைத் தாங்களே பலியிட்டுக் கொள்வர். இவ்வாறான வழக்கம் சங்க காலம் முதற்கொண்டே நம்மிடையே இருந்து வந்துள்ளன. இதனை சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், நடுகற்கள், கொற்றவை சிற்பங்கள், கல்வெட்டுகள் என பல்வேறு ஆவணங்களின் மூலம் நம்மால் அறியமுடிகிறது.

மேலும் அவ்வாறு உயிர்த் தியாகம் செய்தோரை நினைவு கூறும் வகையில் நன்றி உணர்வோடு அவர்களுக்கான நடுகற்களை எடுப்பித்து வழிபட்டுள்ளனர். குறிப்பாக அந்நடுகல்லில் உயிர்த் தியாகம் செய்தவரின் உருவத்தை செதுக்கி அருகிலேயே அவரது பெயர் தந்தையார் பெயர் ஊர் மற்றும் என்ன காரணத்திற்காக உயிர்த்தியாகம் செய்தார் என்பதையெல்லாம் குறிப்பிட்டும் அவருக்கான பலி வழிபாடுகள் செவ்வனே தொடர்வதற்கு உண்டான நிலதான விபரங்களையும் கல்வெட்டாக வெட்டியுள்ளனர்

பின்வரும் சந்ததியினரும் அறியும் விதமாக...

அரிகண்டம்:

அவ்வாறு உயிர்த்தியாகம் செய்யும் முறைகளில் ஒன்று "அரிகண்டம்" என்ற வகையாகும். அதாவது வீரன் ஒருவன் தம்மைத்தாமே வாளால் கழுத்தை அரிந்து கொண்டு உயிர் தியாகம் செய்வது. குறிப்பாக தன் தலையை ஒரு கையால் பிடித்துக் கொண்டு மறுகையால் வாள் கொண்டு கழுத்தினை அறுத்து கொற்றவைக்கு பலி கொடுப்பர்.

அவ்வாறு பலி கொடுக்கும் பொழுது தரையில் அமர்ந்த நிலையிலோ அல்லது நின்ற நிலையிலோ வீரனானவர் இருப்பார். அரச விசுவாசிகளான படை வீரர்கள் தம்மைத் தாமே பலியிட்டுக் கொள்வதற்கான பலிபீடங்கள் புகார் நகரில் இருந்ததை இளங்கோவடிகள் கீழ்காணும் பாடல் வரிகளின் மூலம் தெரியப்படுத்துகின்றார்.

"வெற்றி வேந்தன் கொற்றம் கொள்கென

நற்பலி பீடிகை நலங்கொள வைத்தாங்கு

உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல் முழக்கத்து

மயிர்க்கண் முரசொடு வான்பலியூட்டி"

- சிலப்பதிகாரம்

நடுகல் வழிபாடு:

நடுகல்லுக்கு நடைபெற்ற வழிபாட்டினைப் பற்றி மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனாரும் புறநானூற்றில் குறிப்பிடுகிறார்,

"புடை நடுகல்லின் நாள் பலி ஊட்டி

நன் நீராட்டி நெய் நறை கொளீஇய

மங்குல் மா புகை மறுகு உடன் கமழும்"

அதாவது நடப்பட்ட நடுகல்லுக்கு விடியற்காலையில் படையல் செய்து நல்ல நீரால் நீராட்டி நெய்விளக்கு ஏற்றியதால் உண்டாகிய மேகம் போன்ற கரிய புகை தெருவெல்லாம் மணக்குமாம்.. அத்துடன் மயிற்பீலியையும் நறுமணம்மிக்க மலர்களையும் சூட்டி வழிபட்டுள்ளனர்.

வரலாற்றில் பாகசாலை அரிகண்டம்:

இத்தகைய சிறப்பிற்குரிய அரிகண்ட சிற்பம் ஒன்று திருவள்ளூர் மாவட்டம் பேரம்பாக்கம் அடுத்த பாகசாலை என்னும் கிராமத்தில் உள்ளது. அவற்றின் சிறப்பைக் காண்போம்.

பாகசாலை:

சான்றோர் உடைய தொண்டை நாட்டின் பாலாற்றின் கிளைநதியான குசஸ்தலை ஆற்றின் கரையில் அமையப்பெற்ற ஊர் பாகசாலை ஆகும். இவ்வூரில் தொண்டைநாட்டிற்கே உரிய பிரம்மா சாஸ்தாவிற்கான ஆலயமும் திருமால் சிவன் மற்றும் பொன்னியம்மனுக்கான ஆலயமும் அமைந்துள்ளன.

இத்தலம் அருணகிரிநாதர் பாடிய சிறப்பிற்குரிய திருத்தலமாகும்.

"பாக நாள் மலர் சூடும் சேகரா.

மதில் சூழ் தென் பாகை மா நகர் ஆளும் குமரேசா..."

என முருகப்பெருமானை பாடிப்பரவியுள்ளார்.

பாகசாலை அரிகண்ட சிற்பம்:

பல்லவர் காலத்திலேயே சிறப்புடன் திகழ்ந்த பழம்பெரும் கிராமம். இவ்வூரின் பிரதான கிராம தேவதையாகத் திகழ்பவள் அருள்தரும் பொன்னியம்மன் என்கிற சப்தமாதர் திருக்கோயில் ஆகும். இக்கோயிலின் எதிரே பலிபீடத்திற்கு அருகில் பெரிய பலகைக் கல் ஒன்றில் அரிகண்ட சிற்பம் அமர்ந்த நிலையில் எழுத்துப்பொறிப்புடன் 175 செ.மீ நீளமும் 110 செ.மீ அகலத்தோடு தனித்துவமாக காணப்படுகிறது.

இதன் காலம் பொ.யு. 966. கன்னரத்தேவரின் இருப்பது ஏழாம் ஆண்டை சேர்ந்ததாகும்.

இவ்வூரின் அருகிலுள்ள தக்கோலத்தில் தான் முதலாம் பராந்த சோழனின் படைகளும் இராஷ்டிரகூட மன்னன் மூன்றாம் கிருஷ்ணன் என்னும் கன்னரத்தேவனுக்கும் இடையே பெரும்போர் நிகழ்ந்தது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். இப்போரிலேயே கங்க மன்னன் இரண்டாம் பூதுகனால் சோழ இளவரசர் இராஜாதித்தர் கொல்லப்பட்டார். கன்னரத்தேவன் வெற்றி பெற்று காஞ்சி மண்டலத்தை கைப்பற்றி ஆட்சிபுரியலானான்.

சிற்ப அமைப்பு:

பத்மாசன நிலையிலுள்ள வீரர் தனது இடது கையில் தலையின் குடுமியைப் பிடித்து, வலது கையால் கழுத்தை அரியும் நிலையில் காட்டப்பட்டுள்ளார். கழுத்தில் அணிகலன், மார்பில் சன்னவீரம், இடுப்பில் அரையாடை, கைகளில் காப்பு முதலியன உள்ளன. வலது பக்கம் குத்து விளக்கு ஒன்றும் அவ்வீரரின் இருபுறமும் கல்வெட்டு வரிகளும் இடம்பெற்றுள்ளன.

தன்னுயிர் ஈந்த வீரத்திருமகன் சரதேவன்:

கிழவன் நாகன் என்பவன் சேந்தமான் குன்றில் நடந்த போரில் வெற்றி பெற்றதன் நினைவாக, பாசாலியைச் சேர்ந்த கையிலாயன் மகன் சரதேவன் என்பவர் தன்தலையை அரிந்து பிடாரிக்கு வெற்றிக்காணிக்கையாக கொடுத்துள்ளார். அவரின் உயிர்தியாகத்தை போற்றும் வகையில் அவருக்கு நடுகல் எடுப்பிக்கப்பெற்று அர்ச்சனா போகமாக அரைக்கால் நிலம் விடப்பட்டு, இதன் வருவாயைக் கொண்டு 15 வாரம் ஒரு முறை வழிபாடு செய்ய வேண்டும் என்று கல்வெட்டில் வெட்டியுள்ளனர்.

கிழவன் நாகனுக்காக தன்னுயிரையே அளித்த சரதேவனின் வீரமும் உயிர்த் தியாகமும் என்றென்றும் போற்றப்படவேண்டியவை.



பாகசாலை அரிகண்ட சிற்பம்

சங்ககால இசைக்கருவிகள்



முனைவர்.கி.சிவகௌரி

இசை ஆராய்ச்சியாளர்

போர் தொடங்குவதற்கு முன் முரசை வழிபட்டனர். முரசை மன்னருக்கு நிகராகப் போற்றி வழிபடும் மரபு அக்காலத்தில் இருந்தது. போர்த் தொடங்கும் முன் வஞ்சினம் கூறி முரசை வழிபடும் மரபு இருந்தது. நல்லாட்சி செலுத்தும் மன்னனின் ஆட்சி நீடிக்க வேண்டுமென்றால் அம்மனினன் நலமுடன் வாழவேண்டும். அவன் முரசிற்கு எவ்விதத் தீங்கும் வரக்கூடாது. அப்போது தான் மன்னன் நல்வாழ்வு பெறுவான். அந்நாட்டு மக்களும் வறுமையின்றி. கொடுமையின்றி வாழ்வர். மன்னனும் அவன் முரசும் நலமுடன் வாழவேண்டும் என்று மக்கள் முரசிற்கு வழிபாடு செய்வர். பாண்டிய மன்னனின் முரசிற்கும் பாண்டியனுக்கும் தீங்கு நேராதிருக்கும் பொருட்டு ஆயர்குடி மக்கள் வேண்டுதல் நடத்தினர் என்பதை,

"முரைசு கெழு முதுகுடி முரண்மிகு செல்வதற்கு

தீது இன்று பொலிக எனத் தெய்வக்கடி அயர்மார் "

எனும் கலித்தொகை பாடலடிகள் விளக்குகின்றன.

சங்ககால மக்கள் ஏராளமான இசைக்கருவிகளை இசைத்து மகிழ்ந்துள்ளனர்.

இவற்றை இசைக்கருவிகள் எனவும் தாளக்கருவிகள் எனவும் வகைப்படுத்தலாம் இசைக்கருவிகளில் குழல். யாழ், வங்கியம் ஊது கொம்பு, தூம்பு, போன்ற கருவிகளும், தாளக்கருவிகளில் முரசு, பறை, முழவு, மத்தளம், சிறுபறை, கரடிகை, சல்லி, ஒருகண் மாக்கிணை, பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, குடமுழா, தக்கை, தமருகம், தண்ணுமை போன்ற பல்வேறு இசைக்கருவிகளை சங்ககால இசைக்கலைஞர்கள் பயன்படுத்தினர்.

இசைக்கே ஒரு துணை போல விளங்கும் இசைக்கருவிகள் வாசிப்பவரை அக்கருவிகளின் பெயர் கொண்டே அழைப்பதை,

"துடியன், பாணன் பறையன் கடம்பனென்று

இந்நான்கல்லது குடியும் இல்லை"

என்று புறநானூறு குறிப்பிடுகிறது.

தோற்கருவிகளின் வகைகள்

தோலால் மூடி பரப்பி, போர்த்தப்பட்ட இசைக்கருவிகள் தோற் கருவிகளாகும். சங்ககால இலக்கியங்களில் தண்ணுமை முழவு முரசு பறை துடி தட்டை முதலான தோற்கருவிகள் பற்றியக் குறிப்புகள் குறிப்பிடுகின்றது.

தண்ணுமை

பண்டையக் காலத்தில் தண்ணுமை மிகச் சிறந்த தோற் கருவியாக விளங்கியுள்ளது. தண்ணுமைக் குரலில் வெறியூட்டும் ஆற்றல் இங்குக் குறிப்பிடப்படுகிறது. பாணர்கள் தண்ணுமைக் கருவியை அடித்து முழக்கியுள்ளனர் என்பதை நற்றிணைப் பாடல் குறிப்பிட்டுக் காட்டுகிறது.

"கன்றுபெறு வல்சிப் பாணன் கையதை

வள்ளுயிர்த் தண்ணுமை போல"

பாணன்

கையில் வள்ளுயிர்த் தண்ணுமை இருந்த செய்தியை அறிய முடிகின்றது. தண்ணுமை மற்ற இசைக் கருவிகளுடன் இணைந்தும் ஒலிக்கப்பட்டுள்ளது.

“தட்டை தண்ணுமை பின்னர் இயவர்

தீங்குழல் ஆம்பலின் இனிய விமிரும்

புதன்மலர் மாலையும்”

தட்டையுடன் தண்ணுமையும் குழலிசையும் இனிமையாக இசைக்கப்பட்டுள்ளது. முல்லை நிலத்தில் மாலைக் காலத்தில் இந்த இசை நிகழ்ச்சி நடைப்பெறுகிறது. வாழ்வில் இன்பத்திற்கு உதவியச் செய்தியை ஐங்குறுநூறுப் பாடல் நமக்குத் தெளிவாக உணர்த்திச் செல்கின்றது.

"மடிவாய்த் தண்ணுமை நடுவண் ஆர்ப்ப”

இக்குறிப்புக்களில் தண்ணுமை என்றக் கருவியில் ஓசை எழுப்பும் நடுப்பட தற்காலத்து மிருதங்கம் என்ற கருவியுடன் ஒப்பிடலாம் .

சிலப்பதிகாரத்தில்,

“தாழ்குரல் தண்ணுமை யாடலொடு”

என்னும் சிலப்பதிகாரக் குறிப்பிலிருந்து இக்கருவியின் ஒலி தாழ்ந்த ஓசையையுடையக் குரலுக்குப் பொருந்தாமல் இருந்ததைக் குறிப்பிடுகின்றது.

முழவு

பலாப்பழத்திற்கும் மரத்தின் அடிப்பகுதி போன்றும் காணப்பட்டது என்று உவமைகளால் புலவர்கள் விளக்கிக்காட்டியுள்ளனர்.

“முழவு முதல் அரைய தடவு நிலைப் பெண்ணை”

முழவு பனை பெரிய குறுந்தொகையில் தெரிவிக்கின்றது.

முரசு

போர் முரசு அரசனிடம் இருப்பதுப் போன்று இசைமுரசு கலைஞரிடத்தில் இருந்துள்ளது. அது இனிய இசையை உடையது.

"துன்னரும் நெடுவரைத் ததும்பி அருவி

தண்ணென் முரசின் இமிழிசை காட்டும்”

என்றக் குறுந்தெகைப் பாடல் முரசின் தண்மையான ஒலியைக் கூறி, அது இமிழிசையைக் காட்டுவதை உணர்த்துகின்றது.

வாழ்க்கை பணியில் முடிக்கப்பட்டுள்ளதை,

“தழங்க குரல் முரசம் காலை இயம்ப”

என்றுக் கூறுகிறது.

முரசு அரசுடன் தொடர்புடையது. பாண் மக்களுடனும் தொடர்புடையது. அவற்றைத் தொடர்ந்து, இயல்பு நிலை வாழ்க்கையில் மக்களுக்கும் பயன்பட்டது. இல்லற வாழ்க்கையின் தொடக்கமாக நடைபெறுகின்றப் பொழுது முரசினை அடித்துள்ளனர். நல்ல நாள் நல்ல

நேரத்தில் மண மனையை அணிசெய்து, மங்கல மகளிர் முழவும் முரசும் ஒலிக்க புதுமணத் தம்பதியருக்கு மணநீர் ஆட்டினர் என்றச் செய்தியை, மண நிகழ்வு,

"படுமண முழவொடு பரூஉப்பணை தமிழ

வதுவை மண்ணிய மகளிர் விருப்புற்று"

என்று அகநானூறு உணர்த்துகின்றது.

முரசைக் கைக்கொள்ளல்

பகை மன்னனின் அரண்களைக் கடந்து மதில் மேலுள்ள அல்லது முன் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள காவல் முரசைக் கைக் கொள்ளுதல் வெற்றியின் அடுத்த படியாகும். ஒரு மன்னனின் புகழ் பெருமையும் அவன் முரசில் அமைந்துள்ளதால் முரசினைக் கைப்பற்றுதல் அந்நாட்டைக் கைப்பற்றுதலுக்கு ஒப்பாகக் கருதப்பட்டுள்ளது. முரசைக் கைக்கொண்ட செய்தியைப் புலவர்கள் பெருவாரியாகப் பாடியுள்ளனர்.

பகைவர் பாதுகாப்பான இடமாகியக் கோட்டைச் சுவரின் உள்ளே பாதுகாப்பாக இருப்பர், அப்படிப்பட்டப் பாதுகாப்பான அரணை வென்று முரசைக் கைக்கொண்டு அடும் போரைச் செய்பவன் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பதை,

'அரண் தலை மதிலராகவும் முரசு கொண்டு

ஓம்பு அரண் கடந்த அடு போர்ச் செழியன்"

என்ற நற்றிணை அடிகள் சுட்டுகின்றது,

போரின் முடிவில் முரசு

"முரசுமாறு இரட்டும் அருந்தொழில் பகைதனிந்தது"

பெருமை மிக்க வேந்தன் பகைதணிந்துப் போர்த் தொழிலை விட்டு நாட்டிற்குத் திரும்புவதை முரசுகள் மாறிமாறி ஒலித்தன.

"அரசுபகை தணிய, முரசுபடச் சினை?"

அரசர்களின் பகை தணிந்துப் போர் முடிந்தது. முரசுகளின் முழக்கம் ஓய்ந்தன என ஐங்குறுநூற்றுப் பாடல்கள் குறிப்பிடுகின்றன.

வெற்றி முரசு

போரில் வெற்றிப் பெற்றவுடன் வெற்றி முரசு ஒலிக்கப்பட்டுள்ளது. போரில் தோல்வியைத் தழுவினால் மற்றொருவருக்கு வெற்றிதான். ஒருவர் அவ்வெற்றியையும் முரசறைந்து வெளிப்படுத்தி மகிழ்ந்துள்ளனர். முதுகுக் காட்டி ஓடாமல் வெல்லும் நல்ல வீரம் பொருந்திய எருதின் தோலால் போர்த்தப்பெற்ற வெற்றியுடைய முரசமானது 'இமும்' எனும் ஓசை ஒலிக்கப் பகைவர் நாட்டினை வென்று திறை பெற்றச் செய்தியை,

"ஆடுகொள் முரசம் இழுமென முழங்க"

பெருஞ்சேரல் இரும்பொறை சோழ பாண்டியரை ஒருசேர வென்று அவர்களின் முரசைக் கைப்பற்றியவன் என்று முரசை வென்று வெற்றி முரசம் கொட்டியதைப் பல பாடல்கள் பறைச் சாற்றுகின்றன.

சமாதான முரசு

போர் தொடங்குவதற்கும் முடிப்பதற்கும் பாக்கப்படுத்துவதற்கும் வெற்றிக்கும் தோல்விக்கும் மட்டுமல்லாமல் முரசு சமாதானம் ஏற்படுத்துவதற்கும் ஒலிக்கப்பட்டுள்ளது.போர் வெற்றியில் முடியும் அல்லது தோல்வியில் முடியும் சில நேரங்களில் தோல்வி இன்றி சமாதானமாகவும் முடியும். அச்சமயத்தில் சமாதான முரசு ஒலிக்கப்பட்டுள்ளது. திறை கொடுக்கக் குறுநில மன்னன் சம்மதம் தெரிவித்துவிட்டால் போரி உடன்

நிறுத்தப்பட்டுச் சமாதான முரசு முழங்கப்படும். இச்செய்தியை,

"வந்துவினை முடித்தளன் வேந்தனும் பகைவரும்

தம்திறை கொடுத்துத் தமர் ஆயினரே

முரண் செறிந்திருந்த தானை இரண்டும்

ஒன்று என அறைந்தன பணையே"

என்ற அகநானூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன.

முரசை வழிபடுதல்

போர் தொடங்குவதற்கு முன் முரசை வழிபட்டனர். முரசை மன்னருக்கு நிகராகப் போற்றி வழிபடும் மரபு அக்காலத்தில் இருந்தது. போர்த் தொடங்கும் முன் வஞ்சினம் கூறி முரசை வழிபடும் மரபு இருந்தது. நல்லாட்சி செலுத்தும் மன்னனின் ஆட்சி நீடிக்க வேண்டுமென்றால் அம்மனினன் நலமுடன் வாழவேண்டும். அவன் முரசிற்கு எவ்விதத் தீங்கும் வரக்கூடாது. அப்போது தான் மன்னன் நல்வாழ்வு பெறுவான். அந்நாட்டு மக்களும் வறுமையின்றி. கொடுமையின்றி வாழ்வர். மன்னனும் அவன் முரசும் நலமுடன் வாழவேண்டும் என்று மக்கள் முரசிற்கு வழிபாடு செய்வர். பாண்டிய மன்னனின் முரசிற்கும் பாண்டியனுக்கும் தீங்கு நேராதிருக்கும் பொருட்டு ஆயர்குடி மக்கள் வேண்டுதல் நடத்தினர் என்பதை,

"முரைசு கெழு முதுகுடி முரண்மிகு செல்வதற்கு

தீது இன்று பொலிக எனக் தெய்வக்கடி அயர்மார்"

எனும் கலித்தொகை பாடலடிகள் விளக்குகின்றன

நடுகல் வழிபாட்டில் முரசு

போரில் வீரமரணம் எய்திய வீரர்களுக்கு மரியாதைத் செலுத்தும் வண்ணம், நாட்டிற்காகத் தங்கள் இன்னுயிரை ஈந்தத் தியாகத்திற்கு மதிப்புக் கொடுக்கும் வண்ணம் அவ்வீரர்களுக்கு நடுகல் நட்டு வழிபாடு நடத்தினர். அப்போது முரசறையப்பட்டுள்ளது. போரில் இறந்த வீரர்தம் உடலை மூடிய வலிய ஆண் தன்மைக்கு அறிகுறியானக் கற்குவியலின் மேல் நின்ற தெய்வத் தன்மையுடைய அந்தக் கரந்தை வீரர் ஆவியை வழிபடுதற்கு அந்த மறவளின் பெயரும் பெருமையும் பொறித்து நாட்டப்பெற்ற நடுகல்லில் மயிற்பீலியைச் சூட்டி அடியை அடித்து, நெல்லினால் ஆக்கியக் கள்ளுடன் செம்மறி ஆட்டுக்குட்டியையும் பலி கொடுக்கும் நிகழ்வினை,

"வில் ஏர் வாழ்க்கை விழுத்தொடை மறவர்

வல் ஆண் பதுக்கைக் கடவுட் பேணிமார்

நடுகல் பீலி சூட்டி துடிப்படுத்து"

வில்படை நெருங்கிய அரியப் போரில் பகைவர் அழியக் கொன்றுப் புகழை நிலைநிறுத்திய மானம் மிக்க மறவரின் நடுகற்கள் வரிசையாய் நிற்கும்.

முரசும் பொழுதும்

முரசு பல்வேறு தனங்களில் பல்வேறு சூழலில் ஒலிக்கப்பட்டு வந்துள்ளது. மாலைப்பொழுது வந்தது என்பதைத் தெரிவிக்கும் பொருட்டு,

"வீரை வேண்மான் வெளியன் திந்தன்

முரசு முதல் கொளீஇய மாலை விளக்கின்"

வீரை வேண்மான் வெளியன் என்னும் தித்தனது முரசு வரிசையாக விளக்குகள்போல பொழுதுசாய்ந்த நேரத்தில் ஒலித்துள்ளதனைக் குறிப்பிடுகின்றது. இரவுப் பொழுதில் காவலர்கள் உரங்காது இருக்கும் பொருட்டுத் தினைக் கதிர்களை அறுப்பவர்களைப் போலத் தொண்டப் பறையினை இரவில் ஒலித்துக்கொண்டு இருப்பர் என்பதை,

"இரவு அரிவாரின் தொண்டகச் சிறுபறை

சிறுதிணை விளைந்த வியன்கண் இரும்புனத்து

பானாள் யாமத்தும் கறங்கும்"

எனும் அடிகள் உணர்த்துகின்றன.

நடுச்சாமத்தில் உருவிய வாளுடன் காவல் காக்கும் காவலரி பலரை உடையப் பாசரையில் கேடயத்தில் பாயும் அம்பின் ஓசை, சிறுகண்ணை உடைய யானையின் மணி ஓசையுடன் வீரமுரசொலி கேட்கும் எனும் செய்தியினை,

“தழங்குகுரல் முரசமொடு முழங்கும் யாமத்து”

எனும் அகநானூற்று அடி அறிவிக்கின்றது.

பழந்தமிழரின் வாழ்வில் காலை தொடங்கி நள்ளிரவு வரையிலும் முரசு ஒலித்திருக்கின்றது என்பதுப் புலப்படுகின்றது.

பறை

பறை என்னும் தோற்கருவி மிகப்பழமையானது. அரசு அறிவிப்புக்களை மக்களுக்குத் தெரியப்படுத்தப் பறையடிக்கும் வழக்கம் முற்காலத்தில் இருந்தது. பறை என்றச் சொல்லுக்கும். சுறு, சொல் எனும் பொருளாகும். மலையாளத்தில் 'பறைதல்' என்பதுச் சொல்லுதல் என்றப் பொருளில் வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு செய்தியைப் பலரிடத்தில் சொல்லிக் கொண்டுத் திரிவதைப் பறையடித்தல்" என்று நாட்டுப்புற மக்களால் வழங்கப்பட்டு வருகின்றது. இக்கருவி குறித்துக் தொல்காப்பியத்தில் குறிப்புகள் உள்ளதால இக்கருவிப் பழையானது என்பதையும் இன்றியமையாதக் கருவியாக இருந்துள்ளது.

“தெய்வம், உனாவே, மா, மரம், புள், பறை

செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ

அவ்வகை பிறவும் கரு என மொழிப்”

கருப்பொருள்களில் ஒன்றாக ‘பறை’ கூரப்பட்டுள்ளது. குறிஞ்சி நிலத்திற்குத் தொண்டகப் பறை, முல்லை நிலத்திற்கு ஏறுகோட் பறை, மருத நிலத்திற்கு நெல்வரி பறை, நெய்தல் நிலத்திற்கு மீன்கோட் பறை, பாலை நிலத்திற்கு நிரைகோட் பறை என்று ஐவகை நிலத்திற்கும் ஐவகைப் பறைகள் கூறப்பட்டுள்ளன.

"தொண்டகம் தொடுமின் சிறுபறை தொடுமின்”

என்னும் சிலம்பு அடியில் தொண்டாமும் சிறுபறையும் தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. கயவர் தாம் கேட்ட இரகசியத்தைப் பிறருக்கு வழியச் சென்றுக் கூறுவதால் அவர்கள் செய்தி அறிவிக்க அறையப்படும் பறை போன்றவர் ஆவார் எனும் இக்குறளில் பறை பற்றியக் குறிப்புக் கூறப்பட்டுள்ளது.

இறைவனும் பறையும்

இறைவன் இசைக்கு மயங்குபவன். உருவங்களும் இறைவனுடையச் இசையாகவே இசை வாழ்பவன் வாசிப்பனவாகப் படைக்கப்பட்டுள்ளது.

இலக்கியத்தில் சிவபெருமான் தன் திருக்கரங்களில் பறை என்னும் கருவியை ஒலித்ததோடு மட்டும் அல்லாமல் தடி எனும் கருவியினை மாறிமாறி விரல்களால் அடித்து ஒலித்தச் செய்தியினை.

“படுபறை பல இயம்பப் பஸ்உருவம் பெயர்த்துநீ”

என்றக் கலித்தொகை அடி விளக்குகின்றது.

அசுணமும் பறையும்

தமிழிலக்கியங்களில் பதிவாகிக் கற்பனையாகச் சொல்லப்பட்டு வரும் அன்னப் பறவையின் இயல்பினைப் போன்று ‘அசுணம்’ என்னும் பறவையின் இயல்பும் வியப்புக்குரியது. அசுணம் என்னும் பறவை யாழிசையைக் கேட்டு மகிழும் பறையிசையைக் கேட்டு இறந்துவிடும் என்னும் உன்னதமான இயல்பினைச் சங்கஇலக்கியங்கள் பதிவுச் செய்துள்ளன.

தலைவனின் இயல்பினைச் சுட்டிக்கூறும் தலைவி, தலைவன் ஒரு நேரம் தலைவியை நல்லதாகிச்

சேர்ந்திருந்தலையும் சிலநேரம் தலைவியை விட்டுப் பிரிதலையும் உணர்த்தும் பொருளில் நப்பசலையார் அகணம் யாழிசையைக் கேட்டு மகிழ்வதுப் போன்று நம்மோடு இருப்பான் பறையறைந்துக் கொல்வதுப் போன்றுப் பிரிந்து செல்வான் கையாண்டுள்ளார். என்பதை, என்றப் பொருளில் உவமையைக்,

“அசுணம் கொல்பவர் கைபோல் நன்றும்”

மனிதர்களில் மென்மையானக் குணமுடையவர்கள், வன்மையானக் குணமுடையவர்கள் என்றுப் பாகுபாடு இருப்பதைப் போன்று அசுணம் என்னும் பறவை மென்மையானக் குணமுடையது ஆகும். இப்பறவைக்குக் கேட்கும் திறனும் மனவலிமையும் குறைவானதாக 55 இருக்கும். ஆகையால் யாழின்மென்மையைக் கேட்டு மகிழ்ந்தும் பறையின் வன்மையொலியைக் கேட்டு அதிர்ந்தும் இறந்தும் போயிருக்கிறது என நற்றிணை கூறுகின்றது.

யானையும் பறையும்

விலங்கினங்களில் பெரிய உருவம் படைத்தது யானையாகும். இது எளிமையான குணம் படைத்தது. சில நேரங்களில் மதம் பிடிக்கின்றப் பொழுது இதன் குணமும் பலமும் அகரத்தனம் வாய்ந்ததாக மாறிவிடுகின்றது. அந்த நேரங்களில் மனிதர்களுக்கு யானை, துன்பத்தைத் தரக்கூடும். இவ்எச்சரிக்கையைச் செய்யவேண்டியது பாதுகாப்பாளரின் முதன்மையானக் கடமையாக அமைந்துள்ளது. மதம் கொண்ட யானையை நீர்த்துறைக்கு அழைத்துச் செல்லும் பொழுதுப் பறையறைந்துக் கொண்டுச் செல்வது வழக்கம். மருத நிலக்குடியிருப்புகளில் யானைகள் செல்லும்பொழுது பறையறைந்துச் செல்வது வழக்கம் என்னும் கருத்துக்களை,

“நிறைஅழி கொல்யானை நீர்க்கு விட்டாங்குப்

பறை அறைந் தல்லது செல்லற்க”

கிளிகளை ஓட்டியப் பறை

பறை, இசைத்துறையில் மட்டுமின்றி மக்களின் வாழ்வினும் பயன்பாடு உடையதாக இருந்துள்ளது. பறையினை ஒலித்து, நிலங்களில் உள்ள தினைகளைக் கொள்ளையிட வரும் பறவைகள், விலங்குகளிடம் இருந்து தினைப்புனத்தைக் காத்துள்ளனர், பறையின் ஒலி அச்சத்திற்குரிய ஒலியாக இருந்ததால் இப்பயன்பாட்டிற்கு டரியதாக இருந்துள்ளது.

தழல்

காவல் முதலானக் செய்யச்செல்லும் கருவிகளை குறமகள் இயக்கிக் பற கிளிகளையும் தட்டை, குளிர், பறவைகளையும் ஓட்டியுள்ளனர். குறமகள், தினைப்புனத்தில் படியும் கிளிகளை ஓட்ட குளிர்" (முழவு) என்னும் கருவியினையும் சிறுபறையினையும் பயன்படுத்தியுள்ளனர்.

“உணர்கிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே”

விளைந்தப் பெரியக் கதிர்க் கொத்துக்களையுடையத் தினையை உண்ணவரும் கிளிகளை ஓட்டும் குறமகளிர், குளிர் என்னும் கருவியைப் பயன்படுத்தி கிளிகளை விரட்டியடித்துள்ளனர் எனக் குறுந்தொகை அடி குறிப்பிடுகின்றது.

“தொண்டகச் சிறுபறைப் பாணி அயலது

பைந்தாட் செந்தினைப் படுகிளி ஓப்பும்பசியத்”

தண்டினையுடையத் தினையினைக் கொய்யக் கருதிவரும் கிளிக்கூட்டத்தைத் தத்தம் கையிலிருக்கும் சிறியத் தொண்டகப் பறையை வெருண்டோடச் செய்வர் என நற்றிணை அடிகள் விளக்குகின்றன.

தட்டை

‘**கிளி கடிக்கருவி**’ என்னும் கருவியினைப் பயன்படுத்திக் கிளிகளை ஓட்டியுள்ளனர் என்பதை,

"செவ்வாய்ப் பாசினம் கவரும் என்று துவ்வாய்த்

தட்டையும் புடைத்தனை"

தினைக்கொல்லையில் கதிர்களை உண்ணக் கருதும் சிவந்த வாயினை உடையக் கிளிக்கூட்டம், தினைக்கதிர்களைக் கவர்ந்துச்செல்லும். அங்குச் சென்றும் கிளியோப்பும் தட்டையைக் கொண்டு கிளிகளை விரட்டியுள்ளனர்.

"வெதிர்புனை தட்டையேன் மலர்பூக்கொய்து"

கிளிகடி கருவியாகியத் தட்டையைக் கொண்டுக் மூங்கிலால் செய்தக் கிளிகளை விரட்டினர் என்று நற்றிணை அடி புலப்படுத்துகின்றது. ஓட்ட 'தட்டை' என்னும் கருவியினைப் பயன்படுத்தியுள்ளனர். நெல் வயலில் படியும் கிளிகளை,

"மென்தினை நுவணை உண்டுஇ தட்டையின்

ஐவனச் சிறுகிளி கடியும் நாட"

ஐவன நெல்லை உண்ணவரும் சிறிய கிளிகளைத் தட்டையைப் புடைத்துக் ஐங்குறுநூற்றுப் பாடலடிகள் விளக்குகின்றன.

ஊரும் பறையும்

ஊரைப் பற்றி சொல்லும் போது ஊரின் திருவிழாவின் போதும் பிற நிகழ்ச்சிகளின் போதும் பறையறையப்பட்டுள்ளது. பெருந்தேரை உடையத் திருக்கோவலூரில் அரசனாகிய மலையமான் திருமுடிக்காரியின் ஊரில் முழவின் இனிய ஒலியானது இடைவிடாது ஒலிக்கும் என்பதை,

"துஞ்சா முழவின் கோவல் கோமான்"

என்ற அகநானூற்றுப் பாடல் கூறுகின்றது.

ஊர்ப் பொதுமன்றங்கள் அல்லாதச் சிறுகுடியிருப்புகளிலும் தெருக்களிலும் பறைகளை அடித்து ஒலித்துள்ளச் செய்தியை, ஐங்குறுநூறு, அகநானூறு, பெருபாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை ஆகியச் இலக்கியப் பாடலடிகள் குறிப்பிடுகின்றன.

"முழவுஇமிழ் இன்இசை மறுகுதொறும் இசைக்கும்

தொண்டி அன்னை"

கடல் அலைகள் ஒலிக்கும் இனிய இசையோடு மத்தளத்தின் இனிய இசையும் இணைந்து முழங்கிக் கலங்குகின்ற இடமாக தொண்டி என்னும் கடற்கரைப் பட்டினம் விளங்குகின்றது.

"தொண்டகப் பறைச்சீர் பெண்டிரொடுவிரைஇ

மறுகில் தூங்கும் சிறுகுடிப் பாக்கத்து"

துடி


துடி போன்ற அடிகளை உடைய யானைக் கன்றுகளையும் பெண் யானையையும் ஆண்யானையையும் பல பரிசுப் பொருட்களையும் வறுமை தீரப் பெற்றுச் சென்றுள்ளனர். போர்க்களத்தில் துடியை அடித்துள்ளனர். வெற்றியைக் கொண்டாடவும் துடி முழக்கம் செய்துள்ளனர்,

"கனைகுரல் கடுந்துடிப் பாணி தூக்கி

உவலைக் கண்ணியர் ஊன்புழுக் கயரும்"

இப்பாடலில் துடி என்பது வன்மை கருவியாகக் கூறப்பட்டுள்ளது.

தொல்லியல் நோக்கில் மலைபடுகடாம்





ச.பாலமுருகன்,
அலுவலக மேலாளர் (பொது),
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
திருவண்ணாமலை

சங்க இலக்கியமான மலைபடுகடாம் பாடப்பெற்ற இடம் தற்போது செங்கம் என்று அழைக்கப்படுகின்ற செங்கன்மா என்ற ஊரை ஆண்டு வந்த நன்னன் சேய் நன்னன் என்ற குறுநில மன்னனின் கொடைத்தன்மைப் பற்றியும் கூத்தர்கள் செல்லும் வழியும் அதல் எதிர்படும் நிகழ்வுகளைப் பற்றியும் விரிவாக கூறும் நூல். ஆனால் மலைபடுகடாமில் 583 அடிகளில் எங்கும் செங்கம் என்ற பெயர் இல்லை. 13 ஆம் நூற்றாண்டில் மலைபடுகடாமிற்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் எழுதிய உரையில்தான் பல்குன்றக்கோட்டத்து செங்கன் மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப் பாடியது என்று குறிப்பிடுகிறார்.

தமிழர்களின் பெருமைமிகு இலக்கியமான சங்கப்பாடல்களில் பத்துப்பாட்டின் கடைசியாக வருவது மலைபடுகடாம். இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார் பல்குன்றக்கோட்டத்து செங்கன்மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப் பற்றி பாடிய பாடல் இது. இது மொத்தம் 583 அடி. நன்னனை நாடி வரும் கூத்தர்களுக்கு வழிகாட்டும் இலக்கியமாக அமைந்தது. இதற்கு கூத்தறாற்றுப்படை என்ற பெயரும் உள்ளது. ஆய்வாளர்கள் மலைபடுகடாமின் காலத்தை கிபி. 2 ஆம் நூற்றாண்டு என்று வரையறுக்கின்றனர்.

சங்க இலக்கியமான பத்துப்பாட்டும் எட்டுத் தொகையும் பல சிறப்புகளைப் பெற்றிருக்கின்றன. ஆனால் அந்த இலக்கியங்கள் கூறும் தகவல்கள், நிகழ்வுகள் உண்மையா என்பது பெருங்கேள்வி. சங்க இலக்கியம் 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தமிழகத்தில் பரவலாக கவனம் பெறத்தொடங்கியது. அதே காலத்தில் தான் தமிழகத்தில் தொல்லியல் துறையும் தனது தேடுதல்களை தொடங்கியிருந்தது. இந்த நிலையில் 20 ஆம் நூற்றாண்டு ஆரம்பத்தில் சங்க இலக்கியங்களும் அதற்கான தொல்லியல் சான்றுகளும் தேடும் பணியும் தொடங்கியது. சங்க இலக்கிய காட்சிகள், நிகழ்வுகள், ஊர்கள், அரசர்கள், நிலவியல் கூறுகள் ஆகியவை தமிழகத்தில் கல்வெட்டு ஆய்வுகள் வெளிவர வெளிவர சங்க இலக்கியம் எவ்வளவு உண்மையானது என்பது தெரியவந்தது. குறிப்பாக தமிழ் பிராமி கல்வெட்டுகள் வெளி வர ஆரம்பித்தவுடன் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன் பற்றியும், புகளூர் கல்வெட்டு மூலம் பத்துப்பாட்டு சேர அரசர்களின் வரிசையும் தெரியவந்தது. தொடர்ந்து வந்த ஆய்வாளர்களும் சங்க இலக்கியத்தின் உண்மைத்தன்மையைக் கல்வெட்டுகள் மூலமாக நிறுவி வந்தனர். அவர்களில் குறிப்பானவர்கள் சதாசிவபண்டாரத்தார், மு. ராகவ அய்யங்கார், ம.ராஜமாணிக்கனார், க.ராஜன் போன்றவர்கள் பல்வேறு ஆய்வுகளின் மூலம் சங்க இலக்கியத்தினை தொல்லியல் சான்றுகளோடு நிறுவினர். சங்க இலக்கியத்தை தொல்லியல் சான்றுகளுடன் நிறுவுவது சவாலான பணியாகும். அந்த வகையில் மலைபடுகடாம் எந்த அளவிற்கு தொல்லியல் சான்றுகளோடு நிறுவமுடிகிறது என்பதே இக்கட்டுரை.

சங்க இலக்கியமான மலைபடுகடாம் பாடப்பெற்ற இடம் தற்போது செங்கம் என்று அழைக்கப்படுகின்ற செங்கன்மா என்ற ஊரை ஆண்டு வந்த நன்னன் சேய் நன்னன் என்ற குறுநில மன்னனின் கொடைத்தன்மைப் பற்றியும் கூத்தர்கள் செல்லும் வழியும் அதல் எதிர்படும் நிகழ்வுகளைப் பற்றியும் விரிவாக கூறும் நூல். ஆனால் மலைபடுகடாமில் 583 அடிகளில் எங்கும் செங்கம் என்ற பெயர் இல்லை. 13 ஆம் நூற்றாண்டில் மலைபடுகடாமிற்கு உரை எழுதிய நச்சினார்கினியர் எழுதிய உரையில்தான் பல்குன்றக்கோட்டத்து **செங்கன்** மாத்துவேள் நன்னன் சேய் நன்னனைப் பாடியது என்று குறிப்பிடுகிறார்.

மலைபடுகடாம் பாடல் வரிகளில் செங்கம் பகுதி மற்றும் அதனை அருகில் உள்ள மலை, ஆறு போன்ற இடங்களை உள்ளடக்கிய பகுதிய ஆண்டு வந்தான் என்பதற்கு 3 ஆதாரங்கள் உள்ளன. 1. நவிரமலை, 2. சேயாறு. 3. காரியுண்டிக் கடவுள் இந்த 3 வார்த்தைகளை வைத்துக் கொண்டு இவ்வளவு பெரிய சங்க இலக்கியத்தை எவ்வாறு தொல்லியல் நோக்கில் நிறுவுவது?

நவிரமலையைத் தேடி

நமது முன்னோர்கள் கூரிய அறிவாற்றலாலும் கள செயல்பாடுகளாலும் சிறிது சிறிதாக கல்வெட்டுத் தகவல்கள் கிடைத்தன. இராஜமாணிக்கனார் எழுதி பத்துப்பாட்டு ஆராய்ச்சியில் செங்கம் ரிஷபேஸ்வர் கோயிலில் ஓர் உடன்படிக்கை தொடர்பான கல்வெட்டில் (106/1900) பல்வேறு பகுதி மக்களைப் பற்றி குறிப்பிடும் போது **நவிரமலை தென்பற்று நாட்டவரும்** என்ற சொற்றொடரை கண்டு பிடித்து இலக்கியத்தில் வரும் நவிரமலை என்பதும் கல்வெட்டிலும் பயின்று வருகிறது என்று கண்டறிந்து குறிப்பிட்டார். இவர் குறிப்பிடும் நவிர மலை என்பது தற்போது பர்வதமலை என்று குறிப்பிடப்படுகின்றது. காரணம் இம்மலையின் மேல் தற்போது மல்லிகார்சுனன் என்ற சிவன் கோயில் உள்ளது. இக்கோயிலே சங்க காலத்தில் காரியுண்டிக் கடவுளாக இருக்கலாம் என்று குறிப்பிட்டிருந்தார். அதையே பல்வேறு அறிஞர்களும் ஏற்றுக்கொண்டணர். காரணம் இம்மலையின் ஏற்றம் சிறிது கடினம் என்றும் வழக்குப்பாறைகள் இருக்கும் என்பதும் மலைபடுகடாம் பாடலுடன் ஒப்பிட்டு வந்தனர். மேலும் சேயாறு என்பது மருவி செய்யாறு ஆக இம்மலையின் அருகில் ஓடுவதால் பர்வதமலையே நவிரமலை என்று முடிவானது.

தமிழின் தலைசிறந்த வரலாற்று அறிஞர் தி. வை. சதாசிவபண்டாரத்தார் தனது நூலில் மலைபடுகடாம் பாடப்பட்ட நன்னனைப் பற்றி

குறிப்பிடப்பட்ட கல்வெட்டு ஒன்று திருவண்ணாமலை கோயிலில் இருப்பதை கண்டறிந்து வெளியிட்டார். இக்கல்வெட்டு 13 ஆம் நூற்றாண்டு கோப்பெருஞ்சிங்கன் காலத்தியது.

இதில் வரும் பாடல் வரிகள்

"நல்லிசை கடாம்புனை நன்னன் வெற்பில்"

என்று குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டு நன்னன் என்ற பெயரையும் மலைபடுகடாம் என்ற இலக்கியத்தின் **கடாம்** என்ற வார்த்தையும் பயின்று வருவதைப் பார்க்கலாம். எனவே இதுவும் செங்கம் பகுதிதான் மலைபடுகடாம் பாடப்பெற்ற பகுதி என்பது மேலும் உறுதியானது.

1972 ஆம் ஆண்டு வாக்கில் தமிழக தொல்லியல் துறையினர் செங்கம் ரிஷபேஷ்வர் கோயிலில் மேற்கொண்ட கல்வெட்டு ஆய்வில் அற்புதமான பாடல் கல்வெட்டு ஒன்று கல்வெட்டு அறிஞர் சந்திரமூர்த்தி அவர்களால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கல்வெட்டு பாடலில் **மலைகடாம் பாட்டுண்ட மால்வரை** என்ற வரி உள்ளது. இந்த வரி மலைபடுகடாம் என்ற இலக்கியத்தின் தலைப்பை அழகாக கூறுகிறது என்பதால் செங்கம் பகுதிதான் மலைபடுகடாம் பாடப்பெற்ற இடம் என்று மேலும் உறுதியானது. இவரும் நவிரமலை என்பது பர்வதமலையே என குறிப்பிடுகின்றார்.

மூவண்டறை தார்மன்னர் மலைப்படைத் தென் மன்னரை வென்கண்ட திறற் காங்கேமன் கண்சிவப்ப பண்டே மலைகடாம் பாட்டுண்ட மால்வரை செஞ்சொரி அலைகடாம் பாட்டுண்டது.

(Ref. Kalvettu Quarterly no 5, p. 13.)

உ.வே.சாமிநாத அய்யர் கண்டறிந்த 18 ஆம் நூற்றாண்டு ஓலைச் சுவடியில் பத்துப்பாட்டில் ஒன்றாக மலைபடுகடாம் என்று குறிப்பிட்டிருப்பதை கண்டறிந்தார். இதுவும் இந்த சங்க இலக்கியத்தின் பெயருக்கு ஒர் அத்தாட்சி. மேலும் உ.வே. சாமிநாத அய்யர் பர்வதமலையே நவிரமலை என்று கருதினார். அதற்கு ஆதாரமாக மலைமேல் இருக்கும் சிவனின் பெயர் காலகண்டேஸ்வரர் என்றும் சங்க இலக்கியத்தில் குறிப்பிட்ட காரியுண்டிக் கடவுள் தான் சமஸ்கிருதத்தில் காலகண்டேஸ்வரர் ( ) என்று குறிப்பிட்டார். ஆனால் மலைமீது உள்ள சிவன் பெயர் மல்லிகார்சுனன் என அழைக்கப்படுகிறதே தவிர காலகண்டேஸ்வரர் என குறிப்புகள் எங்கும் இல்லை. மேலும் செங்கம் – கலசபாக்கம் சாலையில் பர்வதமலைக்கு அருகில் கிடைத்த 17 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு ஒன்று மல்லிகார்சுன சுவாமி என்று குறிப்பிடுகிறது. எனவே காலகண்டேஸ்வரர் என்று உ.வே.சா. எதை வைத்து குறிப்பிட்டார் என்று தெரியவில்லை.




சங்க இலக்கியத்தின் நவிரமலையும் மலைபடுகடாம், நன்னன் என்பதும் கல்வெட்டு வாயிலாக கிடைக்கப்பெற்றது. இந்நிலையிலும் பர்வத மலையே நவிரமலை என்ற கருத்தாக்கமும் வலுப்பெற்றிருந்தது. இந்த நேரத்தில் 2013 இல் கிடைத்த கல்வெட்டு ஒன்று நவிரமலை என்பது பர்வதமலையா அல்லது ஜவ்வாது மலையின் வேறு பகுதியா என்பது பற்றிய ஐயத்தை எழுப்பியது. 2013 ஆம் ஆண்டு திருப்பத்தூர் தூயநெஞ்சக் கல்லூரி பேராசிரியர் முனைவர் க.மோகன்காந்தி என்பவர் திருப்பத்தூர் வட்டம் ஜவ்வாது மலையில் புதூர் நாடு கிராமத்திற்கு அருகில் கீழூரில் ஒரு நடுகல் கல்வெட்டை கண்டறிந்தார். இக்கல்வெட்டை வாசித்தபோது இதில் **நவிரமலை** என்ற சொற்றொடர் இருந்தது.

இக்கல்வெட்டு கிடைத்த இடத்தில் இருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ளது பர்வதமலை. ஆனால் செங்கம் நகருக்கு மேற்கே உள்ள மலைத்தொடரில் தான் இந்த கீழூர் உள்ளது. எனவே நவிரமலை என்பது திருப்பத்தூர் வட்டம் புதூர் நாடு பகுதிதான் என்ற வாதம் வலுப்பெற்றது. அடுத்தாற்போல் மேலும் ஒரு கல்வெட்டு நவிரமலை என்ற பெயரைத்தாங்கி வந்ததும் அதே பேராசிரியரால் கண்டுபிடிக்கப்பட்டது. இந்த கல்வெட்டில் **வேழநாட்டு நவிரமலைநாட்டு** என்ற சொற்றொடர் உள்ளது.


இந்த கல்வெட்டு கண்டுபிடிப்பிற்கு பிறகு நவிரமலை என்பது புதூர் நாடு பகுதிதான் என்ற மேலும் உறுதியானது. பர்வதமலை நவிரமலை என்ற சிறப்பு பெயரை இழக்கத் தொடங்கியது.

அண்மையில் இக்கட்டுரை ஆசிரியரும் அவரது நண்பர்பழனிச்சாமி மற்றும் முதுபெரும் தொல்லில் அறிஞர் பி. வெங்கடேசன் ஆகியோர் முனைவர் க.மோகன்காந்தியுடன் புதூர்நாடு பகுதியில் மொழலை என்ற கிராமத்தில் கல்வெட்டு ஆய்வில் ஈடுபடும் போது புதையல் கிடைத்தாற்போல நவிரமலை என்ற சொல்லைக்





கொண்ட *4* கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டன. இக்கல்வெட்டுகள் சோழ மன்னன் குலோத்துங்கன் காலத்தியது இரண்டும், கம்பணன் காலத்தியது ஒன்றும் விஜயநகர காலத்தியது ஒன்றும் என முழலைநாதர் கோயிலிலேயே நான்கு கல்வெட்டுகளும் கிடைத்தன. இக்கல்வெட்டுகள் மூலம் நவிரமலை என்பது ஜவ்வாதுலை பகுதியில் இருந்த ஒரு நாட்டுப்பிரிவு என்பது கல்வெட்டுகள் *11* நூற்றாண்டு முதுல் *15* ஆம் நூற்றாண்டு வரை வழக்கத்தில் இருந்ததும் தெளிவாக அறியமுடிகிறது.



நவிரமலை என்ற வார்த்தையுடன் காணப்படும் மொழலை கல்வெட்டுகள்

சேயாற்றைத்தேடி


கல்வெட்டு அடிப்படையில் நவிரமலை என்பது ஜவ்வாதுமலையின் தெற்குப்பகுதியில் அமைந்து புதூர் நாடு பகுதி என்பது தெளிவானது. சேயாறு என்பது எவ்வாறு நிறுவுவது. இதற்கு முன்பு ஆய்வு செய்த அறிஞர்கள் சேயாறு என்பது மருவி செய்யாறு என்று மாறி ஜவ்வாது மலையில் உற்பத்தி ஆகி தெற்காக ஓடி செங்கம் நகருக்கருகில் திரும்பி காஞ்சி, கடலாடி வழியாக கலசாபக்கம் போளூர் வழியாக ஓடி திருமுக்கூடலில் பாலாற்றில் கலக்கிறது. இந்த செய்யாறு என்பது மலைபடுகடாம் குறிப்பிடும் சேயாறு என்று மனதளவில் ஏற்றுக்கொண்டாலும் அதற்கும் ஒரு தொல்லியல் சான்று இருந்தால் சிறப்புடையதாகும். அதே வேளை செய்யாறு, செய்யாத்து என்ற சொல் வருகின்ற கல்வெட்டுகள் நிறைய கிடைக்கின்றன. ஆனால் சேயாறு என்றே கிடைக்குமா என்று ஆய்வு செய்யும் போது கிடைத்ததுதான் புல்லூர் செப்பேடு, இச்செப்பேடு நந்திவர்ம பல்லவன் காலத்தியது,. இச்செப்பேடு நயதீரயமங்கலம் என்ற கிராமத்தை ஏற்படுத்தி அதை *108* பிராமணர்களுக்கு வழங்கிய ஆணையாகும். இதில் *4* கிராமங்களை ஒன்றினைத்து உருவாக்கிய பிரம்மதேயத்தின் நான்கு எல்லையை

வாஸுதே^{3}வோ மஹாவிஷ்ணு: ராஜராஜோ ப^{4}விஷ்யதி|

ஜயந்தோ வாக்பதிர் ம்மந்த்ரீ தஸ்ய ராஜ்ஞோ ப^{4}விஷ்யதி|

தத்காலே ஜக^{3}தோ மானம்' கரிஷ்யதி ஜக^{3}த்பதி:|

தன்னாம்னா நக^{3}ரீம் தி^{3}வ்யாம் த்ரிஶௌலோச்ச-கி^{3}ரௌ புரீ||



குறிப்பிடும் போது செப்பேட்டு வரி எண் 108 இல் **சேயாற்றுல் பாகம் பெறவும்** என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது. மலைபடுகடாம் பாடலில் பயின்று வரும் சேயாறு என்ற வாசகம் 800 ஆண்டுகள் கடந்தும் புல்லூர் செப்பேட்டில் பயின்று வந்துள்ளது மிசக்சிறந்த தொல்லியல் சான்றாக கருதலாம்.

Seventh Plate, Second Side

108 vaḍapāṟk-ellai Paḻaṅkoḷūr ellaiyiluṅ=Chēyāṟṟuḷ pāgam peṟavum=¹t-ṟkum=min-nāṉ

109 gellai=yagattum=magappaṭṭa nīru=nilaṉu[m*]=puṉśeyuṅ=kāḍuṅ=kaḷarum=muḍumbōḍu=yāmai tava-


110 l[n]dad=ellān=Nayadhīramaṅgalam=eṉṉum pērān=sa(l sa)rvva parihāram=uḷḷaḍaṅga śāmā-nya

இவ்வாறு நவிரமலை, நன்னன், சேயாறு, மலைபடுகடாம் ஆகியவை மலைபடுகடாம் பாடலில் வரும் வார்த்தைகள் இதை மேற்கண்ட தொல்லியல் சான்றுகள் மூலம் ஓரளவு நிறுவப்பட்டுள்ளது. தற்போதைய பர்வதமலை மட்டும் நவிரமலை இவ்வாய்வுகள் மூலம் ஜவ்வாதுமலைத் தொடரின் தென்புற பகுதியே நவிரமலையாக இருக்கக்கூடும். இந்நிலையில் பர்வதமலைக்கு என்ன தொல்லியல் சான்று என்று ஆய்வு செய்யும் போது 10 ஆம் நூற்றாண்டு ராஜராஜனின் வடமொழிக்கல்வெட்டு ஒன்று பர்வதமலையை **திரிசூல கிரி** என்று குறிக்கிறது. இன்றும் இம்மலையை திரிசூல கிரி என்று வழங்கி வருகின்றனர். எனவே பர்வதமலை என்பதை திரிசூல கிரி என்பது பொருத்தமானதாகும். நவிரமலை என்பது இங்கு குறிப்பிடப்படவில்லை. எனவே பர்வதமலையை இனி திரிசூலகிரி/ பர்வத மலை என்றே குறிப்பிடலாம்.



காரியுண்டிக் கடவுள் ?

தொல்லியல் சான்றுடன் செங்கம் என்ற நகரமும், பல்குன்றக்கோட்டமும் நிறுப்படவேண்டியுள்ளது. இவ்விரு வார்த்தைகளும் மலைபடுகடாமில் இடம்பெறவில்லை. அதற்கு உரை எழுதிய நச்சினார்கினியர் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார். அதில் பல்குன்றக்கோட்டது செங்கன்மாத்துவேள் நன்னன் சேய் நன்னன் என்று குறிப்பிடுகிறார் பல்குன்றக்கோட்டம் என்பது மலைபடுகடாமில் நேரடியாக சுட்டப்பெறவில்லை. அதன் கடைசி அடியில் **குன்றுசூழ் இருக்கை நாடு கிழவோனே** என்று குறிப்பிடுகிறது. இதில் குறிப்பிடும் குன்று சூழ் இருக்கை என்பதே பிற்காலத்தில் பல்குன்றக்கோட்டம் என்ற பெயரில் அழைத்ததாகும். இந்த பல்குன்றக் கோட்டம் என்பது தொண்டை மண்டலத்தில் இருந்த 24 கோட்டங்களில் ஒன்றாகும். பல்லவர்கள் காலத்திலே இக்கோட்டம் உருவாகியருத்தல் வேண்டும். அதற்கு பின் வந்த நச்சினார்கினியர் இச் சொல்லை தனது உரையில் பயன்படுத்தியிருக்கவேண்டும். திருவண்ணாமலை மாவட்டத்தின் தென்பகுதியில் கிடைக்கும் பல நூறு கல்வெடுகளில் பல்குன்றக்கோட்டம் என்ற சொல் பயின்று வருகிறது. எனவே பல்குன்றக்கோட்டம் என்பது குன்று சூழ் இருக்கை என்பது ஒன்றேயாகலாம்.



செங்கன்மா என்பது மருவி செங்கம்மா என்றும் செங்கைமா என்றும் இறுதியாக செங்கம் என்றும் மருவியுள்ளதாக அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். செங்கம் கோயில் கல்வெட்டுகளிலும செங்கம் என்பது செங்கைமா என்றே குறிக்கப்பட்டுள்ளது இங்கு நோக்கத்ததக்கது ஆகும்.

கோட்டைப்பகுதி

மலைப்படுகடாமில் நேரடியாக செங்கம் சுட்டப்படவில்லை எனினும் அதன் இருப்பிடம் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த மூதூர் செங்கம் சேயாற்றின் கரையில் அமைந்துள்ளது. அவனது கோட்டை பற்றிய குறிப்புகளும் பாடலில் இடம்பெற்றுள்ளன. செங்கம் நகரில் தற்போதும் கோட்டை மேடு என்ற பெயரில் ஒரு இடம் உள்ளது. இது சங்ககாலத்தில் நன்னனின் கோட்டையாக இருந்திருக்கலாம். இங்க சங்ககாலத்தைச் சேர்ந்த பானைஓடுகள், பெரிய செங்கற்கள். கிடைத்துள்ளன. இக்கோட்டை 18 ஆம் நூற்றாண்டுவரை பயன்பாட்டில் இருந்துள்ளது. செங்கம் கணவாய் வழியாக திப்புசுல்தான் படையெடுப்பு நடைபெற்றபோது இக்கோட்டையும் முற்றுகையிடப்பட்டுள்ளது என்ற குறிப்பு தென்னாற்காடு மாவட்ட விவரச்சுவடியில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் 2017 ஆம் ஆண்டு கோட்டைமேடு பகுதியில் 134 பீரங்கி கல்குண்டுகள் கிடைத்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். இன்று இக்கோட்டை முழுவதும் தனது அடையாளத்தை இழந்து காணப்படுகிறது

ஜவ்வாதுமலை கோட்டை

ஜவ்வாதுமலையின் மேல்பட்டு அடுத்த கீழ்பட்டில் ஒரு பழைய கோட்டையின் சிதிலங்கள் காணப்படுகிறது. மலையில் பழமையாக கோட்டை உள்ளது என்ற குறிப்பு மலைப்படுகடாமில் குறிப்பிடப்பட்டுள்ளது இங்கு ஒப்புநோக்கப்படுகிறது. இந்த கோட்டைப்பகுதியில் பழைய கருங்கல் அடித்தளம், கருங்கல் கட்டுமானம் போன்றவைகளுடன் பாறையில் நீர்வழிந்தோட வெட்டப்பட்ட பள்ளமும் காணப்படுகிறது. இக்கோட்டையே மலைபடுகடாமில் குறிப்பிடும் கோட்டையாக இருக்கலாம். இதில் உள்ள கருங்கல் கட்டுமானம் பிற்காலத்தைச் சேர்ந்தது என்றும் ஒரு கருத்துஉள்ளது. இக்கோட்டைக்கு அருகில் ஒரு பெரிய அருவியும் உள்ளது.

நிலவியல் அடிப்படையில்

மலைபடுகடாமில் விவரிக்கப்படும் பாதைகள், மரங்கள், கனிகள், நிகழ்வுகள், மக்கள் பண்பாட்டு வரையரைகள், இடங்கள் ஆகியனவும் ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு ஒப்புநோக்கப்பட்டது. அதில் மலைபடுகடாம் பாடல் வரிகளும் அதன் எதிர் ஒத்திசைவான நிலைப்பாடும் கீழே குறிக்கப்படுகிறது. செங்கம் மற்றும் ஜவ்வாதுலைப்பகுதிகளிலும் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு பிற்காலம் வரை 100 க்கும் மேற்பட்ட நடுகற்கள் கிடைத்துள்ளன. ஜவ்வாதுலையிலேயே பல்லவர் கால நடுகற்கள் கிடைதுள்ளன. மலைபடுகடாமில் பெயருடன் கூடிய நடுகற்கள் இருக்கும் என்றும் அதை வணங்கிச்செல்லுங்கள் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கும் அதற்கு ஏற்றவாறு பெயருடன் அதாவது எழுத்துடன் கூடிய நடுகற்கள் பல கிடைத்துள்ளன. மலைபடுகடாம் பாடிய காலத்தைச் சேர்ந்த நடுகற்கள் இதுவரை கிடைக்கப்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலைபடுகடாம் பாடல்களில் மருதநிலப்பகுதியும் குறிஞ்சி நிலப்பகுதியும் பாடப்பெற்றுள்ளன. இதில் குறிஞ்சி நிலப்பகுதியான மலை நவிரமலை என்று அழைக்கப்படும் ஜவ்வாதுமலையின் ஒரு பகுதி, இதில் கூத்தர்கள் பரிசில் மலைவழியில் செல்வதாக குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த மலைப்பாதை காட்சிகள் இன்றும் ஜவ்வாதுமலை தொடரில் காணலாம். குறிப்பாக மஞ்சம்புல் வேய்ந்த வீடுகள், தேனை எடுக்கும் இளைஞர்கள், மலைமீதுள்ள காட்டுவழி, அருவிகள், பழைய கோட்டை போன்ற வர்ணணைகள் வெறும் கற்பனையாக அல்லாமல் இன்றும் உண்மையாக அங்கு நிலவிவருவதை பார்க்கலம்.

விலங்குகள்:

மலைப்படுகடாமில் யானை, புலி, காட்டெருது, காட்டுப்பன்றி, மான், மாடு, முள்ளம்பன்றி, முதலை போன்வை இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிப்பிடும் யானை என்பது அண்மைக்காலம் வரை இம்மலையில் இருந்துள்ளது. சேம்பாறைக் கல்வெட்டில் மலையின் ஒரு பகுதியை வேழநாடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. புலி இருந்தமைக்கான அடையாளமாக கோவிலூரிலும் மேல்பட்டிலும் 10 ஆம் நூற்றாண்டு புலிக்குத்திப்பட்டான் நடுகல் உள்ளன. இவை புலி இருந்தமைக்கான சாட்சி, காட்டெருது, காட்டுப்பன்றி, முள்ளம்பன்றி, மான்

போன்வை தற்போது காணப்படும் விலங்கினங்கள். முதலை இருந்ததற்கான அடையாளம் தற்போது இல்லை.

தாவரங்கள்:

மலைபடுகடாமில் பல்வேறு தாவரங்கள், கனிகள் பற்றிய குறிப்புகள் அழகாக தரப்பட்டுள்ளன. இதில் கூறப்பட்டிருக்கும் திணை, அரிசி, கரும்பு,இஞ்சி, நாவல், மா, புளி, வேங்கை, வாழை, குறிஞ்சி உள்ளிட்ட பல தாவரங்கள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறிஞ்சியைத் தவிர இதர தாவர வகைகள் இன்றும் ஜவ்வாதுமலையின் பரவலாக காணப்படுப்வையாக உள்ளன. விலங்குகள், தாவரங்கள் மற்றும் நிலவியல் அடிப்படையில் தனியே ஆய்வு செய்யும் அளவிற்கு பாடல் அமைந்துள்ளது. இடவசதி கருதி அதை இங்கு குறைத்துள்ளோம்.

சங்க இலக்கியமான மலைபடுகடாம் பாடப்பெற்ற இடம் செங்கம் மற்றும் ஜவ்வாதுலை மலைப்பகுதிதான் என தொல்லியல் சான்றுகளான கல்வெட்டுகள் மூலமும் செப்பேடுகள், ஓலைச்சுவடிகள் மூலமும் ஓரளவு நிறுவமுடிகிறது. பாடல் வரிகளில் வரும் விவரணைகளும் களஆய்வுகள் மூலம் நிறுவமுடிகிறது.

இந்த ஆய்வுவில் சவாலாக பணி, காரியுண்டிக்கடவுள் எங்குள்ளார் என்பதும் பெயருடன் வைக்கப்பட்ட சங்க கால நடுகற்கள் எங்குள்ளன என்றும் கண்டுபிடிக்கவேண்டியுள்ளது, இதுவும் எதிர் காலத்தில் சாத்தியப்படும் என்றே நம்புவோம்.

திருமழை தலைஇய இருணிற விசும்பின்
விண்ணதிர் இமிழிசை கடுப்பப் பண்ணமைத்துத்
திண்வார் விசித்த முழவொ டாகுளி
நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்
மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு
கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்
இளிப்பயிர் இமிரும் குறும்பரந் தூம்பொடு
விளிப்பது கவரும் தீங்குழல் துதைஇ
நடுவுநின் றிசைக்கும் அரிக்குரல் தட்டை
கடிகவர் பொலிக்கும் வல்வாய் எல்லரி

நொடிதரு பாணிய பதலையும் பிறவும்
கார்கோட் பலவின் காய்த்துணர் கடுப்ப
நேர்சீர் சுருக்கிக் காய கலப்பையிர்
கடுக்கலித் தெழுந்த கண்ணகன் சிலம்பில்
படுத்துவைத் தன்ன பாறை மருங்கின்
எடுத்துநிறுத் தன்ன இட்டருஞ் சிறுநெறி
தொடுத்த வாளியர் துணைபுணர் கானவர்
இடுக்கண் செய்யா தியங்குநர் இயக்கும்
அடுக்கல் மீமிசை அருப்பம் பேணாது
இடிச்சுர நிவப்பின் இயவுக்கொண் டொழுகித்

தொடித்திரி வன்ன தொண்டுபடு திவவின்
கடிப்பகை யனைத்தும் கேள்வி போகாக்
குரலோர்த்துத் தொடுத்த சுகிர்புரி நரம்பின்
அரலை தீர உரீஇ வரகின்
குரல்வார்ந் தன்ன நுண்டுளை இரீஇச்
சிலம்பமை பத்தல் பசையொடு சேர்த்தி
இலங்குதுளை செறிய ஆணி முடுக்கிப்
புதுவது புனைந்த வெண்கை யாப்பமைத்துப்
புதுவது போர்த்த பொன்போற் பச்சை
வதுவை நாறும் வண்டுகமழ் ஐம்பால்

மடந்தை மாண்ட நுடங்கெழில் ஆகத்து
அடங்குமயிர் ஒழுகிய அவ்வாய் கடுப்ப
அகடுசேர்பு பொருந்தி அளவினில் திரியாது
கவடுபடக் கவைஇய சென்றுவாங் குந்தி
நுணங்கர நுவறிய நுண்ணீர் மாமைக்
களங்கனி யன்ன கதழ்ந்துகிளர் உருவின்
வணர்ந்தேந்து மருப்பின் வள்ளுயிர்ப் பேரியாழ்
அமைவரப் பண்ணி அருள்நெறி திரியாது
இசைபெறு திருவின் வேத்தவை ஏற்பத்
துறைபல முற்றிய பைதீர் பாணரொடு

உயர்ந்தோங்கு பெருமலை ஊறின் றேறலின்
மதந்தபு ஞமலி நாவி நன்ன
துளங்கியல் மெலிந்த கல்பொரு சீறடிக்
கணங்கொள் தோகையிற் கதுப்பிகுத் தசைஇ
விலங்குமலைத் தமர்ந்த சேயரி நாட்டத்து
இலங்குவளை விறலியர் நிற்புறஞ் சுற்றக்
கயம்புக் கன்ன பயம்படு தண்ணிழல்
புனல்கால் கழீஇய மணல்வார் புறவில்
புலம்புவிட் டிருந்த புனிறில் காட்சிக்
கலம்பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ

தூமலர் துவன்றிய கரைபொரு நிவப்பின்
மீமிசை நல்யாறு கடற்படர்ந் தாஅங்கு
யாமவ ணின்றும் வருதும் நீயிரும்
கனிபொழி கானம் கிளையொ டுணீஇய

துனைபறை நிவக்கும் புள்ளின மானப்
புனைதார்ப் பொலிந்த வண்டுபடு மார்பின்
வனைபுனை எழின்முலை வாங்கமைத் திரடோ ள்
மலர்போல் மழைக்கண் மங்கையர் கணவன்
முனைபாழ் படுக்கும் துன்னருந் துப்பின்
இசைநுவல் வித்தின் நசையே ருழவர்க்குப் ...

புதுநிறை வந்த புனலஞ் சாயல்
மதிமா றோரா நன்றுணர் சூழ்ச்சி
வின்னவில் தடக்கை மேவரும் பெரும்பூண்
நன்னன்சேய் நன்னற் படர்ந்த கொள்கையொடு
உள்ளினிர் சேறிர் ஆயிற் பொழுதெதிர்ந்த
புள்ளினிர் மன்ற எற்றாக் குறுதலின்
ஆற்றின் அளவும் அசையுநற் புலமும்
வீற்றுவளஞ் சுரக்குஅவ நாடுபடு வல்சியும்
மலையும் சோலையும் மாபுகல் கானமும்
தொலையா னல்லிசை உலகமொடு நிற்பப் ...

பலர்புறங் கண்டவர் அருங்கலந் தரீஇப்
புலவோர்க்குச் சுரக்கும்அவ நீகை மாரியும்
இகழுநர்ப் பிணிக்கும் ஆற்றலும் புகழுநர்க்கு
அரசுமுழுது கொடுப்பினும் அமரா நோக்கமொடு
தூத்துளி பொழிந்த பொய்யா வானின்
வீயாது சுரக்குமவ நாள்மகி ழிருக்கையும்
நல்லோர் குழீஇய நாநவில் அவையத்து
வல்லா ராயினும் புறமறைத்துச் சென்றோரைச்
சொல்லிக் காட்டிச் சோர்வின்றி விளக்கி
நல்லிதின் இயக்குமவன் சுற்றத் தொழுக்கமும் ...

நீரகம் பனிக்கும் அஞ்சுவரு கடுந்திறல்
பேரிசை நவிர மேஎ யுறையும்
காரிஉண்டிக் கட வுள தியற்கையும்
பாயிருள் நீங்கப் பகல்செய்யா எழுதரு
ஞாயி றன்னவவன் வசையில் சிறப்பும்
இகந்தன ஆயினும் தெவ்வர் தேஎம்
நுகம்படக் கடந்து நூழி லாட்டிப்
புரைத்தோல் வரைப்பின் வேனிழற் புலவோர்க்குக்
கொடைக்கடன் இறுத்தவன் தொல்லோர் வரவும்
இரைதேர்ந் திவரும் கொடுந்தாள் முதலையொடு ...

திரைபடக் குழிந்த கல்லகழ் கிடங்கின்
வரைபுரை நிவப்பின் வான்றோய் இஞ்சி
உரைசெல வெறுத்தவன் மூதூர் மாலையும்
கேளினி வேளைநீ முன்னிய திசையே
மிகுவளம் பழுநிய யாணர் வைப்பிற்
புதுவது வந்தன் றிதுவதன் பண்பே
வானமின்னு வசிவு பொழிய ஆனாது
இட்ட வெல்லாம் பெட்டாங்கு விளையப்

பெயலொடு வைகிய வியன்கண் இரும்புனத்து
அகலிரு விசும்பி னாஅல் போல ...

வாலிதின் விரிந்த புன்கொடி முசுண்டை
நீலத் தன்ன விதைப்புன மருங்கின்
மகுளி பாயாது மலிதுளி தழாலின்
அகளத் தன்ன நிறைசுனைப் புறவிற்
கௌவை போகிய கருங்காய் பிடியேழ்
நெய்கொள வொழுகின பல்கவ ரீரெண்
பொய்பொரு கயமுனி முயங்குகை கடுப்பக்
கொய்பத முற்றன குலவுக்குரல் ஏனல்
விளைதயிர்ப் பிதிர்வின் வீவுக் கிருவிதொறும்
குளிர்புரை கொடுங்காய் கொண்டன அவரை ...

மேதி யன்ன கல்பிறங்கு இயலின்
வாதிகை யன்ன கவைக்கதிர் இறைஞ்சி
இரும்புகவர் வுற்றன பெரும்புன வரகே
பால்வார்பு கெழீஇப் பல்கவர் வளிபோழ்பு
வாலிதின் விளைந்தன ஐவன வெண்ணெல்
வேலீண்டு தொழுதி இரிவுற் றென்னக்
காலுறு துவைப்பிற் கவிழ்க்கனைத் திறைஞ்சிக்
குறையறை வாரா நிவப்பி னறையுற்று
ஆலைக் கலமருந் தீங்கழைக் கரும்பே
புயற்புனிறு போகிய பூமலி புறவின் ...

அவற்பதங் கொண்டன அம்பொதித் தோரை
தொய்யாது வித்திய துளர்படு துடவை
ஐயவி யமன்ற வெண்காற் செறுவின்
மையென விரிந்தன நீணறு நெய்தல்
செய்யாப் பாவை வளர்ந்துகவின் முற்றிக்
காயங் கொண்டன இஞ்சிமா விருந்து
வயவுப்பிடி முழந்தாள் கடுப்பக் குழிதொறும்
விழுமிதின் வீழ்ந்தன கொழுங்கொடிக் கவலை
காழ்மண் டெஃகம் களிற்றுமுகம் பாய்ந்தென
ஊழ்மல ரொழிமுகை உயர்முகந் தோயத் ...

துறுகல் சுற்றிய சோலை வாழை
இறுகுகுலை முறுகப் பழுத்த பயம்புக்கு
ஊழுற் றலமரும் உந்தூழ் அகலறைக்
கால மன்றியும் மரம்பயன் கொடுத்தலிற்
காலின் உதிர்ந்தன கருங்கனி நாவல்
மாறுகொள வொழுகின ஊறுநீ ருயவை
நூறொடு குழீஇயின கூவை சேறுசிறந்து
உண்ணுநர்த் தடுத்தன தேமாப் புண்ணரிந்து
அரலை உக்கன நெடுந்தாள் ஆசினி
விரலூன்று படுகண் ஆகுளி கடுப்பக் ...

குடிஞை இரட்டு நெடுமலை அடுக்கத்துக்
கீழு மேலுங் கார்வாய்த் தெதிரிக்

கரஞ்செல் கோடியர் முழவிற் றூங்கி
முரஞ்சுகொண் டிறைஞ்சின அலங்குசினைப்
பலவே
தீயி னன்ன ஒண்செங் காந்தள்
தூவற் கலித்த புதுமுகை ஊன்செத்து
அறியா தெடுத்த புன்புறச் சேவல்
ஊஉ னன்மையி னுண்ணா துகுத்தென
நெருப்பி னன்ன பல்லிதழ் தாஅய்
வெறிக்களம் கடுக்கும் வியலறை தோறும்

மணஇல் கமழு மாமலைச் சாரல்
தேனினர் கிழங்கினர் ஊனார் வட்டியர்
சிறுகட் பன்றிப் பழுதுளிப் போக்கிப்
பொருதுதொலை யானைக் கோடுசீ ராகத்
தூவொடு மலிந்த காய கானவர்
செழும்பல் யாணர்ச் சிறுகுடிப் படினே
இரும்பே ரொக்கலொடு பதமிகப் பெறுகுவிர்
அன்றவ ணசைஇ அற்சேர்ந் தல்கிக்
கன்றெரி யொள்ளிணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி

அலங்குகழை நரலும் ஆரிப் படுகர்ச்
சிலம்படைந் திருந்த பாக்க மெய்தி
நோனாச் செருவின் வலம்படு நோன்றாள்
மான விறல்வேள் வயிரிய மெனினே
நும்மில் போல நில்லாது புக்குக்
கிழவிர் போலக் கேளாது கெழீஇச்
சேட்புலம் பகல இனிய கூறிப்
பரூஉக்குறை பொழிந்த நெய்க்கண் வேவையொடு
குரூஉக்க ணிறடிப் பொம்மல் பெறுகுவிர்
ஏறித் தரூஉம் இலங்குமலைத் தாரமொடு

வேய்ப்பெயல் விளையுள் தேக்கட் தேறல்
குறைவின்று பருகி நறவுமகிழ்ந்து வைகறைப்
பழஞ்செருக் குற்றநும் அனந்தல் தீர
அருவி தந்த பழஞ்சிதை வெண்காழ்
வருவிசை தவிர்த்த கடமான் கொழுங்குறை
முளவுமாத் தொலைச்சிய பைந்நிணப் பிளவை
பிணவுநாய் முடுக்கிய தடியொடு விரைஇ
வெண்புடைக் கொண்ட துய்த்தலைப் பழனின்
இன்புளிக் கலந்து மாமோ ராகக்
கழைவளர் நெல்லின் அரியுலை ஊழ்த்து

வழையமை சாரல் கமழத் துழைஇ
நறுமலர் அணிந்த நாறிரு முச்சிக்
குறமகள் ஆக்கிய வாலவிழ் வல்சி
அகமலி உவகை ஆர்வமொ டளைஇ
மகமுறை தடுப்ப மனைதொறும் பெறுகுவிர்
செருச்செய் முன்பிற் குருசில் முன்னிய
பரிசில் மறப்ப நீடலும் உரியிர்
அனைய தன்றவன் மலைமிசை நாடே
நிரையிதழ்க் குவளைக் கடிவீ தொடினும்
வரையர மகளிர் இருக்கை காணினும்

உயிர்செல வெம்பிப் பனித்தலும் உரியிர்
பலநா ணில்லாது நிலநாடு படர்மின்
விளைபுன நிழத்தலிற் கேழல் அஞ்சிப்
புழைதொறு மாட்டிய இருங்கல் அடாடர்
அரும்பொறி உடைய வாறே நள்ளிருள்
அலரிவிரிந்த விடியல் வைகினிர் கழிமின்
நளிந்துபலர் வழங்காச் செப்பந் துணியின்
முரம்புகண் உடைந்த பரலவற் போழ்வில்
கரந்துபாம் பொடுங்கும் பயம்புமா ருளவே
குறிக்கொண்டு மரங் கொட்டி நோக்கிச்

செறிதொடி விறலியர் கைதொழூஉப் பழிச்ச
வறிதுநெறி ஒரீஇ வலஞ்செயாக் கழிமின்
புலந்துபுனிறு போகிய புனஞ்சூழ் குறவர்
உயர்நிலை இதணம் ஏறிக் கைபுடையூஉ
அகன்மலை யிறும்பில் துவன்றிய யானைப்
பகனிலை தவிர்க்கும் கவணுமிழ் கடுங்கல்
இருவெதிர் ஈர்ங்கழை தத்திக் கல்லெனக்
கருவிர லூகம் பார்ப்போ டிரிய
உயிர்செகு மரபிற் கூற்றத் தன்ன
வரும்விசை தவிராது மரமறையாக் கழிமின்

உரவுக்களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி
இரவின் அன்ன இருள்தூங்கு வரைப்பின்
குமிழி சுழலும் குண்டுகய முடுக்கர்
அகழ்இழிந் தன்ன கான்யாற்று நடவை
வழூஉமருங் குடைய வழாஅல் ஓம்பிப்
பரூஉக்கொடி வலந்த மதலை பற்றித்
துருவி னன்ன புன்றலை மகாரோடு
ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்
அழுந்துபட் டலமரும் புழகமல் சாரல்
விழுந்தோர் மாய்க்குங் குண்டுகயத் தருகா

வழும்புகண் புதைத்த நுண்ணீர்ப் பாசி
அடிநிலை தளர்க்கும் அருப்பமும் உடைய
முழுநெறி பிணங்கிய நுண்கோல் வேரலோடு
எருவை மென்கோல் கொண்டனிர் கழிமின்
உயர்நிலை மாக்கற் புகர்முகம் புதைய
மாரியி னிகுதரு வில்லுமிழ் கடுங்கணைத்
தாரொடு பொலிந்த வினைநவில் யானைச்
சூழியிற் பொலிந்த சுடர்ப்பூ விலஞ்சி
ஓரியாற் றியவின் மூத்த புரிசைப்
பராவரு மரபிற் கடவுட் காணிற்

தொழாஅநிர் கழியின் அல்லது வறிது
நும்மியந் தொடுதல் ஓம்புமின் மயங்குதுளி
மாரி தலையுமவன் மல்லல் வெற்பே
அலகை யன்ன வெள்வேர்ப் பீலிக்
கலவ மஞ்ஞை கட்சியில் தளரினும்
கடும்பறைக் கோடியர் மகாஅ ரன்ன
நெடுங்கழைக் கொம்பர்க் கடுவன் உகளினும்
நேர்கொள் நெடுவரை நேமியின் தொடுத்த
சூர்புகல் அடுக்கத்துப் பிரசங் காணினும்
ஞெரேரென நோக்கல் ஓம்புமின் உரித்தன்று

நிரைசெலல் மெல்லடி நெறிமாறு படுகுவிர்
வரைசேர் வகுந்திற் கானத்துப் படினே
கழுதிற் சேணோன் ஏவொடு போகி
இழுதி னன்ன வானிணஞ் செருக்கி
நிறப்புண் கூர்ந்த நிலந்தின் மருப்பின்
நெறிக்கெடக் கிடந்த இரும்பிணர் எருத்தின்
இருள்துணிந் தன்ன ஏனங் காணின்
முளிகழை இழைந்த காடுபடு தீயின்
நளிபுகை கமழா திறாயினிர் மிசைந்து
துகளறத் துணிந்த மணிமருள் தெண்ணீர்

குவளையம் பைஞ்சுனை அசைவிடப் பருகி
மிகுத்துப் பதங்கொண்ட பரூஉக்கட் பொதியினிர்
புட்கை போகிய புன்றலை மகாரோடு
அற்கிடை கழிதல் ஓம்பி ஆற்றநும்
இல்புக் கன்ன கல்லளை வதிமின்
அல்சேர்ந் தல்கி அசைதல் ஓம்பி
வான்கண் விரிந்த விடிய லேற்றெழுந்து
கானகப் பட்ட செந்நெறிக் கொண்மின்
கயம்கண் டன்ன அகன்பை யங்கண்
மைந்துமலி சினத்த களிறுமதன் அழிக்கும்

துஞ்சுமரங் கடுக்கும் மாசுணம் விலங்கி
இகந்துசேட் கமழும் பூவும் உண்டோ ர்
மறந்தமை கல்லாப் பழனும் ஊழிறந்து
பெரும்பயங் கழியினும் மாந்தர் துன்னார்
இருங்கால் வீயும் பெருமரக் குழாமும்
இடனும் வலனும் நினையினர் நோக்கிக்
குறியறிக் தவையவை குறுகாது கழிமின்
கோடுபல முரஞ்சிய கோளி யாலத்துக்
கூடியத் தன்ன குரல்புணர் புள்ளின்
நாடுகா ணனந்தலை மென்மெல அகன்மின்

மாநிழற் பட்ட மரம்பயில் இறும்பின்
ஞாயிறு தெறாஅ மாசு நனந்தலைத்
தேஎ மருளும் அமைய மாயினும்
இறாஅவன் சிலையர் மாதேர்பு கொட்கும்
குறவரு மருளுங் குன்றத்துப் படினே

அகன்கட் பாறை துவன்றிக் கல்லென
இயங்கல் ஓம்பிநும் மியங்கள் தொடுமின்
பாடின் அருவிப் பயங்கெழு மீமிசைக்
காடுகாத் துறையுங் கானவர் உளரே
நிலைத்துறை வழீஇய மதனழி மாக்கள்

புனற்படு பூசலின் விரைந்துவல் லெய்தி
உண்டற் கினிய பழனுங் கண்டோ ர்
மலைதற் கினிய பூவுங் காட்டி
ஊறு நிரம்பிய ஆறவர் முந்துற
நும்மி னெஞ்சத் தவலம் வீட
இம்மென் கடும்போ டினியிர் ஆகுவிர்
அறிஞர் கூறிய மாதிரங் கைக்கொள்பு
குறியவும் நெடியவும் ஊழிழிபு புதுவோர்
நோக்கினும் பனிக்கும் நோய்கூர் அடுக்கத்து
அலர்தாய வரிநிழல் அசையினிர் இருப்பிற்

பலதிறம் பெயர்பவை கேட்குவிர் மாதோ
கலைதொடு பெரும்பழம் புண்கூர்ந் தூறலின்
மலைமுழுதுங் கமழு மாதிரந் தோறும்
அருவிய நுகரும் வானர மகளிர்
வருவிசை தவிராது வாங்குபு குடைதொறும்
தெரியிமிழ் கொண்டநும் இயம்போ லின்னிசை
இலங்கேந்து மருப்பின் இனம்பிரி ஒருத்தல்
விலங்கல் மீமிசைப் பணவைக் கானவர்
புலம்புக் குண்ணும் புரிவளைப் பூசல்
சேயளைப் பள்ளி எஃகுறு முள்ளின்

எய்தெற இழுக்கிய கானவர் அழுகை
கொடுவரி பாய்ந்தெனக் கொழுநர் மார்பின்
நெடுவசி விழுப்புண் தணிமார் காப்பென
அறல்வாழ் கூந்தற் கொடிச்சியர் பாடல்
தலைநாட் பூத்த பொன்னிணர் வேங்கை
மலைமா ரிடூஉம் ஏமப் பூசல்
கன்றரைப் பட்ட கயந்தலை மடப்பிடி
வலிக்குவரம் பாகிய கணவன் ஓம்பலின்
ஒண்கேழ் வயப்புலி பாய்ந்தெனக் கிளையொடு
நெடுவரை இயம்பும் இடியுமிழ் தழங்குகுரல்

கைக்கோண் மறந்த கருவிரன் மந்தி
அருவிடர் வீழ்ந்ததன் கல்லாப் பார்ப்பிற்கு
முறிமே யாக்கைக் கிளையொடு துவன்றிச்
சிறுமை யுற்ற களையாப் பூசல்
கலைகை யற்ற காண்பின் நெடுவரை
நிலைபெய் திட்ட மால்புநெறி யாகப்
பெரும்பயன் தொகுத்த தேங்கொள் கொள்ளை
அருங்குறும் பெறிந்த கானவர் உவகை
திருந்துவேல் அண்ணற்கு விருந்திறை சான்மென
நறவுநாட் செய்த குறவர்தம் பெண்டிரொடு

மான்றோற் சிறுபறை கறங்கக் கல்லென
வான்றோய் மீமிசை அயருங் குரவை
நல்லெழி னெடுந்தேர் இயவுவந் தன்ன
கல்யா றொலிக்கும் விடர்முழங் கிரங்கிசை
நெடுஞ்சுழிப் பட்ட கடுங்கண் வேழத்து
உரவுச்சினந் தணித்துப் பெருவெளிற் பிணிமார்
விரவுமொழி பயிற்றும் பாக ரோதை
ஒலிகழைத் தட்டை புடையுநர் புனந்தொறும்
கிளிகடி மகளிர் விளிபடு பூசல்
இனத்திற் றீர்ந்த துளங்கிமி னல்லேறு

மலைத்தலை வந்த மரையான் கதழ்விடை
மாறா மைந்தின் ஊறுபடத் தாக்கிக்
கோவலர் குறவரோ டொருங்கியைந் தார்ப்ப
வள்ளிதழ்க் குளவியுங் குறிஞ்சியுங் குழைய
நல்லேறு பொரூஉம் கல்லென் கம்பலை
காந்தள் துடும்பிற் கமழ்மட லோச்சி
வன்கோட் பலவின் சுளைவிளை தீம்பழம்
உண்டுபடு மிச்சிற் காழ்பயன் கொண்மார்
கன்று கடாஅ வுறுக்கு மகாஅ ரோதை
மழைகண் டன்ன ஆலைதொறு ஞெரேரெனக்

கழைகண் ணுடைக்குங் கரும்பி னேத்தமும்
தினைகுறு மகளிர் இசைபடு வள்ளையும்
சேம்பு மஞ்சளும் ஓம்பினர் காப்போர்
பன்றிப் பறையுங் குன்றகச் சிலம்பும்
என்றிவ் வனைத்தும் இயைந்தொருங் கீண்டி
அவலவு மிசையவுந் துவன்றிப் பலவுடன்
அலகைத் தவிர்த்த எண்ணருந் திறத்த
மலைபடு கடாஅ மாதிரத் தியம்பக்
குரூஉக்கட் பிணையல் கோதை மகளிர்
முழவுத்துயில் அறியா வியலு ளாங்கண்

விழவின் அற்றவன் வியன்கண் வெற்பே
கண்ண் டண்ண்னெனக் கண்டுங் கேட்டுங்
உண்டற் கினிய பலபா ராட்டியும்
இன்னும் வருவ தாக நமக்கெனத்
தொன்முறை மரபினி ராகிப் பன்மாண்
செருமிக்குப் புகலுந் திருவார் மார்பன்
உருமுரறு கருவிய பெருமலை பிற்பட
இறும்பூது கஞலிய இன்குரல் விறலியர்
நறுங்கார் அடுக்கத்துக் குறிஞ்சி பாடிக்
கைதொழூஉப் பரவிப் பழிச்சினிர் கழிமின்

மைபடு மாமலை பனுவலிற் பொங்கிக்
கைதோய் வன்ன கார்மழைத் தொழுதி
தூஉ யன்ன துவலை தூற்றலின்
தேஎந் தேறாக் கடும்பரிக் கடும்பொடு
காஅய்க் கொண்டநும் இயந்தொய் படாமற்
கூவல் அன்ன விடரகம் புகுமின்
இருங்கல் இகுப்பத் திறுவரை சேராது
குன்றிடம் பட்ட ஆரிடர் அழுவத்து
நின்று நோக்கினும் கண்வாள் வெளவும்
மண்கனை முழவின் தலைக்கோல் கொண்டு

தண்டுகா லாகத் தளர்தல் ஓம்பி
ஊன்றினிர் கழிமின் ஊறுதவப் பலவே
அயில்காய்ந் தன்ன கூர்ங்கற் பாறை
வெயில்புறந் தரூஉம் இன்னல் இயக்கத்துக்
கதிர்சினந் தணிந்த அமயத்துக் கழிமின்
உரைசெல வெறுத்தவவ னீங்காச் சுற்றமொடு
புரைதவ உயரிய மழைமருள் பஃறோல்
அரசுநிலை தளர்க்கும் அருப்பமும் உடைய
பின்னி யன்ன பிணங்கரி னுழைதொறும்
முன்னோன் வாங்கிய கடுவிசைக் கணைக்கோல்

இன்னிசை நல்யாழ்ப் பத்தரும் விசிபிணி
மண்ணார் முழவின் கண்ணு மோம்பிக்
கைபிணி விடாஅது பைபயக் கழிமின்
களிறுமலைந் தன்ன கண்கூடு துறுகல்
தளிபொழி கானந் தலைதவப் பலவே
ஒன்னாத் தெவ்வர் உலைவிடத் தார்த்தென
நல்வழிக் கொடுத்த நாணுடை மறவர்
செல்லா நல்லிசைப் பெயரொடு நட்ட
கல்லேசு கவலை எண்ணுமிகப் பலவே
இன்புறு முரற்கைநும் பாட்டுவிருப் பாகத்

தொன்றொழுகு மரபினும் மருப்பிகுத்துத் துனைமின்
பண்டுநற் கறியாப் புலம்பெயர் புதுவிர்
சந்து நீவிப் புன்முடிந் திடுமின்
செல்லுந் தேஎத்துப் பெயர்மருங் கறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்து
கடவு ளோங்கிய காடேசு கவலை
ஒட்டா தகன்ற ஒன்னாத் தெவ்வர்
சுட்டினும் பனிக்குஞ் சுரந்தவப் பலவே
தேம்பாய் கண்ணித் தேர்வீசு கவிகை
ஓம்பா வள்ளற் படர்ந்திகும் எனினே

மேம்பட வெறுத்தவன் தொஃறிணை மூதூர்
ஆங்கன மற்றே நம்ம னோர்க்கே
அசைவுழி யசைஇ அஞ்சாது கழிமின்
புலியுற வெறுத்ததன் வீழ்பிணை யுள்ளிக்
கலைநின்று விளிக்குங் கானம் ஊழிறந்து
சிலையொலி வெரீஇய செங்கண் மரைவிடை
தலையிரும்பு கதழும் நாறுகொடிப் புறவின்

வேறுபுலம் படர்ந்த ஏறுடை இனத்த
வளையான் தீம்பால் மிளைசூழ் கோவலர்
வளையோர் உவப்பத் தருவனர் சொரிதலின்

பலம்பெறு நசையொடு பதிவயிற் நீர்ந்தநும்
புலம்புசேண் அகலப் புதுவிர் ஆகுவிர்
பகர்விரவு நெல்லின் பலவரி யன்ன
தகர்விரவு துருவை வெள்ளையொடு விரைஇக்
கல்லென் கடத்திடைக் கடலின் இரைக்கும்
பல்யாட் டினநிரை எல்லினிர் புகினே
பாலும் மிதவையும் பண்ணாது பெறுகுவிர்
துய்ம்மயிர் அடக்கிய சேக்கை யன்ன
மெய்யுரித் தியற்றிய மிதியதட் பள்ளித்
தீத்துணை யாகச் சேந்தனிர் கழிமின்

கூப்பிடு கடக்குங் கூர்நல் லம்பிற்
கொடுவிற் கூளியர் கூவை காணிற்
படியோர்த் தேய்த்த பணிவில் ஆண்மைக்
கொடியோள் கணவற் படர்ந்திகு மெனினே
தடியுங் கிழங்குந் தண்டினர் தரீஇ
ஓம்புநர் அல்ல துடற்றுநர் இல்லை
ஆங்குவியங் கொண்மின் அதுவதன் பண்பே
தேம்பட மலர்ந்த மராஅமெல் லிணரும்
உம்பல் அகைத்த ஒண்முறி யாவும்
தளிரொடு மிடைந்த காமரு கண்ணி

திரங்குமர னாரிற் பொலியச் சூடி
முரம்புகண் ணுடைந்த நடவை தண்ணென
உண்டனிர் ஆடிக் கொண்டனிர் கழிமின்
செவ்வீ வேங்கைப் பூவி னன்ன
வேய்கொள் அரிசி மிதவை சொரிந்த
சுவல்விளை நெல்லின் அவரையம் பைங்கூழ்
அற்கிடை உழந்தநும் வருத்தம் வீட
அகலு ளாங்கட் கழிமிடைந் தியற்றிய
புல்வேய் குரம்பைக் குடிதொறும் பெறுகுவிர்
பொன்னறைந் தன்ன நுண்ணேர் அரிசி

வெண்ணெறிந் தியற்றிய மாக்கண் அமலை
தண்ணெ ணுண்ணிழு துள்ளீ டாக
அசையினிர் சேப்பின் அல்கலும் பெறுகுவிர்
விசையங் கொழித்த பூழி யன்ன
உண்ணுநர்த் தடுத்த நுண்ணிடி நுவணை
நொய்ம்மர விறகின் ஞெகிழி மாட்டிப்
பனிசேண் நீங்க இனிதுடன் துஞ்சிப்
புலரி விடியற் புள்ளோர்த்துக் கழிமின்
புல்லரைக் காஞ்சிப் புனல்பொரு புதவின்
மெல்லவ லிருந்த ஊர்தொறு நல்லியாழ்ப்

பண்ணுப்பெயர்த் தன்ன காவும் பள்ளியும்
பன்னா ணிற்பினும் சேந்தனிர் செலினும்
நன்பல வுடைத்தவன் தண்பணை நாடே
கண்புமலி பழனங் கமழத் துழைஇ
வலையோர் தந்த இருஞ்சுவல் வாளை
நிலையோர் இட்ட நெடுநாண் தூண்டிற்
பிடிக்கை யன்ன செங்கண் வராஅல்
துடிக்கண் அன்ன குறையொடு விரைஇப்
பகன்றைக் கண்ணிப் பழையர் மகளிர்
ஞெண்டாடு செறுவிற் றாரஅய்க்கண் வைத்த

விலங்கல் அன்ன போர்முதற் றொலைஇ
வளஞ்செய் வினைஞர் வல்சி நல்கத்
துளங்குதசும்பு வாக்கிய பசும்பொதித் தேறல்
இளங்கதிர் ஞாயிற்றுக் களங்கடொறும் பெறுகுவிர்
முள்ளரித் தியற்றிய வெள்ளரி வெண்சோறு
வண்டுபடக் கமழுந் தேம்பாய் கண்ணித்
திண்டேர் நன்னற்கும் அயினி சான்மெனக்
கண்டோர் மருளக் கடும்புடன் அருந்தி
எருதெறி களமர் ஓதையொடு நல்யாழ்
மருதம் பண்ணி அசையினிர் கழிமின்

வெண்ணெல் அரிநர் தண்ணுமை வெரீஇச்
செங்கண் எருமை இனம்பிரி ஒருத்தல்
கனைசெலல் முன்பொடு கதழ்ந்துவரல் போற்றி
வனைகலத் திகிரியிற் குமிழி சுழலும்
துனைசெலற் றலைவாய் ஓவிறந் தொலிக்கும்
காணுநர் வயாஅங் கட்கின் சேயாற்றின்
யாணர் ஒருகரைக் கொண்டனிர் கழிமின்
நிதியந் துஞ்சு நிவந்தோங்கு வரைப்பிற்
பதியெழ லறியாப் பழங்குடி கெழீஇ
வியலிடம் பெறாஅ விழுப்பெரு நியமத்து

யாறெனக் கிடந்த தெருவிற் சாறென
இகழுநர் வெரூஉங் கவலை மறுகிற்
கடலெனக் காரென ஒலிக்குஞ் சும்மையொடு
மலையென மழையென மாட மோங்கித்
துனிதீர் காதலின் இனிதமர்ந் துறையும்
பனிவார் காவிற் பல்வண் டிமிரும்
நனிசேய்த் தன்றவன் பழவிறன் மூதூர்
பொருந்தாத் தெவ்வர் இருந்தலை துமியப்
பருந்துபடக் கடக்கும் ஒள்வாண் மறவர்
கருங்கடை எஃகஞ் சாத்திய புதவின்

அருங்கடி வாயில் அயிராது புகுமின்
மன்றில் வதியுநர் சேட்புலப் பரிசிலர்
வெல்போர்ச் சேஎய்ப் பெருவிற லுள்ளி
வந்தோர் மன்ற அளியர் தாமெனக்
கண்டோரெல்லாம் அமர்ந்தினிது நோக்கி
விருந்திறை அவரவர் எதிர்கொளக் குறுகிப்

*பரிபுலம் பலைத்தநும் வருத்தம் வீட
எரிகான் றன்ன பூஞ்சினை மராஅத்துத்
தொழுதி போக வலிந்தகப் பட்ட
மடநடை ஆமான் கயமுனிக் குழவி ...*

*ஊமை எண்கின் குடாவடிக் குருளை
மீமிசைக் கொண்ட கவர்பரிக் கொடுந்தாள்
வரைவாழ் வருடை வன்றலை மாத்தகர்
அரவுக்குறும் பெறிந்த சிறுகண் தீர்வை
அளைச்செறி உழுவை கோளுற வெறுத்த
மடக்கண் மரையான் பெருஞ்செவிக் குழவி
அரக்குவிரித் தன்ன செந்நில மருங்கிற்
பரற்றவழ் உடும்பின் கொடுந்தாள் ஏற்றை
வரைப்பொலிந் தியலும் மடக்கண் மஞ்ஞை
கானக் கோழிக் கவர்குரற் சேவல் ...*

*கானப் பலவின் முழவுமருள் பெரும்பழம்
இடிக்கலப் பன்ன நறுவடி மாவின்
வடிச்சேறு விளைந்த தீம்பழத் தாரம்
தூவற் கலித்த இவர்நனை வளர்கொடி
காஅய்க் கொண்ட நுகமரு ணூறை
பரூஉப்பளிங் குதிர்த்த பலவுறு திருமணி
குரூஉப்புலி பொருத புண்கூர் யானை
முத்துடை மருப்பின் முழுவலி மிகுதிரள்
வளையுடைந் தன்ன வள்ளிதழ்க் காந்தள்
நாகந் திலக நறுங்காழ் ஆரம் ...*

*கருங்கொடி மிளகின் காய்த்துணர்ப் பசுங்கறி
திருந்தமை விளைந்த தேக்கள் தேறல்
கானிலை எருமைக் கழைபெய் தீந்தயிர்
நீனிற வோரி பாய்ந்தென நெடுவரை
நேமியிற் செல்லும் நெய்க்கண் இறாஅல்
உடம்புணர்வு தழீஇய ஆசினி யனைத்தும்
குடமலைப் பிறந்த தண்பெருங் காவிரி
கடன்மண் டழுவத்துக் கயவாய் கடுப்ப
நோனாச் செருவி னெடுங்கடைத் துவன்றி
வானத் தன்ன வளமலி யானைத் ...*

*தாதெருத் ததைந்த முற்ற முன்னி
மழையெதிர் படுகண் முழுவுகண் இகுப்பக்
கழைவளர் தூம்பின் கண்ணிடம் இமிர
மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ்
நரம்புமீ திறவா துடன்புணர்ந் தொன்றிக்
கடவ தறிந்த இன்குரல் விறலியர்
தொன்றொழுகு மரபிற் றம்மியல்பு வழாஅது
அருந்திறற் கடவுட் பழிச்சிய பின்றை
விருந்திற் பாணி கழிப்பி நீண்மொழிக்
குன்றா நல்லிசைச் சென்றோர் உம்பல் ...*

*இன்றிவட் செல்லா துலகமொடு நிற்ப
இடைத்தெரிந் துணரும் பெரியோர் மாய்ந்தெனக்
கொடைக்கட னிறுத்த செம்ம லோயென
வென்றிப் பல்புகழ் விறலோ டேத்திச்
சென்றது நொடியவும் விடாஅன் நசைதர
வந்தது சாலும் வருத்தமும் பெரிதெனப்
பொருமுரண் எதிரிய வயவரொடு பொலிந்து
திருநகர் முற்றம் அணுகல் வேண்டி
கல்லென் ஒக்கல் நல்வலத் திரீஇ
உயர்ந்த கட்டில் உரும்பில் சுற்றத்து ...*

*அகன்ற தாயத் தஃகிய நுட்பத்து
இலமென மலர்ந்த கைய ராகித்
தம்பெயர் தம்மொடு கொண்டனர் மாய்ந்தோர்
நெடுவரை இழிதரு நீத்தஞ்சால் அருவிக்
கடுவரற் கலுழிக் கட்கின் சேயாற்று
வடுவாழ் எக்கர் மணலினும் பலரே
அதனால் புகழொடுங் கழிகநம் வரைந்த நாளெனப்
பரந்திடங் கொடுக்கும் விசும்புதோய் உள்ளமொடு
நயந்தனிர் சென்ற நும்மினுந் தான்பெரிது
உவந்த உள்ளமோ டமர்ந்தினிது நோக்கி ...*

*இழைமருங் கறியா நுழைநூற் கலிங்கம்
எள்ளறு சிறப்பின் வெள்ளரைக் கொளீஇ
முடுவல் தந்த பைந்நிணத் தடியொடு
நெடுவெ ணெல்லின் அரிசிமுட் டாது
தலைநாள் அன்ன புகலொடு வழிச்சிறந்து
பலநாள் நிற்பினும் பெறுகுவிர் நில்லாது
செல்வேந் தில்லவெந் தொல்பதிப் பெயர்ந்தென
மெல்லெனக் கூறி விடுப்பின் நும்முள்
தலைவன் தாமரை மலைய விறலியர்
சீர்கெழு சிறப்பின் விளங்கிழை அணிய ....*

*நீரியக் கன்ன நிரைசெலல் நெடுந்தேர்
வாரிக் கொள்ளா வரைமருள் வேழம்
கறங்குமணி துவைக்கும் ஏறுடைப் பெருநிரை
பொலம்படைப் பொலிந்த கொய்சுவற் புரவி
நிலந்தினக் கிடந்த நிதியமொ டனைத்தும்
இலம்படு புலவர் ஏற்றகைந் நிறையக்
கலம்பெயக் கவிழ்ந்த கழறொடித் தடக்கையின்
வளம்பிழைப் பறியாது வாய்வளம் பழுநிக்
கழைவளர் நவிரத்து மீமிசை ஞெரேரென
மழைசுரந் தன்ன ஈகை நல்கித்*

*தலைநாள் விடுக்கும் பரிசின் மலைநீர்
வென்றெழு கொடியிற் றோன்றும்
குன்றுசூழ் இருக்கை நாடுகிழ வோனே.*

மலைபடுகடாம் முற்றிற்று.

கன்னல் சுவை சங்கத்தமிழ் – 2



திருமதி. பௌசியா இக்பால்

சத்தியமங்கலம்

வணக்கம் அனைவருக்கும்!

'கன்னல் சுவை சங்கத்தமிழ்' இத்தலைப்பில் இன்று நாம் தெரிந்துகொள்ளவிருப்பது, சங்க இலக்கிய மக்களின் வாழ்வியலைப் பற்றியதொரு அழகான பாடலைத் தான். சங்ககால மக்களின் வாழ்வியல் என்றாலே அதிலே அகமும், புறமும் பெரும்பங்கு வகிப்பது மறுக்கமுடியாத ஒன்று. அதிலும் அன்று முதல் இன்றுவரை உலகம் இன்பத்தோடு தழைத்தோங்க காரணமாய் இருக்கும் அகப்பாடல்களுக்கு பெரும்வரவேற்பு இருப்பதையும் பார்க்கிறோம். மேலும், இன்றைய திரைப்படப் பாடல்களிலும் கூட சங்க இலக்கியத்தில் பயின்று வந்துள்ள காதல் வரிகளைப் பயன்படுத்துவதையும் பார்க்கின்றோம்.

அவ்வகையில் இன்றைய கட்டுரை சங்ககாலத்தில் தலைவனுக்கும் தலைவிக்குமிடையே மலரும் **"கண்டதும் காதல்"** எவ்வாறானது என்பதைப் பற்றித்தான் தெரிந்துகொள்ளப் போகிறோம். இதில் தலைவனுக்கும் தலைவிக்குமிடையே நடக்கும் காதலை, இப்பாடலின் ஆசிரியர் அக்காலத்தில் வாழ்ந்த அரசரின் வீரத்துடன் ஒப்பிட்டு கூறியிருப்பதுதான் கூடுதல் சிறப்பு.

தலைவனும் தலைவியும் முதல் பார்வையிலேயே காதல் கொள்கின்றார்கள். இப்பாடலின் ஆசிரியர் கபிலர், மலையமான் போர்முறையையும், வெற்றியையும், பின்னர் அமைதியை நிலைநிறுத்தியதையும் நேரில் கண்டவர். பின்னர் எங்கோ ஒருமுறை இவர்களுக்குள் நிகழும் இந்தக் காதல் போராட்டத்தையும் அவர் கண்டிருக்க வேண்டும். எனவே தான் புறவீரத்தை, இந்த அகத்தில் கண்டு ஒன்றோடொன்றை இணைப்படுத்திக் காட்சிப்படுத்தியுள்ளார். வாருங்கள், பாடலுக்குள் செல்லலாம்.

இன்றைய நம் பாடலின் தலைவன், தலைவியை எதேச்சையாக சந்திக்கிறான். தலைவன் அதற்கு முன் தலைவியை சந்தித்ததே இல்லை. அன்று தான் முதன்முதலாக தலைவியைச் சந்திக்கின்றான். அவளை பார்த்த நொடியே, இந்நிகழ்வு விதியின்வசத்தால் ஏற்பட்டதோ என எண்ணுகிறான்.

இவ்வாறு நினைக்க அவன் ஒன்றும் பெண்களையே பார்க்காமல் இருந்தவன் அல்ல. இவளை சந்திப்பதற்கு முன் பல பெண்களை கண்டிருக்கிறான். ஆனால், மற்றவர்களிடம் இல்லாத ஏதோ ஒன்றை இவளிடம் அவன் உணர்கிறான்.

இப்படி தலைவியை பார்த்து ஏதேதோ எண்ணிக்கொண்டிருக்கும் நம் தலைவனை இங்கேயேவிட்டுவிட்டு தலைவியிடம் செல்வோம் வாருங்கள்.

தலைவியும் அங்குள்ள கூட்டத்திற்கிடையே தெரிந்த தலைவனைப் பார்க்கிறாள். கண்டதும் பெண்மையின் நாணம் அவளை ஆட்கொள்கிறது. இதுவரை அவள் யாரிடமும் இந்த நாணத்தை உணரவில்லை. ஏன் இவனைக் கண்டதும் என் பெண்மை என்னை சுற்றுகிறது என இவளும் மயங்கி நிற்கிறாள்...

அடடா, இப்படியா ஒருவரை ஒருவர் கண்டதும் காதல் கொள்வார்கள்? இதுதான் விதியோ? நம்மையும் சிந்திக்க வைத்துவிட்டார்களே இந்த சங்க காதலர்கள்...

சரி இவர்கள் இப்படி நின்று ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டிருக்க, இவர்களை வேறொருவரும் காண்கிறார். யார் தெரியுமா??? அவர் வேறு யாரும் இல்லை நம்மை இவ்விடத்திற்கு அழைத்து வந்த இந்த நற்றிணைப்பாடலை இயற்றிய இப்பாடலின் உரிமையாளர் புலவர் கபிலர் அவர்கள் தான்...

இவர் இக்காதல் இணையைக் காணும் போது, அவர்கள் இருவரும் போரிட்டுக்கொண்டு இருந்தார்களாம்!? என்ன? ஆணுக்கும் பெண்ணுக்கும் போரா? என்ற வியப்பா?!

சற்று பொறுங்கள் முடித்துவிடுகிறேன்...

எதேச்சையாக சந்தித்த இருவரும் முதல் பார்வையிலேயே காதல் வயப்பட நேர்ந்தாலும், இப்பெண் மறத்தமிழச்சி அல்லவா? கண்டதும் ஒருவனை நெஞ்சுக்குள் குடிவைப்பாளா? அவளின் உடன்பிறந்த நாணம்தான் அதனை அனுமதிக்குமா? எனவே இப்பெண்ணிற்கு துணையாக அவளின் நாணம் முன்னின்று போரிட, அவளின் காதல் மனம், அன்பு அவனை தன் மனதிற்குள் தங்கவைத்துக்கொள்ள போராடுகிறது. இப்போராட்டங்கள் நம் தலைவிக்குள் நடக்கும் போராட்டம்...

நம் தலைவன் மட்டும் சலித்தவனா என்ன? ஆண்மையில் சிறந்தவன். தான் முன்னின்று எழும் போர்க்களங்களில் எதிரிகள் மீண்டார்கள் என்ற பேச்சுக்கே இடமில்லாத வீரதீரபராக்கிரமசாலி. இத்தகைய ஆண்மைபண்பு நிறைந்த இவன் ஒரு பெண்ணின் விழிவீச்சிற்கு கட்டுண்டு நிலைக்குலைந்து நிற்கிறானே... விந்தையல்லவா???

இவ்வாறு இருவருக்குள்ளும் தனித்தனியே போராட்டங்கள் நிகழ, இருவருமே நேரடியாக போரிடுகிறார்களாம்... இதை நான் கூறவில்லை. கபிலர் கூறியதை நான் முன்மொழிகிறேன்!!

தலைவன் தன் ஆண்மை என்ற படைகொண்டு, தலைவியின் நாணம் என்ற கோட்டையை தகர்க்கும் முயற்சியில் ஈடுபடுகிறான். தலைவியும், தலைவனின் முயற்சிக்கு சிறிதும் குறைந்தவள் அல்ல. தலைவனின் பண்பாடு என்னும் கோட்டையை, அவள் விழி என்ற படைகொண்டு தாக்குகிறாள். இப்போராட்டம் நெடுநேரம் நீடிக்கிறது. வெற்றி தோல்வி யாருக்கு என கூறமுடியாதபடி போராட்டம் வலுப்பெறுகிறது. போர் என்றால் முடிவென்ற ஒன்று உண்டல்லவா? ஆம், இவர்களில் காதற்போரில் இருதரப்பினருமே வெற்றி பெறுகிறார்கள். போரின் வெற்றிக்குப்பின் என்ன? இளைப்பாறுதல் தானே? தலைவனும் இப்போது இளைப்பாறுகிறான்.

இந்நிகழ்வானது, மலையமான் திருமுடிக்காரி மலைபோன்ற யானையின் மேல் ஏறிக்கொண்டு, புலையனின் துடிப்பறை ஒலிக்கப் பகைவருடைய நாட்டில் புகுந்து, அவர்களின் அரிய கோட்டையை அழித்து வெற்றிக்கொண்டு இளைப்பாறிது போல உள்ளதாம்.

போரில் வெற்றிபெற்ற அரசன், அதன்பின் அமைச்சர்களை கொண்டு ஆட்சி புரிவதைப்போல, தலைவியின் அன்பை காதல் போரில் வெற்றிகொண்ட தலைவன் தோழியின் உதவியை நாடுகிறான். தோழியும் தலைவன் மேல் பரிதாபப்பட்டு தலைவியிடம் தலைவனுக்காக தூது போகிறாள்...

இத்தகையதொரு அழகான காதலையும், வீரத்தையும் வெகுஅழகாக நமக்கு தந்து சென்ற கபிலருக்கு இத்தருணத்தில் ஒரு நன்றியை உரித்தாக்குவோமா?! இப்பாடல் தொகைநூல்களுள் ஒன்றான எட்டுத்தொகையில் இடம்பெற்றிருக்கும் நற்றிணையில் 77வது பாடலாக இடம்பெற்றுள்ளது.

வாருங்கள் காண்போம், நற்றிணையில் இடம்பெற்றுள்ள பாடல் வரிகளை...

நற்றிணைப்பாடல்: 77

மலையன் மா ஊர்ந்து போகி, புலையன்

பெருந் துடி கறங்கப் பிற புலம் புக்கு, அவர்

அருங் குறும்பு எருக்கி, அயா உயிர்த்தாங்கு

உய்த்தன்று மன்னே நெஞ்சே! செவ்வேர்ச்

சினைதொறும் தூங்கும் பயம் கெழு பலவின்

சுளையுடை முன்றில், மனையோள் கங்குல்

ஒலி வெள் அருவி ஒலியின் துஞ்சும்

ஊறலஞ் சேரிச் சீறூர், வல்லோன்

வாள் அரம் பொருத கோள் நேர் எல் வளை

அகன் தொடி செறித்த முன்கை, ஒள் நுதல்,

திதலை அல்குல், குறுமகள்

குவளை உண்கண் மகிழ் மட நோக்கே.

சிலம்பில் இசை



முனைவர் இரா.மணிமேகலை
இணைப்பேராசிரியர்
தமிழ்த் துறை
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி.
கோயம்புத்தூர் - 29

தமிழில் தோன்றிய முதல் காப்பியமாகிய சிலப்பதிகாரம் முத்தமிழ் படைப்பாகும்.சிலப்பதிகாரத்தை அதன் பதிகம் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' என்று குறிப்பிடுகிறது. பாட்டும் உரையுமாய் விரவி வருகின்ற நூலுக்கு எடுத்துக்காட்டாக பாட்டிடை வைத்த குறிப்பாக சிலப்பதிகாரம் விளங்குகிறது. கூத்து மரபும் இசைக்கலையும் இணைந்து இன்பம் தருகின்ற முறையை இக்காப்பியம் நன்கு விளக்குகிறது.

காப்பியத்தின் தொடக்கத்திலேயே மங்கல வாழ்த்துப் பாடல் என்று இளங்கோவடிகள் அமைக்கின்றார். மிகுந்த இசைத் தன்மையுடைய பாடல்களுடன் காப்பியம் தொடங்குகிறது.

நூல் முழுவதுமே இசைக்கலைச் செல்வம் கொட்டிக் கிடக்கின்றது. தமிழ்நாட்டின் இசையானது வேறு எங்கிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டது அல்ல இம்மண்ணின் வேரிலிருந்து பிறந்தது என்பதற்கான மாபெரும் எடுத்துக்காட்டாக சிலப்பதிகாரம் விளங்குகிறது .மேலும் சிலப்பதிகாரம் முதல் நூலாக மட்டுமல்லாமல் வேறு எந்த நூலின் தழுவலாகவும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.நாட்டார் மரபில் வழங்கும் மக்கள் இசையை நன்கு உள்வாங்கிக் கொண்ட இளங்கோவடிகள் செவ்வியல் இசையோடு இணைத்து இசை விருந்து படைக்கின்றார் இளங்கோவடிகள். தமிழில் தோன்றிய இசைத் தமிழ் இலக்கண நூல்கள் அழிந்து காணாமல் போய்விட அவற்றையெல்லாம் மீட்டெடுக்கும் விதமாக நம் கையில் இருக்கும் ஒரே ஒரு அமுதசுரபி சிலப்பதிகாரம் மட்டுமேயாகும்.

தமிழின் சங்க இலக்கியமே இசைக்குறிப்புகள் நிறைந்த பழந்தமிழ் கவிதையாக திகழ்கின்றது.இசைக் குறிப்புகள் இல்லாத சங்கப்பாடல்களை காண்பது அரிது.திணைகளை இசையோடு இணைத்துச் சங்கப் பாடல் பாடுகிறது.

"இசைத்தமிழ் நூலாகிய பெரு நாரை பெருங்குருகும் தேவவிருடி நாரதன் செய்த பஞ்சபாரதியம் முதலிய நூல்களும் இறந்தன. நாடகத் தமிழ் நூலாகிய பரதம், அகத்தியம் முதலிய தொன்னூல்களும் இறந்தன. பின்னும் முறுவல், சயந்தம், குணநூல், செயிற்றியம் என்பனவும் ஒரு சில சூத்திரங்கள் நடப்பதால் தெரிய வருகின்றனவே யன்றி அவற்றின் முதல் நடு இறுதி காண முடியவில்லை இவற்றோடு பெருங்கலம் என்னும் பேரியாழும் இறந்தது."

(சிலப்பதிகாரம் உ.வே.ச., முன்னுரை, ப.9.)

என்று தமிழ்த்தாத்தா சுட்டுவதால் தமிழ் இசை இலக்கண நூல்கள் முழுவதுமே அழிவுக்கு உள்ளான நிலை தெரிய வருகிறது.

சிலப்பதிகார உரையாசிரியர்அடியார்க்கு நல்லார் உரையின் மூலமாக தமிழிசை இலக்கண நூல்கள் பலவற்றின் பெயரையேனும் அறியமுடிகிறது. அகத்தியரின் சீடர்கள் பன்னிருவருள் சிகண்டி என்பார் சாரகுமாரன் என்பவர்க்காக இயற்றிய **'இசை நுணுக்கம்'** என்ற நூலும் பராசவ முனிவராகிய யாமளேந்திரர் செய்த **'இந்திர காளியமும்'** அறிவனார் இயற்றிய **'பஞ்ச மரபும்'** ஆதி வாயிலார் இயற்றிய **'பரத சேனாபதியமும்'** பாண்டியன் மதிவாணன் இயற்றிய **'நாடகத் தமிழ் நூலும் '** அடியார்க்கு நல்லார் உரையில் பற்பல இடங்களில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.

பண் தாளத்துடன் பொருந்தி பாடலாக உருவாகின்ற இசை தோன்றுகின்ற முறையைச் சிலப்பதிகாரம்

"யாழும் குழலும் சீரும் மிடறும்

தாழ் குரல் தண்ணுமை ஆடலோடு இவற்றின்

இசைந்த பாடல் இசையுடன் படுத்து

வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கி *"(3:26-29)*

என்று விளக்குகின்றது. ஆடலுக்கு உரிய இசையை உணர்ந்து பாடலை இசையமைக்கும் ஆசிரியரின் அறிவு எவ்வாறு இருக்க வேண்டும் என்று இலக்கணம் அமைக்கின்றார். இசை புணர்க்கும் திறமை உடைய கூத்தாசிரியர் யாழ்,குழல், தாளங்களின் வகைகள், மிடற்றிசை, தண்ணுமையின் தாள இசைக் கூறுகள் போன்றவற்றை அறிந்திருந்தால் தான் நடனக்கூத்தினை முறையாக மேடையில் நிகழ்த்த முடியும் என்கிறார் .அத்துடன் இயல் தமிழில் வல்லவராகவும் இருத்தல் வேண்டும். இயலும் இசையும் நன்கு உணர்ந்த ஒரு புலவனால்தான் கூத்துக் கலையை சிறப்பாக நிகழ்த்திக் காட்ட முடியும் என்கிறார்.

இதற்கு

"யாழ், குழல் ஆகிய கருவிகள் பண்ணிசையாகப் பாடலை புலப்படுத்துவன. அவற்றுள் இசை இருப்பினும் பாடல் எழுத்துக்கள் இயங்காது. இசையின் வழி பண்ணை புலப்படுத்தி பாடலை ஒலிப்பொருள் விளங்க வாசித்துக் காட்ட வேண்டும். ஆனால் மிடற்றுப் பாடல் இசையாகவும் எழுத்தாகவும் ஒலிப்பது. இரண்டு வகைக்கும் தாளம் உண்டு. இதனை நன்கு உணர்த்தும் முறையாக இளங்கோ இசையொலிக்கு உரிய யாழையும் குழலையும் முதலில் இணைத்துக் கூறிய பின்னர் எழுத்தொலி இசைக்குரிய மிடற்றைத் தனியாகச் சொல்லி இருவகைக்கும் பொதுவான தாளக்கூறுபாட்டை குறிப்பிடும் சீரை இடையில் அமைத்துக் காட்டியுள்ள பாங்கு அவருடைய இசை விளக்கும் திறனுக்கும் படைப்பாற்றலுக்கும் சான்றாக விளங்குகிறது"

(தமிழர் இசை, ப.189) என்றுஅறிஞர் சுட்டுவர். எனவே ஆடல், பாடல், இசை, தமிழ் . பண், பாணி, தூக்கு, முடம், தேசிகம் ஆகிய ஒன்பது கூறுகளைப் பற்றி அறிந்த ஆசிரியனே கூத்துக் கலையை நிகழ்த்திக் காட்ட முடியும் என்கிறார்.

யாழிசை குறித்த பெரும்பான்மையான தரவுகள் சிலப்பதிகாரத்தில் இருந்தே நமக்கு கிடைக்கின்றன கானல்வரி மாதவி யாழிசை மீட்டுவதை விரிவாக கூறுகின்றார் யாழிசை கருவியின் தெய்வீக நிலையைச் சுட்டுகின்றார்.இசை உனக்குத்துடன் யாழினை நீட்டுகின்ற முறையை ஆறு முறையில் அமைக்கின்றார் இளங்கோவடிகள்,

"பண்ணல் பரிவட்டணை ஆராய்தல் தைவிரல்
கண்ணிய செலவு விளையாட்டுச் கையூழ்
நண்ணிய குரும்போக்கு என்று நாட்டிய
எண் வகையால் இசையெழீஇப்
பண்வகையால் பரிவு தீர்ந்து
மரகதமணித் தாள்செரிந்த மணிக்காந்தள் மெல்
விரல்கள்
பயிர்வண்டின் கிளை போல பன்னரம்பின்
மிசைப்படர
வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல்
சீருடன் உருட்டல் தெருட்டல் அள்ளல்
ஏருடை பட்டடை என இசையோர் வகுத்த
எட்டு வகையின் இசைக்கரணத்துப்
பட்டவகை தான் செவினோர்த்
தேவலன் பின் பாணியாதெனக்
கோவலன் கையாழ் நீட்ட அவனும்" *(7:5-18)*

யாழைக் கையில் எடுத்தவுடன் இசைத்து விட முடியாது அதை செம்மைப்படுத்தி இசையோட்டி பார்த்து அதன் பின்னரே இசைக்க முடியும். இசைக் கருவியை கையாளுகின்ற முறையை மிக நுட்பமாக இளங்கோவடிகள் விளக்குகின்றார் .அதன் பின்னர் இசை நுணுக்கமுள்ள வாசிப்புக்கு ஆறு முறைகளைப் பின்பற்றுமாறு கூறுகின்றார்.

1.வார்தல்: இது சுட்டு விரலால் செய்யப்படுகிறது

2.வடித்தல்: சுட்டு விரலும் பெரு விரலும் கூட்டி நரம்பை அகமும் புறமும் ஆராயும் செயல்

3.உந்தல்:நரம்புகளை உந்தி வலிவிற்பட்டதும் மெலிவிற் பட்டதும் நிரலிழிபட்டதும் என அறிதல்.

4.உறழ்தல்:ஒன்றிடையிட்டும் இரண்டிடையிட்டும் ஆராய்ந்து காணல்

5.உருட்டல்: இடக்கை சுட்டு விரல் தானே உருட்டலும், வலக்கை சுட்டு விரல் தானே உருட்டலும், இரண்டு பெரு விரல்கள் தானே உருட்டலும் என பலவாறு வருதல்

6. தெருட்டல்: தெருட்டல் என்பதற்கு விதியாக ஒரு நூற்பா தரப்பட்டுள்ளது

"தெருட்டல் என்றது செப்பும் காலை

உருட்டி வருவ தொன்றே மற்ற

ஒன்றின் பாட்டுமடை யொன்ற நோக்கின்

வல்லோர் ஆய்ந்த நூலே ஆயினும்

வல்லோர்பயின்ற கட்டுரை ஆயினும்

பாட்டொழிந் துலகினில் ஒழிந்த செய்கையும்

வேட்டது கொண்டு விதியுற நாடி"

(தமிழர் இசை,ப.201)

இத்தனை விளக்க விதிகளை யாழிசை இசைப்பதற்கு இளங்கோவடிகள் கூறுகின்றார்.

இதைப் போலவே குழல் ஊதும் ஏழு சுரங்களுக்கு ஏழு விரல்களை எங்கனம் தொழில் படுத்த வேண்டும் எனவும் விளக்குகின்றார்.

யாழ், குழல், பாட்டு, தாளம், தண்ணுமை என்ற மிருதங்கம் போன்ற இசைக்கருவிகளின் கூட்டு இயக்கத்தைத் திறம்பட நெறியாள்வதோடு பாடலுக்கு ஏற்ற இசையையும் பாடலின் பொருளுக்கு ஏற்ற உணர்ச்சி பாவங்களையும் அமைத்துக் கொண்டு பாடலின் சொற்களுக்கு ஏற்ற இசையழகைக் கொடுத்து பாடலாசிரியரின் நோக்கத்தையும் புலப்படுத்துமாறும் ஆடலாசிரியரின் பாவனைக்கும் ஏற்றபடி வழி நடத்தக்கூடிய பெருந்தகுதி உடையவனாக இசையாசிரியனைக் காட்டுகின்றார் இளங்கோவடிகள்.

"முத்தமிழ் என்ற பகுப்பு தமிழுக்கே உரியது. பிற மொழிகளில் காண இயலாத மொழிப் பகுப்பு முறையாகும் அது. இயல்,இசை,கூத்து என்னும் முத்தமிழில் நடுவிடம் பெறுவது இசை. முதலாவதான இயலுக்கும் மூன்றாவதான கூத்திற்கும் இசை கட்டாயம் தேவை. எனவே இசை அவ்விரண்டனையும் நடுவில் நின்று இயக்குகின்றது எனலாம். இசை என்ற சொல்லே 'இசைவிப்பது','பொருத்துவிப்பது 'என பொருள் விளங்கும்." *(தமிழிசை இலக்கண மரபு, அணிந்துரை, டாக்டர் சி.பாலசுப்பிரமணியன்)*

இன்றைய கருநாடக இசையைக் கற்பிப்போர் ஆரோகணம் அவரோகணம் சரிகமபதநிச சநிதபமகரிசா என்று தொடங்குகிறார்கள் ஏழிசை எவ்வாறு தோன்றியது என்ற புரிதல் மாணவர்களுக்குக் கற்பிக்கப்படுவதில்லை. ராகங்கள் பண்கள் முதலியன தோன்றிய இலக்கணத்தை விளக்குவதற்கு உரிய அறிவுடையவர்கள் காணப்படுவதில்லை. இசை இலக்கணத்தைச் நன்றாக கற்பதற்கு தமிழ் இசை இலக்கண நூல்கள் பயிற்சி மிகவும் உதவும். அதில் தலைமைத் தன்மை வாய்ந்தது சிலப்பதிகாரமாகும்.பல வகைப்பட்ட பண்கள் சுரக் கூட்டங்களின் சேர்க்கையால் நூற்றுக்கணக்கான பண்களாக விரிகின்றன என்பதை சிலம்பு உரைக்கின்றது.தமிழகத்தில் தோன்றிய நுண்சுரங்களுக்கு இணையான இசை மரபு வேறெங்கும் கிடையாது என்று இசையறிஞர்கள் கருதுகின்றார்கள்.யாழ், பண்கள்,பாலைகள், பண் வகுத்தற்குரிய இலக்கணம்ஆகியவை குறித்த செய்திகளைப் பேசுகின்ற ஒரு இசை நூலாகவே இதனைச் கருதலாம்.

ஏழிசை என்பது உலகத்தில் உள்ள எல்லா இசைக்கும் பொதுவானது. இசை வடிவங்களான பண்களும் ராகங்களும் இசைப் பாடல்களும் ஏழிசையின் அளவிற்குக் கட்டுப்பட்டு இசக்கப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தில் கானல்வரி, வேட்டுவ வரி , ஊர் சூழ் வரி, மூன்றும் வரிப்பாடலாக உள்ளன.செல்வச் செழிப்பில் வாழும் கலைஞர்கள் பாடுவது, தன்னுணர்ச்சியாக தனிமையில் பாடுவது,பல்வேறு தொழில்களுக்கு நடுவில் இசைப்பது, விளிம்பு நிலை மக்களின் பாடல் என்று பல்வேறு இசைப்பாட்டு வகைகளைக் காட்டுகிறார் .அம்மானை வரி,கந்துக வரி, ஊசல் வரி என்று பெண்கள் விளையாட்டில் வைத்து வாழ்த்துக்களை கூறுகின்றார்.தேவந்தி அரற்று, காவற்பெண்டு அரற்று ,அடித்தோழி அரற்று போன்ற பகுதிகளில் துயர மேலீட்டில் கையறு நிலையில் பாடுகின்ற பாடலிலும் இசைக்குறிப்புகளை வைக்கின்றார்.

விளையாட்டு நேரம், இல்லத்தில் செய்கின்ற பணிகள், துயரச் செய்தி ஆகியவற்றுக்கான இசை முறைகளைக் கொண்டு இசைக்கருவூலமாகவே சிலப்பதிகாரம் திகழ்கின்றது.

வரிப் பாடல் குறித்து" வரிப்பது வரிப்பாடல். வரிப்பது என்றால் வருணிப்பது சொல்லால் வர்ணிப்பது பாடல் இயல்பு. இது நடை சிறந்தது .துள்ளல், தூக்கல், அகவல், நடை போட்டு ஒய்யாரமாய் ஓடுபவை. வரிப்பாடல் எனப்படுவதுபண்ணும், திறமும், செயலும் பாணியும் ஒரு நெறி இன்றி மயங்க சொல்லப்பட்ட எட்டன் இயல்பும் ஆறன் இயல்பும் பெற்று தன் முதலும் இறுதியும் கெட்டு இயல்பும் முடமுமாக முடிந்து சந்தியும் சாத்தும் பெறாது வருவதாகும்"

(சிலப்பதிகாரம் 7:16 அடியார்க்க நல்லார் உரை)

என்று அடியார்க்குநல்லார் சிலம்பில் இலக்கணம் காட்டுகின்றார்.ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை எனும் பகுதிகளில் முறையே ஆய்ச்சியரும் வேட்டுவர்களும் கூத்தாடிப் பாடி சந்தப்பாட்டு இசைக்கின்றார்கள்.புறஞ்சேரி இருத்த காதையில் கோவலன் பாணர்களோடு கூடி யாழ் இசைத்து மகிழ்ந்து பாடற்பாணி இசைக்கின்றான்.



சிறுபாணாற்றுப்படையில் சூழல்



முனைவர் வெ.மைதிலி
தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம்,
கோவை மாவட்டம்.

சீறியாழ் என்னும் செங்கோட்டு யாழை இசைக்கும் யாழ்ப்பாணன், சிறுபாணன் எனப்படுவான். சிறுபாணனை நல்லியக்கோடனிடம் செல்லும்படி ஆற்றுப்படுத்துவதால் 269 அடி கொண்ட இப்பாட்டு சிறுபாணாற்றுப்படை எனப் பெயர் பெற்றது.

பாட்டின் தொடக்கமே அழகுமிக்க உருவகங்கள் கொண்ட இயற்கை வருணனையுடன் தொடங்குகிறது. வரலாற்றுக் கருவூலமாகவும் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்கின்ற இந்நூலில் சூழலியல் கருத்துக்களைக் காணலாம்.

முன்னுரை

அமிழ்தினும் ஆற்ற இனியது நம் தமிழ்மொழி. இம்மொழி காலத்தானும் ஆற்றலானும் முந்தியது. அரிய சீரிய கருத்து நயம் மிக்கது. மெல்லிய இனிய சொற் கோவைகளையுடையது. இச்சிறப்புகளையெல்லாம் ஒருங்கே கண்ணாடி போல் தெளிவுறக் காட்டுவன நம் சங்க நூல் செல்வங்கள்.

சங்கத்தமிழ் ஓர் இலக்கியப் பேழை. அழியாத கற்பனைக் கருவூலம் கருத்து வளமும் கற்பனைச் சிறப்பும் பொருந்திய அழகான பாடல்களைப் பலவற்றைப் பெற்று விளங்குவது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தமிழர் வாழ்ந்த வாழ்க்யினை, வாழையடி வாழையாகத் தமிழ் மக்களாகிய நாம் படித்துப் பயன்பெறும் வற்றாத செல்வங்கள் ஆகும். இது புறத்தில் தோன்றும் காட்சிகளையும், அகத்தில் தோன்றும் கருத்துக்களையும் புனைந்து நிற்கும் அழியாத அழகு ஓவியம் ஆகும்.

இவை அழகியலை மட்டும் கூறவில்லை அகவாழ்வையும் புறவாழ்வையும் இயற்கையோடு சேர்த்தே வாழ்ந்தனர். அவர்களது வாழ்க்கைநெறிகளின் அனைத்துக் கூறுகளிலும் இயற்கை இரண்டறக் கலந்திருந்ததை அறியலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த பண்டையத் தமிழர்கள் நிலப்பரப்பு, நீர்பரப்பு, அங்குள்ள இயற்கை காட்சிகள், பருவகாலங்கள், பொழுதுகள் ஆகியன மனிதனுடைய வாழ்க்கையைப் பாதிக்கின்றன என்பதை ஆழ்ந்து நோக்கி உணர்ந்திருந்தனர். இயற்கையின் சூழல் மனித வாழ்க்கையில் ஏற்படுத்தும் மாறுதல்கள் வெளிப்படையாகத் தெரிவதில்லை எனினும் மிக நுண்ணிய முறையில் இயற்கை மனிதனின் உள்ளத்தைக் கவர்ந்து அவனது வாழ்க்கையின் போக்கு அமைவதற்கான மூலகாரணமாக விளங்கும் உண்மையைப் பண்டைத் தமிழர்கள் உணர்ந்திருந்தமையைச் சங்கப் பாடல்கள் காட்டுகின்றன.

சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படை நூலை யாத்த இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் வரலாறு நூலிற்பாடப் பெற்ற வள்ளன்மை சான்ற குறுநில மன்னன், ஓவியர் பெருமகன் ஓய்மா நாட்டு நல்லியக்கோடனின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன.

சீறியாழ் என்னும் செங்கோட்டு யாழை இசைக்கும் யாழ்ப்பாணன், சிறுபாணன் எனப்படுவான். சிறுபாணனை நல்லியக்கோடனிடம் செல்லும்படி ஆற்றுப்படுத்துவதால் 269 அடி கொண்ட இப்பாட்டு சிறுபாணாற்றுப்படை எனப் பெயர் பெற்றது.

பாட்டின் தொடக்கமே அழகுமிக்க உருவகங்கள் கொண்ட இயற்கை வருணனையுடன் தொடங்குகிறது. வரலாற்றுக் கருவூலமாகவும் பண்பாட்டுப் பெட்டகமாகவும் திகழ்கின்ற இந்நூலில் சூழலியல் கருத்துக்களைக் காணலாம்.

சூழல் என்பதற்கு ஆராய்தல், ஆலோசனை, இடம், கருத்து, குறிப்பு கூட்டம், சுற்றுப்புறம் எனப் பொருள் கொள்ளப்படுகிறது. அருவிகள், காடுகள் என்ற இயற்கையான சூழலையும் குறிக்கிறது□இ என்று நா.கதிரைவேற் பிள்ளையின் தமிழ் மொழி அகராதி (ப.702) விளக்கம் தருகின்றது.

சுற்றுச்சூழலியல் என்பது அறிவியலில் அண்மையில் வளர்ந்து வரும் ஒரு துறை. மனிதனைச் சூழ்ந்துள்ளது என்றாகும் போது நீர், காற்று, வான், மலை, மரம், செடி, கொடி, விலங்கினங்கள் என்பன அனைத்தும் உள்ளடங்குகின்றன.

(தொ.சானகிராமன், அறிவியல் தமிழ் இலக்கியம் ப.176)

பொதுவாகச் சுற்றுச்சூழல் என்பது ஓர் உயிரினத்தைச் சுற்றியுள்ள பொருட்களின் தொகுப்பு அல்லது ஓர் உயிரினம் இயற்கையுடன் கொண்டுள்ள தொடர்பு எனலாம்.

சேரர்களின் தலைநகரமான வஞ்சி நகரம் பற்றிக் கூறும் போது

கொழுமீன் குறைய ஓதுங்கி, வள்இதழ்க

கழுநீர் மேய்ந்த கயவாய் எருமை.

(சிறுபாண்: 41, 42)

என்ற சிறுபாணாற்றுப்படை வரி இயற்கை வளத்தினையுடைய சேர நாட்டின் சிறப்பான நிலவளத்தினைக் கூறுகின்றது. நிலவளம் மிகுந்து இருப்பதற்குச் சான்றாக எருமைமாடு உறங்குவது கூறப்பட்டுள்ளது. நீர்வளம் மிகுதியாக உடைய வஞ்சி நகரத்தின் நீர்நிலைகளில் வாழும் கொழுத்த மீன்கள் இரண்டு துண்டுகளாகச் சிதையும்படி நடந்து உலவிய இதழையுடைய செங்கழுநீர் மலரை மேய்ந்தது பசிய மிளகுக் கொடி படர்ந்திருக்கும் பலா மரத்தின் நிழலிலே மஞ்சள் செடியின் இலை தனது முதுகைத் தடவ, காட்டு மல்லிகையின் மீது கள்ளின் மணம் கமழ அடையிட்டு உறக்கம் கொள்ளும்: அந்நாட்டின் நிலவளம் இருந்த காரணத்தால் உயிர்கள், நிரம்பிய உணவு கிடைக்கப்பெற்று ஆனந்தக் களிப்பில் மகிழ்ந்திருந்த நிலை பதிவாக்கப் பட்டுள்ளது.

இத்தகைய நிலவளம் சிறந்திருக்க அங்கு நீர்வளம் சிறப்பாக இருந்ததே காரணம் ஆகும்.

மேலும், காட்டு மயில் அகவியதனைக் கேட்டு, அது குளிரால் வருந்தியது என எண்ணி கலிங்கம் நல்கிய கொடைமடம் மிக்க பேகனின் மலையானது பருவமழை பொய்யாது பெய்யும் வளமுடையது என்பதனை,

வானம் வாய்த்த வளமலைக் கலாஅன்

கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

(சிறுபாண் : 84-85) என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன.

சுற்றுச் சூழல் மாசு

சுற்றுச்சூழல் மாசுபாடு என்பதில் மாசு என்ற சொல் தூய்மையின்மை என்ற பொருளைக் கொடுக்கின்றது.

“ழடடரவழைெ என்ற சொல் இலத்தீன்ட சொல்லான **“ழடடரவரள** என்பதிலிருந்து தோன்றியது.

மாசுப்படுத்துதல், தூய்மையைக் கெடுத்தல் என்ற பொருளில் இது அமைந்தது. சுற்றுச் சூழலில் இருக்கும் எந்தவொரு (மூலப்) பொருளுக்கும் ஒரு குறிப்பிட்ட ஓர் அமைப்பு முறை உண்டு. அயல் பொருள் ஏதாவது ஒன்று அதனுடன் சேரும்பொழுது, அந்த மூலப்பொருளின் உரு அமைப்பு மாறிவிடுகிறது. அதன் தனித்தன்மையை இழந்து விடுகிறது. இந்த மாறுப்பட்ட நிலையினால் அந்த மூலப் பொருள் தனக்குரிய நோக்கை இழக்கிறது. இந்த மாறிய நிலை மாசுபடுதல் ஆகும். மாசு என்றால் தூய்மையற்ற என்று பொருள்.

(ஆ.சந்திரசேகரன், சுற்றுச்சூழல் சட்டம் ப.7)

சிறுபாணாற்றுப்படையில் மதுரை நகரின் பொய்கை மாசடைந்திருந்த நிலையை,

மகிழ்நனை மறுகின் மதுரையும் வறிதே அதாஅன்று

நறுநீர்ப் பொய்கை அடைகரை நிவந்த

துறுநீர்க் கடம்பின் துணையார் கோதை

ஓவத் தன்ன உண்டுறை மருங்கிற்

கோவத்துஅன்ன கொங்கு சேர்பு உறைத்தலின்

(சிறுபாண்:67-71) என்ற வரிகளின் மூலம் காட்டப்பட்டுள்ளது. மதுரையில் நல்ல நீரையுடைய பொய்கையினுடைய கரையில் வளர்ந்து செறிந்த தன்மையையுடைய கடம்ப மரத்தின் நிறைந்த மாலை போன்ற மலர், ஓவியம், எழுதியதைப் போன்ற அழகு பொருந்திய நீர் உண்ணும் துறையின் அண்மையில் மலர்ந்த தாமரைப் பூவின் தாதை உதிர்த்தலால் நீரானது மாசடைகின்றது.

இதே போன்று நிலம் மாசு சிறுபாணாற்றுப் படையில் கரையான்களால் ஏற்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.இதனை,

காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த

பூமி பூத்த புழல் காளாம்பி

(சிறுபாண்:133-134) என்ற வரிகள் மெய்ப்பிக்கின்றன. மேலும் மரங்களையும் மனிதத் தேவைகளுக்கு வெட்டி பயன்படுத்தப்பட்டிருத்தலையும் அறியலாம்.

எழுஉறழ் திணிதோள்

(சிறுபாண்:49) என்ற தொடரில் சேரனின் தோள் வலிமை கூறப்பட்டுள்ளது. **எழு** என்பது கோட்டைக் கதவுகளைப் பூட்டும் போதும் தாழ்ப்பாள் போன்று குறுக்கே அமைக்கப்படும் மரம்.இம்மரம் மிகுந்த வலிமை உடையதாக இருக்கும். **எழு** என்பது கணைய மரம் கோட்டையின் கதவுகள் போன்ற தம் பயனபாட்டிற்கு தேவையான மரங்களையெல்லாம் அன்றும் வெட்டி வீழ்த்திப் பயன்படுத்தியிருக்கின்றனர் என்பது நன்கு புலப்படுகிறது.

நீர், நிலம் மட்டுமல்ல காற்றும் மாசுபட்டு புழுதிபடிந்துள்ளன என்பதை,

அண்ணல் யானை அருவிதுகள்அவிப்ப

(சிறுபாண்:200) பெரிய நகங்களையும், பெரிய கால்களையும் உடைய யானையின் மதநீர் அருவியைப் போலப் பாய்ந்து, விழாக்கள் நிறைந்த நல்லியக் கோடனின் ஊரின்கண் தெருக்களில் எழும் தூசு, துகள்கள் அடங்கித் தோன்றுகின்றன எனக் கூறுவதன் மூலம் காற்றில் தூசுகள் நிறைந்து மாசடைந்திருந்தது என்பது தெளிவாகிறது.

தட்பவெப்ப சூழல் மாறி மாறி அமைந்திருந்தன என்பதும் அதனால் மக்களின் வாழ்வும் பாதிக்கப்பட்டன என்பன போன்ற செய்திகளும் அறிந்து கொள்ள முடிகிறது.

கதுப்ப விரித்தன்ன காழக நுணங்குஅறல்

அயில்உருப் பனைய ஆகி ஐதுநடந்து

வெயில் உருப் புற்ற வெம்பரல் கிழிப்ப

(சிறுபாண் : 6-8) நீர் வற்றிய காட்டாற்றின் கரையிலமைந்த பூம்பொழிவில் கருமணலானது மகளிரின் கருநிற கூந்தல் விரிந்தாற் போன்று இருந்ததோடு கரும்பொன்னான இரும்பு வெப்பத்தை ஏற்றது போன்ற அம்மணற் பரப்பில் கிடந்த வரிய பரள்கற்கள் வெப்பமேற்றுக் கால்களைக் கிழித்து வருத்தும் நிலையில் வேனிற் பருவம் இருந்தது என ஆசிரியர் கூறுகிறார்.

புலவர் இந்த அடிகளில் பாலை நிலத்தின் பண்புகளைச் சித்தரிக்கிறார். தமிழகத்தில் பாலை நிலம் என்று தனியே ஒரு நிலப்பகுதி இல்லை. முதுவேனிற்காலத்தில் குறிஞ்சியும் முல்லையும் தன்நிலையில் மாறி சுற்றுச் சூழலில் மாறுபாடுகளை ஏற்படுத்துகின்றது என்பதனை எடுத்தியம்புகிறார்.

காட்டாற்றில் ஒரு காலத்தில் தண்ணீர் பெருகியோ, இப்போது வறண்டு கிடப்பதால், தண்ணீர் ஓடிய இடத்தில் வழிந்த கறுப்பு வண்டல் மண் படிந்திருப்பதைப் புலப்படுத்துகிறார். மேலும் நிலம், நீர், காற்று போன்றவற்றைப் பற்றிய அறிவு மட்டுமல்ல வானியல் அறிவும் பெற்று சூழலின் முழுமையான அறிவு பெற்றவர்களாக நம் சங்கப்புலவர்கள் வாழ்ந்திருந்தனர் என்பதனை சிறுபாணாற்றுப்படைக் காட்டுகிறது.

வாள்நிள விசும்பின் கோன்மீன் சூழ்ந்த இளங்கதிர் ஞாயிறு

(சிறுபாண் : 242-243)என்ற வரிகள் கோள்கள் அனைத்திற்கும் நடுவில் சூரியன் அமைந்துள்ள காட்சி காட்டப்பட்டுள்ளது.

அறிவினால் ஆகும் ஆக்கமே ஒருவரை உயர்த்தும் என்ற கருத்தின் வழி நம் சங்கப் புலவர்கள் பரந்துபட்ட புலமையைப் பெற்றிருந்தனர் என்பது வெள்ளிடை மலை.

தொகுப்புரை:

- ஐம்பூதங்களால் உருவாக்கிய இந்த உலகம் அனைத்து உயிர்களுக்கும் வாழ்விடமாகத் திகழும் தன்மையும், சங்ககாலத் தமிழர் நிலத்தை குறிஞ்சி, முல்லை, மருதம், நெல்லை, பாலை என பகுத்துக் கொண்டு எடுத்துரைக்கப்பட்டுள்ளன.
- உயிரினங்கள் வாழ்வதற்கு தேவையான அமைப்பையும், சூழலையும் இயல்பாகக் கொண்டு நிலமே அடிப்படை ஆதாரமாகத் திகழ்ந்து மானிட உயிர்களின் வாழ்வைச் செம்மையாக்குகின்றது.
- பண்டைக் காலந்தொட்டே பயிர்செய்வதற்காகவும் இல்லங்கள், கோட்டைகள் அமைப்பதற்காகவும் கால்நடைகளுக்காகவும் மரங்கள் அழிக்கப்பட்டமை தெளிவாகின்றது.
- விழாக்காலங்களில், நீர்நிலைகள், மாசு அடைதலும், புழுதிகள், துகளால் காற்றும் மாசுபாடு அடைந்தமையும் அறிய முடிகிறது.
- இலக்கியத்தின் பாடுபொருளென்பது இடம், காலம், சூழல், வாழ்வியல் ஆகிய கூறுகளை அடித்தளமாகக் கொண்டு அன்றைய சமூகத்தைப் பிரதிபலித்துக் காட்டும் வாழ்வியல் இலக்கியமாகத் தன்னை அடையாளப் படுத்திக் கொண்டது சிறுபாணாற்றுப் படை.

பார்வை நூல்கள்:

1.பத்துப் பாட்டு, வித்துவான், ஆ. நாராயணப் பிள்ளை.

2.சிறுப்பாணாற்றுப்படை முனைவர் ம. திருமலை.

3.பத்துப்பாட்டு ஆய்வுக் கோவை (சிறுபாணாற்றுப்படை) முனைவர் க.முருகேசன்.

4.தமிழ் மொழி அகராதி, நா.கதிரைவேற் பிள்ளை.

5.அறிவியல் தமிழ் இலக்கியம், தொ.சானகிராமன்.

6.சுற்றுச்சூழல் சட்டம், ஆ.சந்திரசேகரன்.

கிருஷ்ணதேவராயர் காலத்தில் திருமண அமைப்பு



மு.ச.சதீஷ்குமார்.B.tech
எழுத்தாளர்
தலைமைச்செயலக அலுவலர்
சென்னை.

பாரம்பரிய இந்து சமூகத்தின் வாழ்வில் திருமணம் மிக முக்கிய அமைப்பாகும். ஓர் ஆண் ஒரு பெண்ணுடன் நிலையான உறவில் இருப்பதற்கும் குழந்தைகளைப் பெற்றுக் கொள்வதற்கும் திருமணம் என்ற அமைப்பு அவசியமானது.

விஜயநகர அரசைப் பொறுத்த வரை, திருமணம் கீழ்க்கண்ட மூன்று காரணங்களுக்காக அவசியம் என வரையறுக்கப்பட்டது:-

1. மதம் தொடர்பான சடங்குகளைத் தொடர்ந்து கடைபிடிப்பதற்கு

2. தன் பரம்பரையைப் பெருக்கிக் கொள்வதற்கு

3. தாம்பத்யத்திற்கு

தர்ம சாஸ்திரங்கள் எட்டுவகையான திருமண வடிவங்களைக் குறிப்பிடுகின்றன.

1.பிரம்மம்

2.தெய்வம்

3.அர்சம்

4.பிரஜாபத்யம்

5.கந்தர்வம்

6.அசுரம்

7.ராட்சசம்

8.பிசாசம்

கிருஷ்ணதேவராயர் காலத்தில், சமூகத்தில் நிலவி வந்த திருமண அமைப்பு பற்றி, போர்ச்சுகீசிய பயணிகளான டொமிங்கோ பயஸ், ஃபெர்னோ நுனிஸ் மற்றும் பாரசீக பயணியான

ஃபெரிஸ்டாவின் குறிப்புகளும், கிருஷ்ணதேவராயரின் ஆமுக்தமால்யதா நூலும், வெண்ணேலகன்டி சுரானாவின் விஷ்ணு புராணமும் மொல்லாவின் இராமாயணமும் தெளிவாக விளக்குகின்றன.

மேற்கூறிய எட்டு வகைகளில், விஜய நகர காலத்தில் முதல் நான்கு புழக்கத்தில் இருந்தன. காந்தர்வமும் இராட்சசமும் க்ஷத்திரியர்களுக்கு அனுமதிக்கப்பட்டன. அசுரமும் பிசாசமும் அனுமதிக்கப்படவில்லை. பொதுவாக விஜயநகரத்து இலக்கியங்கள் அர்சம் அல்லது கன்னியாதானம் என்ற முறை அனைவருக்கும் உகந்தது என தெரிவித்தன. மேலும், ஆந்திர தேசத்தில் இந்த முறையே பரவலாகக் காணப்பட்டது.

திருமணம் என்பது இக்கால கட்டத்தில் செலவினம் மிகுந்ததாக இருந்தது. அந்தச் செலவு பெண்ணைப் பெற்ற தந்தையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மணமகன் மற்றும் அவனது உறவினர்கள், மணமகள் வீட்டாரால், தேன் மற்றும் தயிர் கலந்து உருவாக்கப்பட்ட 'மதுபர்க்கம்' என்னும் பானம் வழங்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். திருமண நிகழ்வு, பனை ஓலைகளால் பின்னப்பட்ட மாவிலைத்தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட ஒரு குடிலில் நடைபெற்றது. முழு நிகழ்வும் புரோகிதர்கள் முன்னிலையில் வேதங்கள் ஓதப்பெற்று நடைபெற்றது.

மணமகள், மணமகனுக்கு எதிரே ஒரு திரையிடப்பட்டு அதற்கு அப்பால் அமர்ந்திருப்பாள். மணமகனும் மணமகளும் சீரகத்தையும் வெல்லத்தூளையும் அட்சதையாக ஒருவர் தலை மீது ஒருவர் போட்டுக்கொள்வர். இதை கிருஷ்ணதேவராயர் தனது ஆமுக்தமால்யதாவில் தலம்பராலு என்று வர்ணிக்கின்றார். மணமகளின் கழுத்தில் மங்கலசூத்திரம் கட்டப்பட்ட பிறகு, இருவரும் தத்தமது சுண்டுவிரல்களைக் கோத்தபடி நெருப்புக்குழியை ஏழு முறை சுற்றி வருவர்.

ஓலி அல்லது கன்யாசுகம்:

மணமகன் வீட்டார் பெண்வீட்டாருக்கு 100 மடக்காக பெண்ணுக்கு வழங்க வேண்டும். சூத்திரர்கள் 10 மடக்குகள் வழங்க வேண்டும். இராஜமகேந்திரபுரம் அருகிலுள்ள கொண்டபள்ளியில் 21 கிண்ணம் தங்கமும் 12.5 கிண்ணம் வெள்ளியும் பெண் வீட்டாருக்கு வழங்க வேண்டியது புழக்கத்திலிருந்தது. படைவீட்டில் உள்ள கல்வெட்டின் படி, 15 ஆம் நூற்றாண்டில் பிராமணர்கள் உட்பட கம்மவர்கள், தமிரா, தெலுங்கு, இல்லடா போன்றோரின் அனைத்து கோத்திரங்களும் சூத்திரர்களும் கன்யாதானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் சமூகத்தை விட்டு ஒதுக்கி வைக்கப்படுவர்.

கி.பி.1570 இல் கர்னூல் மாவட்டம் நந்தவரத்தில் கிடைத்த கல்வெட்டின் படி, கன்யாசுகத்தை ஏற்றுக்கொண்டவர்கள் சமூகதை விட்டு விலக்கி வைக்கப்பட்டார்கள்.

அரணம்:

அரச குடும்பங்கள் மற்றும் மேல்தட்டு மக்களிடையே, திருமணத்தின்போது பெண்ணுக்கு புடைவைகள் விலை உயர்ந்த ஆபரணங்கள் வழங்கப்பட்டன. இதற்கு வரக்கட்டணம் என்ற பெயரும் வழங்கப்பட்டது. அரச குடும்பங்களிலும் நிலக்கிழார்களிலும் இந்த ஸ்த்ரீ தானம் தாராளமாக காணப்பட்டது

திருமண வரி:

மணப்பெண் கன்னிப்பெண் என்னும் பட்சத்தில் திருமண வரி வசூலிக்கப்பட்டது. பந்தல் மற்றும் இதரவை மீதான வரிகளும் வசூலிக்கப்பட்டன. கிழக்கு கோதாவரி

மாவட்டத்திலுள்ள திரக்சாரமம் பகுதியிலுள்ள கல்வெட்டு திருமண வரியை நீக்கியதை குறிக்கிறது.

குழந்தைத் திருமணம்:

விஜயநகர காலத்தில் குழந்தைத் திருமணம் பரவலாகக் காணப்பட்டது. பாரசீகப்பயணி ஃபெரிஷ்டாவின் கூற்றுப்படி, ஏழு வயது சிறுமியும் ஒன்பது வயது சிறுவனுக்கு திருமணம் செய்து வைக்கப்பட்டாள். ஆனால், பெண் பூப்பெய்திய பிறகே தாம்பத்யம் தொடங்கியது. இடையில், கணவன் இறந்தாலோ, பெண்ணுக்கு வேறு இளைஞனுடன் தொடர்பு ஏற்பட்டு விலக நினைத்தாலோ, மாப்பிள்ளை வீட்டார் தாம் பெற்ற உன்குவா பணத்தை திரும்ப வழங்க வேண்டும்.

விவாகரத்து அல்லது மறுமணம்:

ஒரு பெண் தன்னுடைய கணவனை விவாகரத்து செய்ய இயலும். ஆனால், கணவன் தன்னுடைய முந்தைய பாவங்களை தவறுகளை மன்னிக்க வேண்டினால், அந்தப் பெண் அவனுடன் வாழ்ந்தாக வேண்டும். அதே சமயம், ஓர் ஆண் தன்னுடைய மனைவி கடும் வார்த்தைகளை பேசும் நாக்கினை கொண்டவள், கொடும் நோயினால் தாக்கப்பட்டவள் அல்லது குழந்தை பெற்றுக்கொள்ளும் திறன் அற்றவள் எனில் தன்னுடைய மனைவியை விவாகரத்து செய்யலாம். மேலும், தன் முதல் மனைவி மூலம் பல குழந்தைகள் இருப்பினும், வேறொரு மணம் புரிய நேர்ந்தது எனில் முதல் மனைவிக்கு சொத்தில் 1/3 பங்கை வழங்க வேண்டும். கணவனை இழந்த அல்லது கணவனைப் பிரிந்த பெண்கள் பார்வதி அம்மனின் தோழிகளாகப் பார்க்கப்பட்டனர்.

பலதார மணம்:

பொதுவாக சமூகத்தில் ஒரு தார மணம் பின்பற்றப்பட்டது. ஆனால், அரச குடும்பத்தில் மட்டும் வாரிசுகளைக் கருத்தில் கொண்டு, பல தார மணம் அங்கீகரிக்கப்பட்டது.

கிருஷ்ணதேவராயரின் அவைப்புலவரான பெத்தண்ணாவின் மனுசரித்திரம் பலதாரமணத்தினை கடுமையாக கண்டிக்கிறது. அரசியல் காரணங்களுக்கான பலதார மணம் அங்கீகரிக்கப்பட்டாலும் அவர்களின் மனைவிகள் தனித்தன்மையோடு விளங்க அனுமதிக்கப்பட்டனர்.

கிருஷ்ணதேவராயரின் முதலமைச்சரான சாளுவ திம்மராசுவின் காலத்தில் திருமண வரிகள் உள்ளிட்டவை நீக்கப்பட்டு சீர்த்திருத்தப்பட்டன.



முதல் மாதம்
தையா...? சித்திரையா...?



திரு.கா.பாலகிருஷ்ணன்

முதல்வர் மற்றும் தாளாளர்

பாரதி பதின்ம மேனிலைப்பள்ளி

தற்போது கிரிகோரியன் நாட்காட்டியை அனைவரும் ஏற்றுக்கொண்டு ஜனவரி முதல் தேதியை ஆண்டின் முதல் நாளாகக் கடைபிடிக்கிறோம். இவ்வாண்டு அனைவரும் கடைபிடிக்கும் 'பொது ஆண்டு'. வங்கிகளும், பணம் வரவு, செலவு செய்கிறவர்களும் ஏப்ரல் முதல் தேதியை ஆண்டின் முதல் நாளாகவும், அவ்வாண்டை 'நிதி ஆண்டு' *(Financial Year)* என்றும் அழைக்கின்றனர். பள்ளிகள், கல்லூரிகளில் ஜூன் மாதத்தை முதல் மாதமாக் கொண்ட 'கல்வி ஆண்டு' *(Academic Year)* கடைபிடிக்கிறார்கள். எனவே பொது ஆண்டு அனைவருக்குமானது, செய்யும் தொழிலைப் பொறுத்து மற்றொரு ஆண்டு முறையையும் நாம் பயன்படுத்துகிறோம் அல்லவா? அதுபோல சமயம் சார்ந்த செயல்பாடுகளுக்கு சித்திரையை முதலாவதாகக் கொண்டும், விவசாயப் பணிகளுக்காக தையை முதலாவதாகவும் கொண்டனர்.

முதல் மாதம் தையா...? சித்திரையா...? எளிய விளக்கம்.

தமிழர் ஆண்டுக் கணக்கில் முதல் மாதமாக வருவது தையா? சித்திரையா? என்பதில் நீண்டகாலமாகவே விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. தையே முதல் மாதம் என்பதற்கு அதன் சார்பானவர்கள் பல தரவுகளையும், சித்திரையே முதல் மாதம் என்பதற்கு அதன் சார்பானவர்கள் பல தரவுகளையும் கொடுத்து வருகின்றனர். உண்மையில் எது என்பதைப் பார்க்கும் முன்னர் சில அடிப்படைச் செய்திகளைப் பார்ப்போம்.

நிலவு நாட்காட்டி (Lunar Calendar)

நிலவின் வளர்பிறை, தேய்பிறைகளை அடிப்படையாகக் கொண்டுக் கணக்கிடப்படுவது நிலவு நாட்காட்டி ஆகும். உலகின் மிகப்பழமையான நாள் கணக்கிடும் முறை இதுவாகும். பிரான்ஸ் நாட்டின் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வரையப்பட்ட பாறைஓவியங்களில் இதற்கான குறிப்புகள் கிடைக்கின்றன. தமிழ்நாட்டிலும் உசிலம்பட்டிக்கு அருகில் புலிப்புடவு எனும் குகையில் நிலவு நாட்காட்டி பாறைஓவியமாக வரையப்பட்டுள்ளது. ஒரு பௌர்ணமியிலிருந்து அடுத்த பௌர்ணமிவரை உள்ளது ஒரு மாதம். இது 29.5 நாள்களைக் கொண்டது. ஓர் ஆண்டின் 12 மாதங்களில் ஒருமாதம் 29 நாள்களாகவும், அடுத்த மாதம் 30 நாள்களாகவும் எடுத்துக் கொள்ளப்படும். மொத்தம் 29.5 x 12 = 354 நாள்களைக்கொண்டது ஒரு நிலவு ஆண்டு (Lunar Year). மாதம் என்ற பெயர் நிலவின் மற்றொரு பெயரான 'மதி'யிலிருந்து வந்தது.

சூரிய நாட்காட்டி (Solar Calendar)

சூரிய நகர்வை அடிப்படையாகக் கொண்டது சூரிய நாட்காட்டி (உண்மையில் சூரியன் நகரவில்லை பூமியிலிருந்து பார்க்கும்போது சூரியன் நகர்வதைப்போல தோன்றுகிறது). இதில் இரண்டுவகையான இயக்கங்கள் உண்டு. ஒன்று கிழக்கு, மேற்காக இயங்கும் இயக்கம். இரண்டாவது தெற்கு, வடக்காக நகர்வது. மறுபடியும் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் சூரியன் அவ்வாறு நகரவில்லை பூமி சூரியனை 23.5 பாகை சாய்ந்தவாறு சுற்றுவதால் அவ்வாறு தோன்றுகிறது. கிழக்கு, மேற்காக இயங்கும் இயக்கத்தில் சூரியனின் பாதை வட்டமாக இருக்குமல்லவா? ஒரு வட்டத்திற்கு 360 பாகை, இதைச் சுற்றி முடிக்க ஆகும் காலம் ஒரு நாள் இல்லையா? காலை சூரிய உதயத்திலிருந்து மறுநாள் சூரிய உதயம் வரை உள்ள காலம் ஒருநாள்.

சூரியன் விண்மீன்களின் நிலைத்த பின்னணியில் நகர்ந்து வருகிறது. ஒரு விண்மீன் அருகிலிருந்து நகர ஆரம்பித்த சூரியன் மீண்டும் அதே விண்மீன் அருகே வர ஆகும் காலம் ஓர் ஆண்டாகும். இதை உடு ஆண்டு (Sidereal Year) என்போம். இது 365.2563 நாள்களாகும். ஒரு வட்டத்திற்கு ஆரம்பப் புள்ளி இல்லை எனவே சூரியப் பாதையான வட்டத்தில் நாம் ஒரு புள்ளியை தேர்ந்தெடுக்க வேண்டும். ஆகாய நடுக்கோடும் (Celestial Equator), சூரியப்பாதையும் (Zodiac) வெட்டிக்கொள்ளும் இரு புள்ளிகளில் ஒரு புள்ளியைத் தேர்ந்தெடுத்து அங்கிருந்து கணக்கிடுகிறோம். இப்புள்ளி மேழ உடுக்கணத்தின் (Aries Constellation) மீது விழுகிறது. இப்புள்ளி வசந்தகால சமபகலிரவு நாள் (Vernal Equinox) ஆகும். சூரியன் மேழ இராசியில் இயங்கும் மாதம் 'சித்திரை'. (தற்போது மேழ விழு நகர்ந்துவிட்டது. அதனால் ஏற்பட்ட/ஏற்படும் விளைவுகளைத்

தனியாகக் காண்போம்). எனவே ஆண்டின் முதல் மாதம் சித்திரையே.

நிற்க...

சூரியனின் மற்றொரு நகர்வான கிடைமட்ட நகர்வை (Horizontal movement) கணிக்க ஆண்டு முழுவதும் சூரியன் உதிக்கும் புள்ளியைப் பார்க்க வேண்டும். சூரியன் உதிக்கும் புள்ளி ஒவ்வொரு நாளும் கிடைமட்டமாக நகர்ந்துக் கொண்டே வரும். அது தெற்கிலிருந்து வடக்கே நகர்வது வடசெலவு (உத்திராயணம்) என்றும், வடக்கிலிருந்து தெற்கே நகர்வது தென்செலவு (தட்சினாயணம்) எனவும் அழைக்கப்படுகிறது. வட செலவுக்கு ஆறு மாதங்கள், தென் செலவுக்கு ஆறு மாதங்கள் என்பது ஓர் ஆண்டின் கணக்காகும். பருவ காலங்கள் இதனடிப்படையில் அமைவதால் பருவ ஆண்டு (Tropical Year) எனவும் அழைக்கப்படுகிறது. இது 365.2422 நாள்களைக் கொண்டது. இவ்வாண்டுமுறை வடசெலவு (உத்திராயண) நாளிலிருந்து எண்ணப்படுகிறது. உத்திராயணம் ஆரம்பிப்பது தை மாதத்தில். எனவே ஆண்டின் முதல் மாதம் 'தை' யே. (வானியல்படி இதில் வேறுபாடு உண்டு அதைத் தனியே காண்போம்).

நிற்க...

உடு ஆண்டின் (Sidereal Year) முதல் மாதம் "சித்திரை", பருவ ஆண்டின் (Tropical Year) முதல் மாதம் "தை". இப்போது நமது கேள்விக்கு வருவோம்

'தமிழர்கள் சித்திரையை முதல் மாதமாகக் கொண்டனரா?, தையை முதல் மாதமாகக் கொண்டனரா?'


தற்போது கிரிகோரியன் நாட்காட்டியை அனைவரும் ஏற்றுக்கொண்டு ஜனவரி முதல் தேதியை ஆண்டின் முதல் நாளாகக் கடைபிடிக்கிறோம். இவ்வாண்டு அனைவரும் கடைபிடிக்கும் 'பொது ஆண்டு'. வங்கிகளும், பணம் வரவு, செலவு செய்கிறவர்களும் ஏப்ரல் முதல் தேதியை ஆண்டின் முதல் நாளாகவும், அவ்வாண்டை 'நிதி ஆண்டு' (Financial Year) என்றும் அழைக்கின்றனர். பள்ளிகள், கல்லூரிகளில் ஜூன் மாதத்தை முதல் மாதமாக் கொண்ட 'கல்வி ஆண்டு' (Academic Year) கடைபிடிக்கிறார்கள். எனவே பொது ஆண்டு அனைவருக்குமானது, செய்யும் தொழிலைப் பொறுத்து மற்றொரு ஆண்டு முறையையும் நாம் பயன்படுத்துகிறோம் அல்லவா? அதுபோல சமயம் சார்ந்த செயல்பாடுகளுக்கு சித்திரையை முதலாவதாகக் கொண்டும், விவசாயப் பணிகளுக்காக தையை முதலாவதாகவும் கொண்டனர்.

பயிர்த்தொழில் புரியும் விவசாயிகள் பொது ஆண்டுடன் விவசாயத்திற்கு அடிப்படையான பருவ ஆண்டைப் பயன்படுத்துவது இயல்புதானே! அதனால்தான் இரண்டு கருத்துக்களுக்கும் தரவுகள் கிடைக்கின்றன.

சித்திரை முதல் மாதம் என்பது வடமொழியினர் தமது மீது திணித்ததாகத் தையைக் கடைபிடிப்பவர்கள் கருதுகிறார்கள். அப்படியல்ல, சித்திரை மாதமும் தமிழர்களுக்கு உரியதுதான். சூரிய நாட்காட்டியில் மேழம் என்று பெயர் பெற்றிருந்த மாதம் சூரிய - சந்திர நாட்காட்டியில் சித்திரை என்ற பெயரால் அழைக்கப்படுகிறது, அவ்வளவே.

ஆக, சித்திரை முதல் நாள் பொது ஆண்டின் தொடக்கம். தை முதல் நாள் விவசாய ஆண்டின் தொடக்கம். இரண்டும் தமிழர்களுக்கு உரியதே.





முனைவர்.மகாத்மா.செல்வபாண்டியன்

சமண, பௌத்தவியல் ஆய்வாளர்

அரும்பாவூர்

“சோழர் கால வணிக நகரங்களும் சமண பவுத்த தடயங்களும்”

அரியலூர்

மாவட்டத்தை முன்வைத்து

முன்னுரை:

மாமன்னர் முதலாம் இராஜேந்திர சோழர் கி.பி. 1012 ம் ஆண்டில் சோழப் பேரரசின் அரசராக முடிசூட்டப் பெற்றார். கங்கை வெற்றிக்குப் பிறகு சோழப் பேரரசின் தலைநகரைத் தஞ்சாவூரிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்துக்கு மாற்றிட நடவடிக்கைகள் மேற்கொண்டார். புதிய தலைநகர் கி.பி. 1022 ம் ஆண்டில் உருவானது . இந்நகரமே சற்றொப்ப 250 ஆண்டுகளாக சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. இது கங்கை கொண்ட சோழீச்சுரம் உள்ளிட்ட பல கோவில்கள், அரண்மனைகள், மாளிகைகள், பெருந்தெருக்கள், படைவீடுகள், பெருவழிகள், சோழகங்கத்தால் விரிவாக்கப்பட்ட வேளாண் நிலங்கள் என அனைத்து வசதிகளையும் பெற்ற முழுமையான நகரமாக விளங்கியது.

முதலாம் இராஜேந்திரர் வணிகத்துக்குப் பெரும் முக்கியத்துவம் அளித்தார். நாடெங்கிலும் வணிக மையங்கள் /தலங்கள் உருவாயின. இவரது ஆட்சிக்காலத்தில் அயல்நாட்டு வணிகர்களும் உள்நாட்டு வணிகர்களும் பெரும் செல்வாக்கு பெற்றிருந்தனர். இராஜேந்திரரின் கடல் கடந்த நாடுகளின் மீதான பெரும் வெற்றிகள் வணிக வலைப்பின்னலை மேலும் விரிவாக்கின.

சமண பவுத்த சமயங்கள்

வட இந்தியப் பகுதியில் வைதீக பார்ப்பன சமயத்திற்கு எதிராக, சத்திரிய வகுப்பினரின் சமண பவுத்த சமயங்கள் உருவாயின. அவை வைசிய வகுப்பினருடனான கூட்டணியுடன் நாடெங்கும் பரவியதோடு, தமிழ்நாட்டிற்குள்ளும் வந்தன. இங்கு அரசு புரிந்த அரசர்கள் வணிகர்களுக்கு அளித்த ஆதரவின் காரணமாக இச்சமயங்கள் தழைத்துப் பெருகின. காலப்போக்கில் நிறுவன மயமாகிப் போன இச்சமயங்களுக்கு எதிரான தாக்குதல், புதிதாக உருவான அரசர் , பார்ப்பனர், வேளாளர் கூட்டணியிடமிருந்து வெளிப்பட்ட ‘ பக்தி இயக்கம் ’ எனும் பெயரில் முழுவீச்சில் செயற்பட்டது. இராணுவ ரீதியாகவும் வணிகரீதியாகவும் பலம் பொருந்திய அரசாகக் கட்டமைக்கப்பட்ட சோழப்பேரரசு இச்சமயங்களுக்குப் புத்துயிரூட்ட முயன்றது.

வணிகக் குழுக்கள்

சோழர் காலத்தில் அரியலூர் பகுதியில் பல்வேறு வணிகக்குழுக்கள் செயற்பட்டு வந்தன. இதனையே அறிஞர் முனைவர் இல. தியாகராஜன், “ இம்மாவட்டத்தில் சோழர் காலத்தில் பல வணிக நகரங்கள் தோன்றி வளர்ந்து பொருளாதார வளத்தை ஏற்படுத்தி உள்ளன. இந்நகரங்களில் சங்கரப்பாடியார் என்னும் எண்ணெய் வணிகர், சாலியர் என்னும் துணி நெசவு மற்றும் துணி உற்பத்தியில் ஈடுபட்டவர்கள், திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர், வளஞ்சியர், பதினெண் விஷயத்தார் போன்ற பன்னாட்டு வணிகக் குழுவினர் வாழ்ந்தனர். இத்தகைய நகரங்கள் மன்னர்கள் பெயரில் புரம் என்ற பின்னொட்டுடன் அழைக்கப்பட்டதைக் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இத்தகைய வணிக நகரங்கள் பேட்டை எனவும் அழைக்கப்பட்டன. பின்வரும் வணிக நகரங்கள் இருந்ததை.. கல்வெட்டுகள் வாயிலாக அறிய முடிகிறது. விக்கிரம சோழபுரம்

(விக்கிர மங்கலம்), மதுராந்தகபுரம் (செட்டித் திருக்கோணம்/ பெரிய திருக்கோணம்), இராஜகம்பீரபுரம் (இராயம்புரம்) ஜெயங்கொண்ட சோழபுரம்/ பட்டணம், இளமை நாயகன் பேட்டை, வினையமாநகரம் (சின்ன வளையம், பெரிய வளையம்) சென்னிவனம் பேட்டை, விறையான அகளங்கபுரம் (பெரிய மறை) கொல்லாபுரம், அவனிகந்தர்ப்பபுரம் (கீழையூர்)' குந்தவைபுரம் என விளக்குகிறார். (டாக்டர் இல. தியாகராஜ. 2015 :9, 2017: 10)

இந்நகரங்கள் படை வீரர்களால் பாதுகாக்கப்பட்டன. பார்ப்பனர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட பிரமதேயங்கள் மற்றும் தேவதானச் சிற்றூர்களிலும் வணிகர்கள் வாழ்ந்து வந்தனர். வணிகர்கள் வாழ்ந்த தெருக்கள் பெருந்தெருக்கள் என்றழைக்கப்பட்டன. திருமழபாடியில் வைத்தியநாதப் பெருந்தெரு, ஜினசிந்தாமணிப் பெருந்தெரு, ஐய்யபொழில் பெருந்தெரு ஆகியனவும் கங்கைகொண்ட சோழபுரத்தில் திருபுவனமாதேவிப் பேரங்காடி எனும் வணிகப் பெருந்தெருவும் இருந்ததை கல்வெட்டுகள் கூறும். மூன்றாம் இராஜராஜன் காலத்தில் காமரசவல்லி சதுர்வேதிமங்கலத்தில் திருச்சிற்றம்பலப் பெருந்தெரு, ஜினசிந்தாமணிப் பெருந்தெரு ஆகிய பெருந்தெருக்கள் இருந்தன. ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலத்தில் மருவயர் குழலிப் பெருந்தெரு இருந்தது. திருமழப்பாடிக்கு 'ஜீனசிந்ததாமணி நல்லூர்' எனும் மற்றொரு பெயர் இருந்ததை அவ்வூர்க் கல்வெட்டு உரைக்கிறது.

இவ் வணிக மையங்களில் சமண பவுத்தப் பள்ளிகள் அமைக்கப்பட்டிருந்தன. தமிழகத்தில் கண்டறியப்பட்டுள்ள பெரும்பாலான சமண பவுத்தத் தடயங்கள் இத்தகைய வணிக நகரங்களிலேயே கிடைத்துள்ளன.

வணிகக் குழுக்கள் அமைத்த – பராமரித்த சமண/ பவுத்தப் பள்ளிகளைப் பற்றிய குறிப்புகள் கல்வெட்டுகளில் காணக் கிடைக்கின்றன. இவையன்றியும் சைவ, வைணவக் கோயில்களையும் இக்குழுக்கள் கட்டித் தந்ததையும், பராமரித்து வந்ததையும் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. (டாக்டர் இல. தியாகராஜன். 17.11.2016)

<u>சமண பௌத்த தடயங்கள்</u>

ஒரு காலத்தில் தமிழகத்தில் பெரும் செல்வாக்கு பெற்று விளங்கிய சமண பௌத்த சமயங்கள் சில தடயங்களை மட்டுமே விட்டு விட்டு மறைந்து போனது வரலாற்றின் நகைமுரண்தான் போலும்.

பல்வேறு தொல்லியல், வரலாற்றுச் சிறப்புகள் நிறைந்த அரியலூர் மாவட்டத்தில் சமண பௌத்த சமயத் தடயங்கள் இன்றும் அவற்றின் இருப்பை உணர்த்தி நிற்கின்றன.

<u>கல்வெட்டுகள்</u>

இம்மாவட்டக் கல்வெட்டுகள் குறிப்பிடும், 'ஜின சிந்தாமணி பெருந்தெரு (திருமழபாடி), 'தீனசிந்தாமணிப் பெருந்தெரு', 'மகாபோதி புத்தர்' பற்றிய குறிப்பு (காமரசவல்லி) ஆகியன சமண பௌத்த சமயப்பரவலின் சான்றுகளாகும்.

<u>அ) சமணத் தடயங்கள்</u>

அரியலூர் மாவட்டத்தில் உள்ள சமணத் தடயங்களாக இங்கு கூறப்பட்டுள்ள தனிச்சிற்பங்கள், கல்வெட்டுச்செய்திகள் ஆகியவற்றைச் சுட்டலாம்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள சமணத் தடயங்களாக அறிஞர் மயிலை சீனி வேங்கடசாமி பின் வருவனவற்றைச் சுட்டுகிறார்.

<u>தனிச்சிற்பங்கள்:</u>

1) அம்பாபுரம் : இக்கிராமத்துக்கு விக்ரமம் எனும் பெயரும் உண்டு. உடையார் பாளையம் தாலுகாவில் உடையார் பாளையத்திலிருந்து தென்மேற்கில் 11 மைலில் உள்ளது. இங்குச் சில சமண உருவங்கள் இருக்கின்றன.

2) ஜயங்கொண்ட சோழபுரம் : உடையார் பாளையம் தாலுகா உடையார் பாளையத்திலிருந்து வடமேற்கே 5 மைலில் உள்ளது. இங்கு ஏரிக்கரையில் ஒன்றும், ஒரு தெருவில் ஒன்றும் ஆக இரண்டு சமணத் திருவுருவங்கள் உள்ளன. ஏரிக்கரையிலிருக்கிற திருவுருவத்திற்கு இந்நகர மக்கள் ஆண்டுக்கு ஒரு முறை பூசை செய்திருக்கிறார்கள்.

3) வண்ணம் : வண்ணம் என்று கூறுவர். உடையார் பாளையத்துக்குத் தென்மேற்கில் 19 மைலில் உள்ளது. கீழப்பழூருக்குத் தெற்கில் 2 மைலில் உள்ளது. இங்கு ஒரு சமணத் திருவுருவம் காணப்படுகிறது. " (மயிலை சீனி. வேங்கடசாமி, 2010: 108–109)

அம்பாபுரத்தில் சில சமண உருவங்கள் இருப்பதாக மயிலையார் குறிப்பிடுவது விக்கிரமங்கலத்திலுள்ள இரு பௌத்தச் சிற்பங்களாகலாம். ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ஊருக்குள் இருப்பதாகக் கூறப்படும் திருவுருவம் நீதி மன்றத்துக்குச் செல்லும் சாலையிலுள்ள பௌத்தச் சிற்பமாகலாம். இவ்வூர் ஏரிக்கரையில் இருக்கும் சமணத் திருவுருவம் பின்னாட்களில் யாதவர் தெருவில் வைக்கப்பட்டிருந்தது. வண்ணத்தில் இருப்பதாகச் சுட்டும் சமணத் திருவுருவம் சாத்தமங்கலம் (அ) அயன்சுத்தமல்லியில் கண்டறியப்பட்ட தீர்த்தங்கரர் சிற்பமாகலாம்.

இம்மாவட்டத்தில் சாத்தமங்கலம் (அ) அயன் சுத்தமல்லி, பெரிய திருக்கோணம், மணகதி, ஜெயங்கொண்டம் ஆகிய ஊர்களில் தீர்த்தங்கரர் சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. பெரம்பலூர் மாவட்டத்திலுள்ள கொட்டரை எனும் ஊரில் கண்டறியப்பட்ட ஒரு தீர்த்தங்கரர் சிற்பம், கங்கை கொண்ட சோழபுரம் அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இவை அனைத்தும் கி.பி. 10 – 12–ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

இம்மாவட்டத்தில் கண்டறியப்பட்டுளள் அனைத்து தீர்த்தங்கரர் சிற்பங்களும் அர்த்த பரியங்காசனக் கோலத்தில் (அமர்ந்த நிலை) உள்ளன. தீர்த்தங்கரர் தலைக்கு மேல் முக்குடை அழகுற அமைக்கப்பட்டுள்ள, அண்மையில் கண்டறியப்பட்டுள்ள ஓமாந்தூர் தீர்த்தங்கரர் சிற்பமும், கீழவங்காரம் தீர்த்தங்கரர் சிற்பமும் (திருச்சிராப்பள்ளி மாவட்டம்) வில்லிவாக்கம் தீர்த்தங்கரர் சிற்பமும் (சென்னை அருங்காட்சியகம்) (Dr.R.Krishnan & K. Lakshminarayanan, 2001 : 49) கொட்டரை

தீர்த்தங்கரர் சிற்பத்துடன் வடிவமைப்பில் பெரிதும் ஒத்துள்ளன.

- **சாத்தமங்கலம் (அ) அயன்சுத்தமல்லி தீர்த்தங்கரர்**

இவ்வூரில் சற்றொப்ப 4 அடி உயரமுள்ள தீர்த்தங்கரர் சிற்பம் கண்டறியப்பட்டுள்ளது. முகமும் கைகளும் சிதைந்துள்ளன. முக்குடையின் இருபுறமும் கொடிக்கருக்குகள் அழகாகக் காட்டப்பட்டுள்ளன.

- **பெரிய திருக்கோணம் தீர்த்தங்கரர்**

அய்யனார் கோவில் மானிய நிலத்தில் கண்டெடுக்கப்பட்ட தீர்த்தங்கரர் சிற்பம், இங்கு கிடைத்த புத்தர் சிற்பத்தை விட அளவில் சிறியதாக இருந்தது. இதனை ‘அசோகர் சிற்பம்’ என மக்கள் குறிப்பிடுகின்றனர். இச்சிற்பத்தை 20 ஆண்டுகளுக்கு முன் யாரோ எடுத்துச் சென்றுவிட்டனர் (க.ஆ. 28.08.2016, இராமசாமி, 60, பெரிய திருக்கோணம்)

அர்த்த பரியங்காசனத்தில் கைகளைத் தியான ஹஸ்தமாக வைத்த நிலையில் இந்த தீர்த்தங்கரர் சிற்பம் அமைக்கப்பட்டுள்ளது. முகமும் கைகளும் சிதைந்துள்ளன.

- **மணகதி தீர்த்தங்கரர்**

மணகதியில் உள்ள சிவன் கோவிலில் ஒரு ‘தீர்த்தங்கரர் சிற்பம் கண்டறியப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் முகம், பீடப்பகுதிகள் பெரிதும் சிதைந்துள்ளன.

- **ஜெயங்கொண்டம் தீர்த்தங்கரர்**

ஜெயங்கொண்டத்தில் யாதவர் தெருவில் இருந்த தீர்த்தங்கரர் சிற்பம், 1999–ம் ஆண்டு களவாடப்பட்டுவிட்டது. அதே ஆண்டில் தஞ்சாவூர் மாவட்டம் காவல்துறையால் மீட்கப்பட்டு கும்பகோணம் நீதிமன்றத்தில் கடந்த 25 ஆண்டுகளாக வைக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்ட தொல்லியல் அளவீட்டுத்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

- **கொட்டரை தீர்த்தங்கரர்**

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம் கொட்டரை கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட இச்சிற்பம் தற்போது கங்கை கொண்ட சோழபுரம் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. இச்சிற்பத்தின் முகமும் கைகளும் சிதைந்து போயுள்ளன. கொட்டரை தீர்த்தங்கரரின் சிற்பம் அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தின் வடிவமைப்பு தனித்துவமான முறையில் உள்ளது.

ஆ) பௌத்த தடயங்கள்

அரியலூர் மாவட்டத்தில் உள்ள பௌத்த தடயங்களாக இங்கு கண்டறியப்பட்ட தனிச்சிற்பங்களைச் சுட்டலாம்.

தனிச்சிற்பங்கள்

அறிஞர் மயிலையார், ‘பௌத்தமும் தமிழும் ’ எனும் தனது நூலில் அரியலூர் மாவட்டத்தில் உள்ள பௌத்த சிற்பங்களைப் பற்றி ஏனோ ஏதும் குறிப்பிடவில்லை.

இம்மாவட்டத்தில் இராயம்புரம், கீழக்கொளத்தூர் குழுமூர், சுத்தமல்லி, பெரிய திருக்கோணம், முத்துசேர்வைமடம் (அ) கொல்லாபுரம், விக்கிரமங்கலம், ஜெயங்கொண்டம்,

கங்கைகொண்ட சோழபுரம், பிள்ளைபாளையம் ஆகிய ஊர்களில் புத்தர் சிற்பங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவை கி.பி. 10 – 12ம் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும்.

இம்மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளஅனைத்து புத்தர் சிற்பங்களும் அமர்ந்த நிலையிலேயே உள்ளன. அர்த்த பத்மாசனக் கோலத்தில் அமர்ந்துள்ள புத்தரின் விழிகள் பாதி மூடியுள்ளன. புன்முறுவல் சிந்தும் இதழ்களும், நீள் செவிகளும் அழகுறச் செதுக்கப்பட்டுள்ளன. தலையில் சுருள் முடியும், ஞானமடைந்ததைக் குறிக்கும் தீச்சுடரும், (உஷ்ணிஸா) அழகிய ஆடை மடிப்புகளும் அழகு சேர்க்கின்றன. தியான ஹஸ்தத்தில் அமைக்கப்பட்டுள்ளன. கரங்கள் வலது உள்ளங்கையில் சக்கரம் செதுக்கப் பட்டுள்ளது. பொதுவாக அழைத்துச் சிற்பங்களிலும் நாசியும் கரங்களும் சிதைந்துள்ளன.

விக்கரமங்கலத்தில் உள்ள இரண்டு புத்தர் சிற்பங்களும் கீழக்கொளத்தூர், சுத்தமல்லி, புத்தர் சிற்பங்களும் சிம்மாசனத்துடன் அமைக்கப்பட்டுள்ளன. விக்கிரமங்கலத்தில் உள்ள வடபுற புத்தர் சிற்பத்தின் தீச்சுடர் உடைந்து போயுள்ளது. பிள்ளைபாளையம் புத்தர் சிற்பம், தலை முதல் இடுப்பு வரை மட்டுமே உள்ளது. இடுப்புப்பகுதி சிதைந்து போயுள்ளது.

- **<u>அரியலூர் புத்தூர் புத்தர்</u>**

அரியலூரில் கண்டெடுக்கப்பட்ட இச்சிற்பம் தற்போது கங்கை கொண்ட சோழபுரம் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. புத்தரின் இடது தொடைப்பகுதி உடைந்து போயுள்ளது. முகமும் கைகளும் சிதைந்துள்ளன.

- **<u>இராயம்புரம் புத்தர்</u>**

இராயம்புரத்திலிருந்து ஆதி குடிக்காடு செல்லும் வழியில் ஏரிக்கரையில் உள்ள ஆல மரத்தின் அடியில் ஒரு புத்தர் சிற்பம் இருந்தது 50 ஆண்டுகளுக்கு முன்னர் இவ்வூரைச் சேர்ந்த மணியக்காரர் செல்லமுத்து எனும் பெருமகனார், அவ்விடத்தில் சுண்ணாம்புக்கல் மேடை அமைத்து இந்த புத்தர் சிற்பத்தை இருத்தினார். தந்தை பெரியாரை அழைத்து வந்து திறக்கச் செய்தார். அப்பெருமகனார் வாழும் வரை நாள்தோறும் காலை மாலை வேளைகளில் அச்சிற்பத்தின் அருகில் வந்து அமர்ந்திருப்பார். வயதாகி நோயுற்று அவர் மறைந்தார். 15 ஆண்டுகளுக்கு முன்னர் அச்சிற்பத்தின் தலை உடைந்து போய். அருகிலேயே கிடந்தது. பின்னர் அது காணமற்போனது . 10 ஆண்டுகளுக்கு முன்னர் புத்தரின் உடலும் காணாமற் போனது. (க. ஆ. 28.08.2016 , செந்தில், 35 இராயம்புரம்) தற்போது சிதைந்த தளம் மட்டும் முட்புதர்கள் மண்டிக் காணப்படுகிறது.

- **<u>கீழக்கொளத்தூர் புத்தர்</u>**

சிம்மாதனம் மற்றும் மூன்று சிம்மங்கள் பொறிக்கப்பட்ட உயர்ந்த இருக்கையுடனான இச்சிற்பம் அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் வைக்கப்பட்டிருந்தது. பின்னர் கங்கைகொண்ட சோழபுரம் அரசு அருங்காட்சியகத்திற்கு கொண்டு வரப்பட்டது. இச்சிற்பத்தின் முகமும் கைகளும் பெரிதும்

சிதைந்து போயுள்ளன. தொடைப்பகுதி உடைந்து போயுள்ளது.

- **சுத்தமல்லி புத்தர்**

விக்கிரமங்கலம் அருகே உள்ள சுத்தமல்லி எனும் ஊரில் கண்டறியப்பட்ட புத்தர் சிற்பம், தற்போது சென்னை எழும்பூர் அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. சிம்மாசனம், இருபுறமும் சாமரசம் வீசும் ஆடவர்கள், பீடத்தில் சிம்மங்கள் ஆகியவற்றுடன் இச்சிற்பம் அமைந்துள்ளது.

- **குழுமூர் புத்தர்**

பேராசிரியர் பழமலையின் வீட்டுப் புழக்கடையில் இச்சிற்பம் உள்ளது. 'புத்தர் சிற்பம் இருக்கும் ஊரே முழுமை பெற்ற ஊர்' எனவும் (நடராஜ பிள்ளை, 88, ஆ, விஸ்வநாதன் , 43, ஆ) பெரிய கிராமங்களில் தான் இப்படி புத்தர் செல இருக்கும் '' எனவும் (த. பழமலை, 1988 :53) கூறுகின்றனர். " கெட்ட ஆவிகள் நெருங்காது , புத்தர் உள்ள இந்த ஊரில் குழந்தைகளைத் தூளியில் போடலாம். நிம்மதியாகத் தூங்கும். புத்தர் நல்லதுதான் செய்வார் . (நடராஜபிள்ளை , 88, ஆண் .24.06.2006) எனவும் குறிப்பிடுகின்றனர். 2011–ம் ஆண்டில் இச்சிற்பத்தின் தலை திருடு போய்விட்டது.

- **பெரிய திருக்கோணம் புத்தர்**

50 ஆண்டுகளுக்கு முன்னர் ஊருக்கு மேற்கே உள்ள அய்யனார் கோவில் மானிய நிலத்தில் உள்ள கள்ளி அடைப்பில் ஒரு புத்தர் சிற்பமும் ஒரு தீர்த்தங்கரர் சிற்பமும் தலை குப்புறக் கிடந்த நிலையில் கண்டறியப்பட்டன. புத்தர் சிற்பத்தை ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளி வளாகத்திற்குக் கொண்டு சென்று சிமெண்ட் மேடை அமைத்து (கட்டப்பட்ட நாள் 17.12.2008) அதில் இருத்தியுள்ளனர். இச்சிற்பத்தின் நாசியும் கைகளும் சிதைந்துள்ளன.

- **முத்து சேர்வை மடம் (அ) கொல்லாபுரம் புத்தர்**

முத்துசேர்வை மடத்தில் கண்டறியப்பட்ட இச்சிற்பம் தற்போது புதுக்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் உள்ளது. நாசியும் கைகளும் சிதைந்து போயுள்ளன.

- **விக்கிரமங்கலம் புத்தர்கள்**

விக்கிரமங்கலம் கைகாட்டியிலிருந்து முத்துவான்சேரி செல்லும் வழியில் உள்ள விக்கிரமங்கலம் எனும் ஊரின் தொடக்கத்திலேயே சாலையின் தென்புறத்தில் உயர்ந்த மேடையில் இரு புத்தர் சிற்பங்கள் இருத்தப்பட்டுள்ளன. இவற்றை 'கொடுத்தவன் வாங்குனவன் சிலை ' என ஊர்மக்கள் குறிப்பிடுகின்றனர். கடன் கொடுத்தவர் துயரார்ந்த முகக் குறியோடும், பெற்றவர் மகிழ்ச்சியான முகக் குறியோடும் இருப்பதாகவும் கூறுகின்றனர். அறுபது ஆண்டுகளுக்கு முன்னர் சிவன் கோவில் அருகே கிடந்த இச்சிற்பங்கள் கண்டறியப்பட்டன. நல்லோர் சிலரின் முயற்சியால் மேடை எழுப்பப்பட்டு, கிழக்கு நோக்கி இந்த புத்தர் சிற்பங்கள் இருத்தப்பட்டன.

(க. ஆ. 28.08.2016, இராமலிங்கம், 60, விக்கிரமங்கலம்)

<u>வடபுற புத்தர்</u> இப்பகுதியில் கிடைத்தவற்றுள் மிக அழகிய சிற்பம் இதுவேயாகும். முகமும்

உடலமைப்பும் பேரெழில் பொருந்திய வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

<u>தென்புற புத்தர்</u> சிம்மாதனத்தின் மேற்பகுதி சிதைந்துள்ளது. எனவே, தீச்சுடர் அடங்கிய சிம்மாதனத்தின் மேற்பகுதி முற்றிலுமாக சிதைந்துள்ளது.

- <u>ஜெயங்கொண்டம் புத்தர்</u>

நீதிமன்றத்துக்குச் செல்லும் வழியில் இச்சிற்பம் உயரமான மேடையில் இருத்தப்பட்டுள்ளது. நாசி சிதைந்துள்ளது. தலைக்குப்பின் திருவாசியென மணிச்சரங்கள், போதிமரம், வெண்கொற்றக்குடை ஆகியன அமைக்கப்பட்டுள்ளன. குடையும் போதிமரமும் அமைந்த இச்சிற்பம் அழகும் தனித்தன்மையும் பொருந்திய அபூர்வமான சிற்பமாகும்.

- <u>வலங்கைமான் புத்தூர் புத்தர்</u>

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் புத்தூரில் கண்டெடுக்கப்பட்ட இச்சிற்பம் தற்போது கங்கைகொண்ட சோழபுரம் அரசு அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அருங்காட்சியகப் பதிவேடுகளில் கங்கைகொண்ட சோழபுரம் எனப் பிழையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சிற்பமே, தமிழ்நாட்டில் இதுவரை கண்டறியப்பட்டுள்ள புத்தர்களில் அளவில் சிறியவராகலாம்.

அருகாமை மாவட்டங்களான பெரம்பலூர் , கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் பரவலாகக் காணக்கிடைக்கும் சமண பௌத்த தடயங்கள் இப்பகுதியில் இச்சமயங்களின் பரவலை உணர்த்துகின்றன. இம்மாவட்டத்தில் காணப்படும் பழமையான சைவ, வைணவக் கோயில்களும் சமண, பௌத்தத் தடயங்களும் சோழப் பேரரசின், சைவ, சமய நோக்கையும் சமயப்பொறையையும் எடுத்துக் காட்டும் சான்றுகளாகத் திகழ்கின்றன. அடுத்து வந்த விஜயநகர ஆட்சியில் சமண பௌத்த மதங்கள் முற்றிலுமாக செல்வாக்கினை இழந்தன. ஆயினும் தமிழகத்தில் விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்களிலுள்ள இன்றைக்கும் வழிபாட்டிலுள்ள சமணக் கோயில்கள், மடங்கள், அப்பகுதிகளில் வாழும் தமிழ்ச் சமணர்கள் எனச் சமண சமயம் தமிழகத்தில் தன் இருப்பைத் தக்க வைத்துக் கொண்டது.

“தமிழ் நாட்டில் செழிக்கத் தொடங்கிய சமணம், புத்தம் இரண்டில், சைவ, வைணவ சமயங்களின் வலிய எதிர்ப்பிற்குப் பின்னரும் சமணம் தொடர்ந்து வளர்நிலையில் இருந்தமைக்கு, அது வணிக மக்களின் சமயமாக இருந்தமை ஒரு முக்கிய காரணமாகும் ” (இரா. கலைக்கோவன் : 2004) .

சோழர் காலத்தில் அரியலூர் பகதியில் பெரும் வணிக நகரங்களாகத் திகழ்ந்தவை இன்று அதன் தடயங்கள் ஏதுமின்றி சிற்றூர்களாகிவிட்டன. ஆனால் இந்நகரங்களில் கண்டறியப்பட்டுள்ள புத்தர் சிற்பங்களும் சமணத் தீர்த்தங்கரர்களின் சிற்பங்களும் இப்பகுதியில் சோழர் காலத்தில் செயற்பட்டு வந்த வணிகக்

குழுக்களின் செல்வாக்கினைப்

புலப்படுத்துகின்றன.

துணை நூற்பட்டியல்

1. தியாகராஜன்.இல. டாக்டர்,
2015
அரியலூர் மாவட்டக் கல்வெட்டுகள்
செப்பேடுகள், தொகுதி–1
காமரசவல்லி பதிப்பகம், அரியலூர்.

2. தியாகராஜன் இல.டாக்டர்
2017
அரியலூர் மாவட்டக் கல்வெட்டுகள்
செப்பேடுகள் தொகுதி – 2
காமரசவல்லி பதிப்பகம், அரியலூர்.

3. பழமலை. த.,
1988
சனங்களின் கதை,
தோழமை, குடந்தை

4. மயிலை, சீனி, வேங்கடசாமி
2010
சமணமும் தமிழும்,
ஸ்ரீசெண்பகா பதிப்பகம்,
சென்னை

5. மயிலை, சீனி, வேங்கடசாமி
2010
பௌத்தமும் தமிழும்,
ஸ்ரீசெண்பகா பதிப்பகம் ,சென்னை

6. Krishna. R. Dr.
2001
Iconography of Jain Images
Lakshmi Narayanan. K,
in the Government Museum Chennai,
The commissioner of Archeology and
Museums, Chennai- 8

இதழ்கள்

1. கலைக்கோவன். இரா.
2004
ஸர்புரக்குடிப்பள்ளி,
(கட்டுரை) வரலாறு. காம்
இணைய இதழ், டிச. 2004.

நேர்காணல்

வரலாற்று அறிஞர் டாக்டர் இல. தியாகராஜன், நாள் 17.11.2016.

ஒளிப்படங்கள் உதவி

1. டாக்டர் இல. தியாகராஜன், (சுத்தமல்லி, பெரிய திருக்கோணம் தீர்த்தங்கரர் சிற்பங்கள்)

2. முனைவர். பா. ஜம்புலிங்கம் (இராயம்புரம் புத்தர் சிற்பம்)

தகவலாளர்கள்

1. நடராஜபிள்ளை, 88, ஆண், குழுமூர்,
நாள் , 24.06.2006

2. ஆறுமுகம், 55, ஆண், குழுமூர், விவசாயம்,
நாள்: 17.03.2017

3. இராமசாமி, 60, ஆண், பெரியதிருக்கோணம்,
விவசாயம், நாள் : 28.08.2016


4. செந்தில், 35, ஆண், இராயம்புரம், விவசாயம்,
நாள் : 28.08.2016

5. இராமலிங்கம், 60, ஆண், விக்கிரமங்கலம்,
விவசாயம்,
நாள் : 28.08.2016




















ஜனவரி மாத புதிய தொல்லியல் கண்டுபிடிப்புகள்

தினமலர்

மதுரை பதிப்பு 02.01.2024

500 ஆண்டுகள் பழமையான கன்னட கல்வெட்டு கண்டுபிடிப்பு

தேனி, ஜன. 2–

தேனி மாவட்டம் சில்வார்பட்டி விநாயகர் கோயில் நிலவறையில் 500 ஆண்டுகள் பழமையான கி.பி., 16ம் நூற்றாண்டைச் சேர்ந்த கன்னடக் கல்வெட்டை தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

சில்வார்பட்டி அரசு மாதிரி மேல்நிலைப்பள்ளி பட்டதாரி ஆசிரியர் பாரதிராஜா. இவர் முதற்கட்ட தொல்லியல் ஆய்வுக்கான பயிற்சியில் பங்கேற்றார்.

சில்வார்பட்டியில் தொல்லியல் தடயங்களை தேடினார். அதில் அங்குள்ள விநாயகர் கோயில் நிலவறையில் உள்ள கன்னட கல்வெட்டை கண்டறிந்தார்.

இவரது தகவலின் ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவன தலைவர் ராஜகுரு தலைமையில், தொல்லியல் ஆய்வாளர்கள் நூர்சாகிபுரம் சிவக்குமார், ஆசிரியர் பயிற்றுனர் முருகேசபாண்டியன், அருப்புக்கோட்டை எஸ்.பி.கே., கல்லூரி வரலாற்றுத்துறை பேராசிரியர் ராஜபாண்டி ஆகியோர் அக் கல்வெட்டை ஆய்வு செய்தனர்.

ராஜகுரு கூறியதாவது:

இக்கோயில் நிலவறையில் 3 அடி உயரம், இரண்டரை அடி அகலம், அரை அடி தடிமன் உள்ள ஒரு பலகைக் கல் உள்ளது.

இது அங்குள்ள சுவருடன் வைத்து பூசப்பட்டுள்ளது. இக்கல்லின் மேற்பகுதியில் சிவலிங்கம், சூரியன், சந்திரன் கோட்டுருவங்களாக வெட்டப்பட்டு உள்ளன.

அதன் கீழே 4 வரிகளில் கன்னட மொழி எழுத்துக்களால் ஆன கல்வெட்டு உள்ளது.

இதனை மத்திய தொல்லியல் துறை சென்னைப்பிரிவு கல்வெட்டு ஆய்வாளர் யேசுபாபு படித்து விபரங்களை அளித்தார்.

இதில் கன்னடத்தில் ஸ்ரீஹாலபையா கௌடா கிராம வேல்பரார பட்டா' என உள்ளதாகவும், இக் கல்வெட்டின் எழுத்து அமைந்திருப்பதை கொண்டு இது கி.பி., 16ம் நூற்றாண்டைச் சேர்ந்தது என தெரிவித்தார். ஸ்ரீஹாலபையா கவுண்டரின் ஆளுமைக்குள் உள்ள கிராமத்தின் எல்லைக்கல்', என்பது இதன் பொருள். அப்போதைய ஆட்சியாளராக (குறுநில மன்னர்) ஸ்ரீஹாலபைய கவுண்டர் இருந்திருக்கலாம்.

இவர் விஜயநகர மன்னர்கள் காலத்தில் கர்நாடகாவில் இருந்து சில்வார்பட்டி பகுதியில் குடியேறியவராக மன்னர்களின் செப்பேடுகள் மூலம் அறியமுடிகிறது.

அப்போது இவ்வூரில் புதிதாகக் குடியேறியவர்கள் கோயில்களை புனரமைத்து வழிபட்டு வருவதாக கோயில் நிர்வாகி கணேசன் தெரிவித்தார்.

இக்கோயிலும், சிற்பங்களும் விஜயநகர மன்னர் கால, கலை அமைப்பில் உள்ளதும், இக்கோயிலில் உள்ள தூண்களில் நின்ற நிலையிலான இரு துவாரபாலகர்களின் சிற்பங்கள் உள்ளதும் குறிப்பிடத்தக்கது', என்றார்.



தேனி மாவட்டம் சில்வார்பட்டி விநாயகர் கோயிலில் கண்டுபிடிக்கப்பட்ட கன்னட கல்வெட்டு.

இந்து தமிழ் திசை

தமிழால் இணைவோம்
INDHU TAMIZH THISAI - TAMIL DAILY
சென்னை பதிப்பு (CHENNAI) ● FRIDAY, JANUARY 26, 2024

கழுகுமலை வெட்டுவான் கோயில் பாதுகாக்கப்பட்ட பகுதியானது

தமிழக தொல்லியல் துறை அறிவிப்பு

● கோவில்பட்டி

கழுகுமலையில் உள்ள வெட்டுவான் கோயில், சமண சின்னங்கள் உள்ள மலை ஆகியவற்றைப் பாதுகாக்கப்பட்ட பகுதியாக தமிழக தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

தூத்துக்குடி மாவட்டம் கழுகுமலையில் உள்ள கழுகாசலமூர்த்தி கோயில் மிகவும் பிரசித்தி பெற்றது. மலையைக் குடைந்து அமைக்கப்பட்ட குடவரை கோயிலான இக்கோயில் முற்காலப் பாண்டியர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டது. இதேபோல, பாண்டியர் காலத்திலேயே கழுகுமலை மலை மீது சமணப்பள்ளி மற்றும்வெட்டுவான் கோயிலும் அமைக்கப்பட்டுள்ளது.

பெரிய மலைப்பாறையில் 7.50 மீட்டர் ஆழத்துக்கு சதுரமாக வெட்டியெடுத்து, நடுப்பகுதிபாறை கோயிலாக செதுக்கப்பட்டுள்ளது. இதை வெட்டுவான் கோயில் என்று அழைக்கின்றனர்.

இது எல்லோராவில் உள்ள கைலாசநாதர் கோயில் போன்று அமைந்துள்ளது. இத்தகைய கோயில், தமிழகத்திலேயே இது ஒன்றுதான் என்பது இதன் தனிச் சிறப்பாகும்.

வெட்டுவான் கோயில் மற்றும் சமண சின்னங்கள் தமிழக அரசின் தொல்லியல் துறை கட்டுப்பாட்டில், பாதுகாக்கப்பட்ட மரபுச் சின்னங்களாக இருந்து வருகின்றன. இந்நிலையில், கழுகுமலை மலைப் பகுதி முழுவதையும், தொல்லியல் துறையின் கீழ் பாதுகாக்கப்பட்ட நினைவுச் சின்னங்களாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

இந்நிலையில், தொல்லியல் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் டி.உதயசந்திரன், இணை இயக்குநர் ஆர்.சிவானந்தம் ஆகியோர் உத்தரவின்பேரில், தொல்லியல் துறை உதவிப் பொறியாளர் ராஜேஷ், வட்டாட்சியர் லெனின் மற்றும் அதிகாரிகள் கழுகுமலையில் ஆய்வு மேற்கொண்டனர்.

தொல்பொருள் தளங்களின் எல்லையிலிருந்து 300 மீட்டர் சுற்றளவில் உள்ள கனிமம் அல்லது பழங்கால மற்றும் வரலாற்று நினைவுச் சின்னங்கள், தொல்பொருள் தளங்கள் ஆகியவற்றை தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட பகுதியாக கருத வேண்டும். எனவே, கழுகுமலை பாறையின் எந்தப் பகுதியிலும் சுரங்கத்தை அனுமதிக்கக் கூடாது. இந்த மலையில் எந்த குவாரிக்கும் குத்தகை உரிமம் வழங்கப்படாது என்று தொல்லியல் துறை அறிவித்துள்ளது.

உலக பாரம்பரிய சின்னம்

இதுகுறித்து ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவன தலைவர் வே.ராஜகுரு கூறியதாவது: முற்காலப் பாண்டியர்களின் கலைப் பாணியில் கழுகுமலை வெட்டுவான்கோயில் மற்றும் சமணச்சிற்பங்கள் விளங்குகின்றன. மலையின் கிழக்குச் சரிவில் 100-க்கும் மேற்பட்ட சமணத் தீர்த்தங்கரர்களின் புடைப்புச் சிற்பங்கள் உள்ளன. இவை பாண்டிய மன்னன் பராந்தக நெடுஞ்சடையன் காலத்தில் செதுக்கப்பட்டவை. சிற்பங்களின் கீழ் அவற்றை உருவாக்கியவரின் பெயர் விவரங்கள் வட்டெழுத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. இங்கு சமணப் பள்ளியும் செயல்பட்டு வந்துள்ளது.

எல்லோரா கைலாசநாதர் கோயில் சிற்பங்களுக்கு முந்தைய காலத்திலேயே கழுகுமலையில் வெட்டுவான் கோயில், சமணர் சிற்பங்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. எனவே, இவற்றை உலகப் பாரம்பரியச் சின்னங்களாக அறிவிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.





கழுகுமலை மீதுள்ள சமணர் பள்ளி. (அடுத்த படம்) சிற்பங்களை ஆய்வுசெய்த தொல்லியல் துறையினர்.

உளுந்தூர்பேட்டை அருகே அங்கனூரில்

தமிழகத்தின் மிகத்தொன்மையான கொற்றவை சிற்பம் கண்டெடுப்பு

உளுந்தூர்பேட்டை, ஜன. 6: உளுந்தூர்பேட்டை அருகே அங்கனூர் கிராமத்தில் திருவண்ணாமலையைச் சேர்ந்த வரலாற்று ஆய்வாளர் ராஜ் பன்னீர் செல்வம் மற்றும் ஸ்ரீதர், தாமரை, குமரவேல், உதயராஜா, சுதாகர் ஆகியோர் அடங்கிய குழு பலகை கல்லில் காளி சிலை இருப்பதாகக் கிடைத்த தகவலின்பேரில் ஆய்வு மேற்கொண்டனர். அப்போது கிராமத்தின் மத்தியில் உள்ள குளத்தின் கரையில் சுமார் 5 அடி உயரமும், 3 அடி அகலமும் கொண்ட பலகை கல்லில் எட்டு கரங்களுடன் புடைப்பு சிற்பமாக கொற்றவை சிலையை கண்டறிந்தனர். அதில் தலையைத் தடித்த கரண்ட மகுடம் அலங்கரிக்க, நீள் வட்ட முகத்தில், இரு காதுகளிலும் குண்டலமும், கழுத்தில் ஆரம் போன்ற பட்டையான அணிகலனும், தோள் மற்றும் கைகளிலும் வளைகள் அணிந்து இருந்தது. கொற்றவையின் பின்புறம் வாகனமாக நீண்ட கொம்புகளுடன் அலங்கரிக்கப்பட்ட கலைமானுடன் கம்பீரமாக எருமை தலையின் மீது நின்றவாறு காட்சி தருகிறது. கொற்றவையின் இடையருகே வட்டெழுத்து கல்வெட்டு ஆங்காங்கே சிதைந்த நிலையில் இருந்தது. அதில் அன்கனூரைச் சேர்ந்த ஆறலை" என்பவர் இக்கொற்றவை படிமத்தைச் செய்து தந்த செய்தி இருந்தது. இக்கல்வெட்டு 5ம் நூற்றாண்டை சேர்ந்தது என மூத்த கல்வெட்டறிஞர் ராஜகோபால் சுப்பையா தெரிவித்தார். கொற்றவை வழிபாடு குறித்து சங்க இலக்கியங்களில் குறிப்பிட்டு இருந்தாலும், சிலை வடிவில் இது வரை ஆவணம் ஆகியுள்ள கொற்றவை சிற்பங்கள் யாவும் 6ம் நூற்றாண்டுக்கு பின்னான பல்லவர்கள் காலத்தை சேர்ந்தது. தமிழகத்தில் முதன் முறையாக பல்லவர்களுக்கு சற்று முந்திய காலகட்டத்தைச் சேர்ந்த கொற்றவை கிடைத்திருப்பது வரலாற்றுக்கு புதிய வரவாகும். இக்கொற்றவை சிற்பம் மூலம் அரசுருவாக்கம் முன்னரே நடுகல் வழிபாட்டுடன், தொல்தாய் தெய்வ வழிபாட்டின் நீட்சியான கொற்றவை வழிபாடும் அக்காலகட்டத்திலே சிலை வழிபாடாக எழுச்சியுற்று இருந்துள்ளது இதனால் அறியமுடிகிறது. இக்கொற்றவை இதுவரை தமிழகத்தில் ஆவணம் செய்யப்பட்டுள்ள கொற்றவைகளுள் தொன்மையானதாகும். 1600 வருடங்களாக இன்றும் அவ்வூரின் பெயர் அங்கனூர்" என்ற வழக்கில் உள்ளது தனிச் சிறப்பாகும்.



தினகரன்

மதுரை பதிப்பு 30.01.2024

காலங்கள் மாறினாலும் தொடரும் தான தர்மம்!

சங்க காலம் தொட்டே மன்னர்கள், வணிகர்கள், ஜமீன்தார்கள், மக்கள் என பலரும் தான தர்மங்களான அறச்செயல்களைச் செய்து வந்துள்ளனர். இதனை கல்வெட்டுகளாக, செப்பேடுகளாக பதிவு செய்தனர். இவை கோயில் திருப்பணிகள், மண்டபங்கள், சத்திரங்கள், நீர்நிலைகள், பாலங்கள், அன்னதானத்திற்கான நிலங்கள், மக்கள் பயன்படுத்தும் குடிநீர் கிணறுகள் என தொடர்கிறது. தமிழ்நாட்டில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்திலும் இத்தகைய கொடைகள் ஆட்சியாளர்களின் அனுமதியோடு தொடர்ந்திருக்கிறது. விருதுநகர் மாவட்டத்தில் இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டுள்ள வரலாற்று ஆய்வாளர் நூர்சாகிபுரம் சிவகுமாரிடம் பேசினோம்.



அவர் கூறியதாவது: கி.பி.18, 19, 20ம் நூற்றாண்டைச் சேர்ந்த தான தர்ம கல்வெட்டுகள் கோயில் சுவர், தூண்கள், தனிக்கற்கள், பாறைகள் போன்றவற்றில் எழுதப்பட்டுள்ளன. இதில் விருதுநகர் வெயிலுகந்த அம்மன் கோயில் திருச்சுற்று மதில் கட்டுவதற்கு பொதுமக்களிடம் பிடி அரிசி பெற்றுள்ள தகவல் தனித்துவம் பெறுகிறது. விருதுநகரில் பிடியரிசிப் பள்ளி போல் கோயில் சேவையிலும் பிடியரிசி திட்டம் கி.பி.1830ல் செயல்படுத்தப்பட்டுள்ளதை இது தெரிவிக்கிறது. பல கோயில் தானங்கள் பெண்களால் செய்யப்பட்டிருப்பதும் முக்கியம் பெறுகிறது.

விருதுநகர் வெயிலுகந்தம்மன் கோயில் மகாமண்டபத் தூண்களை காமாட்சி ஆயி, வள்ளியாயி, மூக்காயி அம்மாள் என பெண்களே அமைத்துக் கொடுத்துள்ளனர். கல்வெட்டில் தானம் தந்த பெண்ணின் பெயருடன் அவரது கணவர், தந்தை பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது. சுருக்கமான கல்வெட்டுகளாக, ஊர்ப்பெயர் இன்றியும் உள்ளது. ஒரு கல்வெட்டு மட்டுமே விருதுநகரை விருதுப்பட்டி என்கிறது.

செட்டிகுறிச்சியில் கி.பி. 1913ல் சங்குசாமி மடத்தை பாலகிருஷ்ணசாமிநாயக்கர், மகாராஜநாயக்கர், ராமசாமி நாயக்கர், லட்சுமணநாயக்கர் ஏற்படுத்தியுள்ளனர். இக்கோயில் குடவரை வாசலை ரங்கன்செட்டி உபயமாகச் செய்துள்ளார். கோவிலாங்குளத்தில் கிபி 1895ல் திருமால்நாயக்கர், சேசுரமக்கம்மாள் ஒரு மண்டபம் கட்டிக் கொடுத்துள்ளனர். பாலவநத்தம் கைலாசநாதர் கோயிலில் வாணியக்குட்டி செட்டியும் அவர் மகள் ஆனந்தவல்லி அழகும் ஒரு மண்டபம் கட்டியுள்ளனர். கிபி 18ம் நூற்றாண்டில், சூரனூர் கயிலாசநாதர் கோயிலில் சித்தம்பலமுதலியார் ஆறுகால் மண்டபம் கட்டியுள்ளார்.

முற்காலத்தில் நீர்நிலைகள் அமைத்துத் தருவதை புண்ணியமாகக் கருதி, அனைத்துத் தரப்பினரும் செய்துள்ளனர். கிபி 18ம் நூற்றாண்டளவில், பரளச்சி கண்மாயிலுள்ள மடையை அழகிச்சியாபிள்ளை என்பவர் நல்லபெருமாள் பிள்ளை அய்யன் என்பவரின் புண்ணியமாக அமைத்துள்ளார். இனாம்தார் ராமசாமி அய்யா, விருதுநகர் பகுதியில் 1914ம் ஆண்டு ஒரு கிணறு கட்டி வைத்துள்ளார். இத்தானங்களை குழுவாகவும், தனி நபராகவும் செய்துள்ளனர். நரிக்குடி உலகப்பன் சேருவைக்காரன், கூத்தனாகோட்டை, காக்கனூர் குளமும் ஓடை கொண்டு போனதை அழிவிலிருந்து மீட்டு, குளத்தையும், குடிகளையும் தனிமனிதராக உண்டு பண்ணியதும், குண்டுகுளத்தில் கருப்பணக்குடும்பன் என்பவர் தனி நபராக அவ்வூரில் ஒரு குளம் உருவாக்கியதும் அறியமுடிகிறது.

ஆங்கிலேயர் காலத்தில் சோழபுரத்தில் ஆங்கிலேய அரசால் பாலம் கட்டப்பட்டதற்கு வைக்கப்பட்ட கல்வெட்டு முதலில் தமிழிலும், பிறகு ஆங்கிலத்திலும் உள்ளது. கவர்மெண்டு, ரோடு, இஞ்சினீர் என ஆங்கிலச் சொற்கள் தமிழில் அப்படியே எழுதப்பட்டுள்ளன. ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழர்கள் பயன்படுத்த அவர்கள் செய்த ஏற்பாடாகவே இது உள்ளது. சேத்தூர் ஜமீந்தார் டைமலை திருவணாத சேவகப் பாண்டியத்தேவர் ஆதி புத்திரகொண்ட அய்யனார் கோயில் செல்லும் வழியில் 1927ல் பொதுமக்களுடன் இணைந்து ஒரு பாலம் கட்டியுள்ளார். பாலவநத்தத்தில் பெருமாள் ரெட்டியார் என்ற தனி நபர் ஒரு பாலத்தை உபயமாக செய்து கொடுத்துள்ளார்.

அறக்கொடைகள் செய்வது மிகப் பழங்காலம் முதல் தமிழ்நாட்டில் இருந்து வரும் வழக்கம். மன்னர்கள் காலத்தில் அவர்களும், வணிகம் சார்ந்தவர்களும், அரச அதிகாரத்தில் இருந்தவர்களும் பல அறக்கொடைகள் செய்து வந்துள்ளனர். இதன் மூலம் கோயில்களில் வழிபாடுகள் தொடர்ந்தன. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் சமூக அமைப்பில் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டன. எனினும் அவர்கள் ஆட்சியிலும் அறக்கொடைகள் தொடர்ந்து நடைபெற்றன என்பதற்கு விருதுநகர் மாவட்டத்தின் பல கல்வெட்டுகள் சான்று பகிர்கின்றன.

இவ்வாறு கூறினார்.





கல்வெட்டு



தினகரன்

மதுரை பதிப்பு 30.01.2024

தீர்த்தங்கரர் சிற்பம்...!

ராமநாதபுரம் மாவட்டம், கமுதிக்கு மிக அருகில் உள்ளது பசும்பொன். விடுதலைப்போராட்ட வீரரான முத்துராமலிங்கத்தேவரால் புகழ் பெற்ற இவ்வூரின் ஆவணப்பெயர் தவசிக்குறிச்சி. தவசி என்பது தவக்கோலத்தில் இருக்கும் சமணத் தீர்த்தங்கரர்களைக் குறிக்கும் சொல் ஆகும். தேவர் இல்லத்தின் பின் பகுதியில் மரத்தடியில் மண்ணில் பாதி புதைந்த நிலையில் இருந்த ஒரு சமண தீர்த்தங்கரர் சிற்பம் தற்போது மேடை அமைத்து பாதுகாக்கப்படுகிறது.

இச்சிற்பம் குறித்து ராமநாதபுரம் தொல்லியல் ஆய்வு நிறுவன தலைவர் வே.ராஜகுரு கூறும்போது, "அர்த்தபரியங்க ஆசனத்தில் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கும் இவர் 24ம் தீர்த்தங்கரரான மகாவீரர் ஆவார். இந்த சிற்பத்தில் அரைவட்டவடிவில் பிரபாவளி உள்ளது. தீர்த்தங்கரரின் இருபுறமும் இரு இயக்கியர் சாமரம் வீசியபடி உள்ளனர். தலையின் மேல் முக்குடை அமைப்பு காணப்படுகிறது. தேவர் இருந்தவரை ஒவ்வொரு ஆண்டும் தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று அவர் தலைமையில் ஊர்மக்கள் அனைவரும் இந்த தீர்த்தங்கரருக்கு வழிபாடு நடத்தியதும் நடந்துள்ளது" என்றார்.



தினகரன் 4/12

கள்ளக்குறிச்சி மாவட்டம் மணலூர்பேட்டை அருகே

அண்ணாமலையார் கோயிலுக்கு நிலம் தானம் வழங்கிய கல்வெட்டு கண்டெடுப்பு

விஜயநகர பேரரசு காலத்தை சேர்ந்தது

திருவண்ணாமலை, ஜன.10: திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் திருவிழா நடத்த, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நிலம் தானமாக வழங்கப்பட்ட விஜயநகர பேரரசு காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கள்ளக்குறிச்சி மாவட்டம், மணலூர்பேட்டை அடுத்த கடம்பூர் கிராமத்தில், திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலுக்கு தானமாக வழங்கப்பட்ட கல்வெட்டு இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், திருவண்ணாமலை மாவட்ட வரலாறு நடுவத்தின் செயலாளர் தாசில்தார் பாலமுருகன் மற்றும் சி.பழனிசாமி, சித்திங்கூர்ராஜா ஆகியோர், கடம்பூர் கிராமத்தில் நேரடி கள ஆய்வு நடத்தினர்.

அப்போது, கடம்பூர் கிராமத்தில் உள்ள ஸ்ரீவேம்பியம்மன் கோயில் எதிரில் உள்ள கற்பலகையில் விஜயநகர பேரரசின் சிரங்க மகாதேவர் காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டது. இது குறித்து, திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயலாளர் ச.பாலமுருகன் தெரிவித்ததாவது:

கடம்பூர் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டு சுமார் 8 அடி உயரமும், 3 அடி அகலமும் கொண்டது. முன்பக்கம் சூரியன் சந்திரன், திருவண்ணாமலை மலையை குறிக்கும் முக்கோண வடிவிலான சிற்பம், பெரிய அளவு சூலமும் உள்ளது. பின்பக்கம், 40 வரிகளில் கல்வெட்டு காணப்படுகிறது.

விஜயநகர அரசர் சிரங்கமகாதேவரின் 3ஆம் ஆண்டான கடந்த 1675ம் ஆண்டில் இக்கல்வெட்டு வெட்டப்பட்டுள்ளது. அதில், சிரங்கதேவமகாதேவர் உத்தரவுப்படி, செவ்வப்பநாயக்கர் தருமமாக வேட்டவலம் ஜமீனைச் சேர்ந்த தாண்டவவாணாதிராயர் திருவண்ணாமலை திருக்கோயிலுக்கு ஆவணி மாதம் மூலநட்சத்திரத்தின் போது, நடைபெறும் ஏழாம் நாள் திருவிழாவிற்கு உபயமாக முடியனூர்பற்றில் உள்ள கடம்பூர் கிராமத்தில் குறிப்பிட்ட நான்கு எல்லைக்குள் உள்ள நிலம் காணியாட்சியாக விடப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.


மேலும், இந்த நிலத்தை கைக்கொண்டு ஒவ்வொரு வருஷமும் வேட்டவலம் வாணாதிராயர் திருக்கோயில் திருவிழாவிற்கு பொன்னும் நெல்லும் அளித்து திருவிழாவை நடத்தி வர வேண்டும் என்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. இந்த தர்மத்திற்கு தீங்கு நினைப்பவர்கள் கங்கை கரையிலே காராம் பசுவை கொன்ற பாவத்திலே போகக்கடவார்கள் என்றும் ஓம்படைக் கிளவியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருவண்ணாமலையில் இருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் உள்ள கடம்பூர் கிராமத்து நிலத்தை, திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவில் திருவிழா நடத்த காணியாட்சியாக விட்ட செய்தியும், அந்த ஏற்பாட்டை வேட்டவலம் ஜமீன்தார் செய்து வர வேண்டும் என்ற செய்தியும் முக்கியத்துவம் பெற்றதாக கருதப்படுகிறது.

திருவண்ணாமலை கோயிலுக்கு நிலதானம் அளித்த கல்வெட்டுகள், திருவண்ணாமலையைச் சுற்றி 60க்கும் மேற்பட்ட ஊர்களில் கிடைத்து வருகின்றன. அதன் மூலம், திருவண்ணாமலை கோயிலும் ஊரும் எல்லா காலங்களிலும் சிறப்பும் முக்கியத்துவமும் பெற்றிருந்தது தெரியவருகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில் திருவிழா நடத்த, கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நிலம் தானமாக வழங்கப்பட்ட விஜயநகர பேரரசு காலத்தைச் சேர்ந்த கல்வெட்டு கண்டெடுக்கப்பட்டுள்ளது.



தினமலர்

வரலாற்றுத் தடம்

சிதைந்த கோயிலில் புதைந்திருக்கும் வரலாறு

கள்ளக்குறிச்சி மாவட்டம் கச்சிராயப்பாளையத்தில், பழமையான கச்சி வாதராஜப்பெருமாள் கோயில் உள்ளது. கோயிலை ஒட்டிய மலையில் 'கச்சிப்பெருமாள் திருமலை' என்ற கோயிலும் உள்ளது. மலைக்கோயிலுக்குச் செல்லும் வழியில், படிகளிலும் பாறைகளிலும் காணும் இடம் எங்கும் கல்வெட்டுகளாக உள்ளன.

கோயில் கருவறை, மண்டபம், கோயில் பின்புறச் சுவர்கள் என எங்கு பார்த்தாலும் கல்வெட்டுகள் நிறைந்திருக்கின்றன.

வௌவால் எச்சங்கள், புழுதி மண் படிந்த தரையை ஒதுக்கி விட்டுப் பார்த்தாலும், கற்தரையில் கல்வெட்டுகள் பனிச்சிடுகின்றன. கோயிலுக்கு எதிரில் இருந்த கோட்டை, போரில் இடித்துத் தரை மட்டமாக்கப்பட்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

பாண்டிய அரசன் மாறவர்மன் குலசேகரன் (கி.பி.1268–1311) காலத்தில் இந்தக் கோயில் எழுப்பப்பட்டதாகக் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதன்பிறகு விஜயநகர மன்னர்கள் காலத்திலும் கல்வெட்டுகள் வெட்டப்பட்டுள்ளன. பொப்பச்சியார் வசந்த நாயக்கர், வாசுதேவ நாயக்கர், கிருஷ்ணதேவ ராயர், அச்சுத தேவ ராயர், இராயப்ப நாயக்கர் உட்பட பல நாயக்க மன்னர்கள் காலத்தைச் சேர்ந்த இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கல்வெட்டுகள் பாறைகளிலும் கோயில் சுவர்களிலும் உள்ளன.

புதர்களால் மண்டிக்கிடக்கும் மலைக்கோயில்

கோயில் மண்டபத்தில் மண்ணை அகற்றியபோது தெரிந்த கல்வெட்டு

கோயில் சுவரில் உள்ள கல்வெட்டுகளில் ஒன்று.

இவ்வூர் பாண்டியர் காலத்தில் 'குலசேகர சதுர்வேதி மங்கலம்' என்று அழைக்கப்பட்டிருக்கிறது. 'கச்சி பெருமாள் பாளையம்' என்பதே கிருஷ்ணதேவராயர் காலத்தில் மருவி, கச்சிராயப்பாளையம் என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது.

உய்யக் கொண்டான், ஆண்டவர், தாயிலும் நல்லான், வேம்பி என நால்வர், இந்தக் கோயிலில் தினமும் பூசை செய்து ஆடிப் பாடியுள்ளனர். இந்த நால்வரும் திருவாமாத்தூர் செட்டியார் விண்ணவதீரர் பொன்னப் பிள்ளையிடம் இருந்து கோயிலுக்காக விலைக்கு வாங்கப்பட்டுள்ளனர்.

இக்கோயில் கல்வெட்டுகளைப் பற்றி மரு.அருண்குமார் என்பவர், 'வரலாற்றில் சுயனூர் (எ) கச்சிராயப்பாளையம்' என்ற நூல் எழுதியுள்ளார்.

ஒரு காலத்தில் அரசர்கள், ஆட்சியாளர்கள், விழாக்கள் என்று சிறப்புற்றிருந்த இந்த மலைக்கோயில், இன்று உடைந்தும் சிதைந்தும் வரலாற்றைத் தன்னுள் புதைத்துக்கொண்டு அமைதியாகக் காட்சியளிக்கிறது.



Chola-era stone inscription found near Trichy

Deepak.Karthik
@timesgroup.com

Trichy: A 10th-century Chola stone inscription was found in a temple at Rajalipatti village bordering Trichy and Pudukottai districts. The inscription gives details of boundaries of land belonging to a temple in the village.

A Tamilmani, a member of the Aatrupadai heritage group, spotted the inscription on the Rajalipatti-Patnapatti road and informed fellow archaeological enthusiasts.

A group of enthusiasts studied the inscription, which measures three feet in lenght and is a foot wide, at the Varadharaja Perumal temple. Only five lines engraved in Tamil script are readable. While redeveloping the temple about 15 years ago, the stone inscription was relocated from a nearby place and was used in the renovation work, said members of the group.

The inscription dating to the reign of Parantaka Chola I mentions that the present day's Rajalipatti was a part of 'Urathur Kootram', an administrative division of the Chola kingdom. They said Urathur Kootram should have covered present-day Kodumbalur, Mathur, Viralimalai, and Manapparai towns in Pudukottai and Trichy districts.

"The inscription mentions a Siva temple in the village but we could not trace that temple. Information about 'Pattudaiyar', a section of people engaged in offering pujas in Siva temples was also mentioned in the inscription," V Parthiban, founder of the Aatrupadai heritage group, said.

He said the Chandramouleeswarar temple, a Siva temple in the village, could be the temple mentioned in the inscription. "However, the temple was recently renovated in a modern architectural style. There is no epigraphic or architectural evidence to conclude that it is the temple mentioned in the inscription," Parthiban said.

An Ayyanar statue in the rare Utkudi asana (seated with left leg raised and right leg folded) and a statue of Jyestha, a Hindu goddess, were also spotted on the banks of the Pappankulam tank in the village. Both idols are still worshipped by people.

R Baskar

TIME CAPSULE: Chola-era stone inscription at Rajalipatti village near Trichy. An Ayyanar statue in rare Utkudi asana



வி.கைகாட்டி அருகே

பழங்கால அய்யனார் சிலை கண்டெடுப்பு

வி.கைகாட்டி, ஜன.30- வி.கைகாட்டி அருகே பழங்கால அய்யனார் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கள ஆய்வு

தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மாவட்டங்களில் அகழ்வாராய்ச்சி பணிகள் மற்றும் வரலாற்று ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் பண்டைய காலத்தை சேர்ந்த பல அரிய பொருட்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் அரியலூர் வரலாற்று ஆய்வு மையம், வரலாற்று ஆய்வாளர்கள் சங்கம் மற்றும் பாண்டிய நாடு பண்பாட்டு மையத்தை சேர்ந்த வரலாற்று ஆய்வாளர்கள், தொல்லியல் மற்றும் கல்வெட்டு ஆய்வாளர் மணியன் கலியமூர்த்தி தலைமையில், அரியலூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பல்வேறு பகுதிகளில் பண்டைய கால சிற்பங்கள் குறித்து மேற்பரப்பு கள ஆய்வு செய்து வருகின்றனர்.

அய்யனார் சிலை

இந்நிலையில், வி.கைகாட்டி அருகே பெரியதிருக்கோணம் கிராம பகுதியில் பழங்கால அய்யனார் சிலை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்த சிலை 5 அடி உயரமும், 2 அடி அகலமும் கொண்டதாக காணப்படுகிறது. மேலும் இந்த சிலையின் தலைப்பாகமானது, அடர்த்தியான ஜடாபார அமைப்புடனும், 2 காதுகளிலும் பத்ர குண்டலமும், கழுத்தில் ஆபரணமும் கொண்டதாக உள்ளது. மேலும் சிலையின் வலது கையில் செண்டை ஏந்திய நிலையில் காணப்படுகிறது.

பல்லவர் கால...

இதுகுறித்து ஆய்வாளர் ஸ்ரீதர் கூறுகையில், இதுவரை தமிழ்நாட்டில் கண்டெடுக்கப்பட்ட அய்யனார் சிலைகளில் இந்த சிலை வீராசன கோலத்தில் காணப்படுகிறது. இது மிகவும் அபூர்வமான ஒன்றாகும். இந்த சிலை கி.பி. 6 அல்லது கி.பி. 7-ம் நூற்றாண்டை சேர்ந்த பல்லவர் கால சிலையாக இருக்க வாய்ப்புள்ளது. மிகவும் சிதைந்த நிலையில் உள்ள இந்த சிலையை பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார். ஆய்வு பணியில், தொல்லியல் மற்றும் கல்வெட்டு ஆய்வாளர்கள் பூபதி, மதுரை வீரன், ஆசிரியர் வடிவேல், ஆடிட்டர்ராஜா மற்றும் திருவண்ணாமலைராஜா ஆகியோர் ஈடுபட்டனர்.

வி.கைகாட்டி அருகே கண்டெடுக்கப்பட்ட பழங்கால அய்யனார் சிலையை படத்தில் காணலாம்.

யானை தாக்கி விவசாயி சாவு

கிருஷ்ணகிரி, ஜன.30- கிருஷ்ணகிரி மாவட்டம், மகராஜகடையை சேர்ந்தவர் சாம்பசிவம் (வயது 55). விவசாயி. இவர் நேற்று காலை பூவகவுண்டன் ஏரி அருகிலுள்ள தனது விவசாய நிலத்திற்கு சென்றார். அப்போது அங்கு முட்புதரில் 2 யானைகள் பதுங்கி இருந்தன. அதில் ஒரு யானை திடீரென வெளியேறி சாம்பசிவத்தை தாக்கியது. இதில் பலத்த காயம் அடைந்த சாம்பசிவம் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.

சமூக சேவை, சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான
ஆளுநர் மாளிகை விருது அறிவிப்பு

● சென்னை

சமூக சேவை, சுற்றுச்சூழல் பாது காப்புக்கான விருதுகள் பெறும் நிறுவனங்கள், தனிநபர்கள் குறித்த அறிவிப்பை ஆளுநர் மாளிகை வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

'சமூக சேவை' மற்றும் 'சுற்றுச் சூழல் பாதுகாப்பு' ஆகிய பிரிவு களின்கீழ் விருது வழங்கப்படுவது குறித்த அறிவிப்பை, ஆளுநர் ஆர்.என்.ரவி கடந்த ஆண்டு ஜூன் 4-ம் தேதி வெளியிட்டார். விருது களுக்காக பெறப்பட்ட விண்ணப் பங்கள் ஓய்வுபெற்ற உயர் நீதி மன்ற நீதிபதி தலைமையில் அமைக்கப்பட்ட குழுவால் ஆய்வு செய்யப்பட்டு, அவர்கள் அளித்த பரிந்துரைகளின் அடிப்படையில், விருதுகள் வென்றவர்கள் அறிவிக் கப்படுகின்றனர்.

அதன்படி, 'சமூக சேவை' விருதை நிறுவனம் பிரிவில் நீலகிரி மாவட்டத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு சேவை செய்து வரும் ஊரக வளர்ச்சி அமைப்புக்கும், தனிநபர் பிரிவில் திருவண்ணாமலை ஜி.மதன் மோகன், சென்னை எம்.குபேந் திரன், தேனி என்.ரஞ்சித்குமார் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது.


சுற்றுச்சூழல் பாதுகாப்பு விருதை பொறுத்தவரை, நிறு வனம் பிரிவில், மதுரை மாவட்டம், பசுமை அமைதி காவலன் என்ற தொண்டு நிறுவனத்துக்கும் தனி நபர் பிரிவில், தருமபுரி ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர் ஜி.தாமோ தரன், திருநெல்வேலி சி.முத்து கிருஷ்ணன், விருதுநகர் வி.தலைமலை ஆகியோருக்கும் வழங்கப்படுகிறது. விருதுகள் பெறும் நிறுவனங்களுக்கு தலா ரூ.5 லட்சம், சான்றிதழும், தனிநபர் களுக்கு தலா ரூ.2 லட்சம் மற்றும் பாராட்டு சான்றிதழும் வழங்கப் படுகிறது.

ஜன.26-ம் தேதி ஆளுநர் மாளிகையில் நடைபெறும் குடி யரசு தின வரவேற்பு நிகழ்ச்சியில் ஆளுநர் ஆர்.என்.ரவியால் விருது கள் வழங்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

செல்வராஜ் மற்றும் அவரது மனைவி மனகாந்தி ஆகிய ...றும் ஆவணத்திற்கு ஒப்புதல் அளித்த வக்கீல் ராஜகுமா ...ரையும் போலீசார் நேற்று கைது செய்தனர். ... சென்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திருவண்ணாமலை அடுத்த ராந்தம் கிராமத்தில்
கி.பி. 7ம் நூற்றாண்டு நடுகல் கண்டெடுப்பு

பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தை சேர்ந்தது



▶ திருவண்ணாமலை அடுத்த ராந்தம் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ள கி.பி. 7ம் நூற்றாண்டை சேர்ந்த நடுகல்.

திருவண்ணாமலை, டிச.14: திருவண்ணாமலை அடுத்த ராந்தம் கிராமத்தில் கி.பி. 7ம் நூற்றாண்டு பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தை சேர்ந்த நடுகல் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

திருவண்ணாமலை அடுத்த ராந்தம் கிராமத்தில் நடுகற்கள் இருப்பதாக கிடைத்த தகவலின் பேரில், திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவத்தின் செயலர் ச.பால முருகன் மற்றும் ஆசிரியர் வையவன், மன்னார்சாமி, சி.பழனிசாமி, சிற்றிங்கூர் ராஜா ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அப்போது, ராந்தம் கிராமத்தின் பல்வேறு இடங்களில் 4 நடுகற்கள் கண்டெடுக்கப்பட்டன. கிராமத்தின் நடுவில் விநாயகர் கோயில் அருகில் புதைந்த நிலையில் கண்டறியப்பட்ட நடுகல்லை, வெளியே எடுத்து சீரமைத்து கல்வெட்டு படியெடுக்கப்பட்டது.

இக்கல்வெட்டை ஆய்வு செய்த தொல்லியல் ஆய்வாளர் சு.ராஜகோபால், இக்கல்வெட்டு பல்லவ மன்னன் நந்திவர்மன் காலத்தை சேர்ந்தது என்பதை உறுதி செய்துள்ளார். மேலும், இக்கல்வெட்டு வட்டெழுத்து தமிழில் உள்ளது என்றும், அதில் நந்திவர்மனின் 28வது ஆட்சியாண்டில் மண்டை குள நாட்டு மன்னர் உசவகள் மகன் சாத்தன் என்பவர் பூசலில் இறந்துபட்டான் என்று குறிப்பிடுகிறது என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இது குறித்து அவர் தெரிவித்திருப்பதாவது:

கல்வெட்டில் குறிப்பிடப்படும் நந்திவர்மன் என்பது, வட்டெழுத்து அமைவைக் கொண்டும் ஆட்சியாண்டைக்கொண்டும் 2ம் நந்தி வர்மன் (கி.பி. 759) காலத்தியதாக குறிக்கலாம். இதில், குறிப்பிட்டுள்ள மண்டை குள நாடு என்பது தற்போது போளூர் அருகே மண்ட குளத்தூர் என்று அழைக்கப்படும் ஊராகும்.

மேலும், கி.பி. 7, 8ம் நூற்றாண்டில் மண்டை குளநாட்டின் தலைநகராக இருந்துள்ளது. இந்த நாட்டுக்கு உட்பட்ட ராந்தம் பகுதியில் நடைபெற்ற கால்நடைகளைக் காக்கும் போரில், மண்டை குள நாட்டு மன்னர் உசவகள் மகன் சாத்தன் என்பவர் இறந்துள்ளார். அதன் நினைவாக, இக்கல் நடப்பட்டுள்ளது.

பொதுவாக மற்ற நடுகற்களில் காணப்படும் இறந்த போன வீரனின் உருவம் இந்த நடுகல்லில் இல்லை. எழுத்து மட்டுமே பொறிக்கப்பட்டுள்ளது. இவ்வூருக்கு அருகில் உள்ள சொரகுளத்தூர் கிராமத்தில் உள்ள நடுகல்லும், மண்டை குளநாட்டைச் சேர்ந்ததாகும்.

எனவே, மண்டை குள நாடு என்பது போளூர், திருவண்ணாமலைக்கு இடைப்பட்ட பகுதியாக அக்காலத்தில் இருந்துள்ளது. திருவண்ணாமலை பகுதியில், தற்போது கிடைத்துள்ள இந்த நடுகல் கல்வெட்டு மற்றும் அவ்வூரில் கிடைக்கும் கருப்பு, சிவப்பு பானை ஓடு ஆகிய வற்றை கொண்டு இப்பகுதி தொன்மையான பகுதி என்றும் தெரியவருகிறது. தமிழக வரலாற்றுக்கு முக்கிய பங்களிக்கும் இதுபோன்ற நடுகற்களை, அரசு ஆவணப்படுத்தி பாதுகாக்க வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்
வேலூர் • ஞாயிறு • ஜனவரி 28, 2024
சென்னை • வேலூர் • புதுச்சேரி • ஈரோடு • சேலம் • கோயம்புத்தூர் • திருச்சி • மதுரை • திருநெல்வேலி • நாகர்கோவில்
16 பக்கம் • ₹7 • மலர் 73 • இதழ் 144

ஜவ்வாதுமலையில் கரைகண்டீஸ்வரருக்கு தானம் விட்ட கல்வெட்டு கண்டெடுப்பு



ஜவ்வாதுமலையில் கண்டெடுக்கப்பட்ட கரைகண்டீஸ்வரருக்கு தானம் விட்ட கல்வெட்டு.

திருப்பத்தூர்,ஜன.28–

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசியர் மோகன்காந்தி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட கள ஆய்வில், கிபி.13ம் நூற்றாண்டை சேர்ந்த கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

இதுகுறித்து மோகன்காந்தி கூறிகையில், திருப்பத்தூர் மாவட்டத்துக்கு உட்பட்ட ஜவ்வாது மலை புங்கம்பட்டு நாடு கல்லாவூர் கிராமத்தில், கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அங்குள்ள மாரியம்மன் அருகே உள்ள வேப்பமரத்தடியில் 5 அடி உயரமும் 3.5 அடி அகலமும் கொண்ட பலகைக் கல்லின் இரு பக்கங்களிலும் 47 வரிகளில் கல்வெட்டு வாசகங்கள் எழுதப்பட்டுள்ளது.

பெரும்பள்ளி கிராமத்தில் உள்ள ஈசனுக்கு கரைகண்டீஸ்வரர் என்று இக்கல்வெட்டுக் கூறுகிறது. இக்கல்வெட்டின் தொடக்கமாக தூபகலசம், திரிசூலம், குத்துவிளக்கு ஆகிய மங்கலப் பொருட்களின் உருவத்தோடு காணப்படுகிறது.

மலையின் மேட்டுப்பகுதியில் இருந்து ஓடிவரும் நீர்ப்பெருக்கு மூன்று பெரிய கரைகளையுடைய ஏரியில் நீர்த்தேக்கப்படுகிறது. முக்கண் ஏரி என்பதன் பொருளாவது, முக்கண்ணன் என்றால் சிவபெருமானைக் குறிக்கும் என்ற சொல் புறநானூற்றில் 6வது பாடலில் இடம் பெற்றுள்ளது. சிவபெருமானின் பல பெயர்களில் முக்கண்ணன் என்பதும் ஒன்று. திருவண்ணாமலைக்கு அருகாமையில் ஜவ்வாதுமலை உள்ளதால், அண்ணாமலை என்ற சிவபெருமானின் மற்றொரு பெயரை இப்பகுதி மக்கள் மாற்றி வணங்குகின்றனர்.

மேலும் ஜவ்வாதுமலை பெரும்பள்ளி கிராமத்தில் உள்ள கரைகண்டீஸ்வரருக்கு உணவு படைப்பதற்காக 4 கலம் நெல்லும், ஏரியின் வடக்குப் பகுதியின் கிழ்ப்பக்கம் உள்ள புஞ்சை நிலத்தைத் தானமாக வழங்குவதை இக்கல்வெட்டுக் குறிக்கிறது.

மேலும் பெரும்பள்ளி உள்ளிட்ட 34 கிராமங்களை உள்ளடக்கிய திருப்பத்தூர் மாவட்டத்துக்கு உட்பட்ட 12 ஊர்களில் நவிரமலை என்கின்ற கல்வெட்டுகளை எங்கள் ஆய்வுக்குழுக் கண்டறிந்துள்ளது.

பெரும்பள்ளி கிராமத்தில் கிடைக்கும் கல்வெட்டில் கரைகண்டீஸ்வரர் என்ற பெயரைப் பிரித்துப் பார்த்தல் அவசியமாகிறது. கரை + கண்ட + ஈஸ்வரர் = நஞ்சு (விஷம்) + உண்ட கழுத்து + ஈஸ்வரர் என்று பொருள் கொள்ளலாம். எனவே சங்க காலத்தில் (கி.மு1) எடுத்துரைக்கப்பட்ட காரியுண்டிக் கடவுள் கி.பி 13ம் நூற்றாண்டில் கரைகண்டீஸவரர் என மருவி வழங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது. இதன் மூலம் நவிரமலை என்பது பருவதமலை அல்ல காரியுண்டிக் கடவுள் என்பது பருவதமலையில் உள்ள காளகண்டேஸ்வரர் அல்ல என்பதும், ஜவ்வாதுமலையும் பெரும்பள்ளியில் கோயில் கொண்டுள்ள கரைகண்டீஸ்வரரே காரியுண்டிக் கடவுள் ஆவர் என கருதலாம்.

பெரும்பள்ளி கிராமத்தில் உள்ள சிவன் கோயிலில் பழமையான தூண்கள், பல சிலைகள், நந்தி என சிதைந்து கிடப்பது இவ்வூரின் பழமையை நினைவுப்படுத்துகிறது. ஆகவே சங்க இலக்கிய நூல்களில் இடம் பெற்றுள்ள நவிரமலை, காரியுண்டி கடவுள் என்ற சொல் தொடர்ச்சியாக ஜவ்வாதுமலையில் கிடைப்பது சங்க பண்பாட்டை நினைவுப்படுத்துகிறது.

சங்க காலத்தில் ஜவ்வாது மலைக்கு வழங்கப்பட்ட நவிர மலை என்ற பெயர் மீண்டும் அந்த மலைக்கு சூட்ட வேண்டும் என தமிழக அரசுக்கு கோரிக்கை வைக்கிறோம் என்றார்.

மண்ணும் மக்களும்

பண்பாட்டு ஆய்வு மாத இதழ்

பிப்ரவரி–2024 இதழ்–02 தை–மாசி

